24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30ரூபா

சுடர் 34 | கதிர் 260 | ஆடி 31 ஆம் நாள் | வெள்ளிக்கிழமை 16 ஓகஸ்ட் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050

# சமத்துவம், சுயமரியாதை, ஆட்சி உரிமை
# இதுவே தமிழருக்கான ஐ.தே.கவின் தீர்வு!



## கட்சியின் நிலைப்பாட்டை சுமந்திரனிடம் நேற்று வெளிப்படுத்தினார் தலைமை அமைச்சர் ரணில்



வடமராட்சி, ஓகஸ்ட் 16

தமிழ் மக்கள் சமத்துவத்துடனும், சுயமரியாதையுடனும், தங்களுடைய விடயங்களைத் தாமே தீர்மானிக்கும் வகையிலான அதிகாரப்பகிர்வே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார் - இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஏபிரகாம் சுமந்திரன்.

19

## துறைமுகம் திறந்தால் போதாது மக்களை குடியமர்த்த வேண்டும்

*தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை இடித்துரைப்பு*

யாழ்ப்பாணம், ஓக. 16

மயிலிட்டி துறைமுகம் விடுக்கப்பட்டமை வரப்பிரசாதமாக இருந்தாலும், அந்தப் பகுதியைச் சேர்ந்த ஏனைய மக்களையும் குடியமர்த்த வேண்டும் என்று தெரிவித்தார் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா.'

மயிலிட்டி துறைமுகத் திறப்பு விழா

19

## கொலைக் கலாசாரத்துக்கா நீங்கள் வாக்களிப்பீர்கள்?

யாழில் வைத்துக் கேட்டார் ரணில்

யாழ்ப்பாணம், ஓக. 16

மகிந்த அரசு மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டுமா? அந்தப் பாதுகாப்பற்ற நிலமை உருவாகுவதற்கா நீங்கள் வாக்களிக்கப் போகிறீர்கள்? கொலை கலாசாரம் மீண்டும் தலைதூக்கக்கூடாது.

19

கொழும்பு அரசியலில் பரபரப்பு

## பெரமுன வேட்பாளர் கோத்தாவுக்கு ஆப்பு

*அமெரிக்கக் குடியுரிமையைத் துறந்தவர்களின் பிந்தைய பட்டியலிலும் அவரின் பெயர் இல்லை*

கொழும்பு, ஓக. 16

அமெரிக்கக் குடியுரிமையை இழந்த அல்லது துறந்தவர்கள் பற்றிய அமெரிக்க அரசின் பிந்திய அறி

19



## திறந்து வைக்கப்பட்டது மயிலிட்டி துறைமுகம்!

யாழ்ப்பாணம், ஓக. 16

மிக நீண்ட காலத்தின் பின்னர் சீரமைப்புச் செய்யப்பட்ட யாழ்ப்பாணம் மயிலிட்டி துறைமுகம் நேற்றுக் காலை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வால்

19

அனைத்துத் துறைகளிலும்

## இன்னும் ஐந்து வருடங்களில் வடக்கு அபிவிருத்தியடையும்

தலைமை அமைச்சர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 16

வடக்கு மாகாணம் இன்னமும் 5 வருடங்களில் அனைத்துத்துறைகளிலும் அபிவிருத்தி அடைந்த மாகா

19

## பாதுகாப்பு வலயங்களிலுள்ள கோவில்களை விடுவியுங்கள்

*நல்லூர் ஆதீனத்தில் நடந்த சந்திப்பின்போது தலைமை அமைச்சரிடம் மதகுருமார் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஓக. 16

இந்துக்கள் பரந்து வாழும் பகுதிகளிலும், உயர் பாதுகாப்பு வலயங்களிலும் இன்னமும் இந்துக் கோயில்கள் விடுவிக்கப்படாமலும், அழிவடைந்தும், பூசைகள் நடைபெறாம

19

## மடு அன்னையின் பெருவிழா நேற்று

மன்னார் மறைமாவட்டத்தின் புனித யாத்திரை தலமாக விளங்கும் மருதமடு அன்னையின் ஆவணிப் பெருவிழா பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று நடைபெற்றது. வழமைபோல் லட்சக்கணக்கான மக்கள் இந்தத் திருவிழாவில் கலந்து கொண்டனர்.

(தொடர்புடைய செய்தி பக்:14)



## ஒட்டுமொத்த தமிழர்களின் ஆதரவுடன் ஆட்சி மாற்றம்

ராஜபக்ச அணி நம்பிக்கை

கொழும்பு, ஓக. 16

வடக்கு - கிழக்கு உட்பட ஒட்டுமொத்த தமிழ் மக்களின் ஆதரவையும் பெற்று ஆட்சி மாற்றம் ஏற்படும். தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள் எவரும் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க

06

## மாகாணத் தேர்தலை நடத்தலாமா என ஆராய்வதற்கு 5 நீதியரசர்கள்

*23ஆம் திகதி பரிசீலனைகள் ஆரம்பம்*

கொழும்பு, ஓக. 16

எல்லை நிர்ணய அறிக்கை முன்வைக்கப்பட்டிராத சந்தர்ப்பத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதா என வியாக்கியானம் தருமாறு கோரி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்வைத்துள்ள விண்ணப்பத்தை விசாரிக்க ஐவர் கொண்ட நீதியரசர்கள் குழு பெயரிடப்பட்டுள்

19



வட்டி வீதத்தை குறைத்துள்ளோம்
கடன் தொகையை மேலும் மேலும் அதிகரித்துள்ளோம்!

DFCC தங்கவரம்

கரட் 24
ரூ. 50,000/-

கரட் 22
ரூ. 46,000/-

மாதாந்த வட்டி 1.4%

24 மணிநேர அழைப்பு சேவை 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி

# உங்கள் நட்சத்திரங்களுக்குரிய பொதுவான குணங்கள்



## மிருகசீரிடம்

ம்ருக என்றால் மான், சீர்ஷம் என்றால் சிரசு அல்லது தலை. தமிழின் ஆயுத எழுத்தான ஃ போல மூன்று நட்சத்திரங்கள் இதில் அடங்கும். மானின் தலை போலத் தோற்றமளிப்பதால் 'மிருகசீர்ஷம்' எனப் பெயர் பெற்றது.

எப்பொழுதும் இளமையாக இருப்பவர்கள், உற்சாக மாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பார்ககள். புத்திக் கூர்மை, அளவு கடந்த ஊக்கம், பேச்சுத்திறமை உள்ளவர்கள். அன்பு, நட்பு, பாசம் உள்ளவர்கள். தனக்கென ஒரு தனிவழியைத் தேர்ந்தெடுத்து நடப்பவர்கள். உணர்ச்சிவசப்படக் கூடியவர்கள். சுதந்திரமானவர்கள்.

**சிறப்பியல்புகள்**: மிருகசீரிட நட்சத்திரக்காரர்கள் எதிலும் துணிச்சலாகச் செயற்பட்டு வெற்றிகளை ஈட்டுவார்கள். தங்களின் தனிப்பட்ட சுதந்திரத்தில் மற்றவர்கள் தலையிடுவதைப் பொறுக்கமாட்டார்கள். வயதில் மூத்தவர்களுக்கு மிகுந்த மரியாதை தருவார்கள். பாடங்களில் ஆர்வம் அதிகமிருக்காது. உலக விடயங்களைக் கற்றுக் கொள்வதில் பேராவல் இருக்கும். சிலருக்கு பாடசாலை, கல்லூரி கல்விகளை முழுமையாக முடிக்க முடியாத நிலையும் உண்டாகும். எப்போதும் நியாயத்துக்காகக் குரல் கொடுப்பவர்களாக மிருகசீரிட நட்சத்திரக்காரர்கள் இருப்பார்கள். தவறுகள் எங்கு நடந்தாலும் தட்டிக் கேட்பார்கள்.

மிருகசீரிடம் நட்சத்திரம் இயற்கையிலேயே கடின உழைப்பாளிகள் ஆவர். எடுத்த காரியங்களில் வெற்றி பெறும் வரை பின்வாங்க மாட்டார்கள். செய்கிற வேலைகளில் ஒழுக்கம், விதிகளைக் கடைப்பிடித்துச் செயற்படுதல் போன்றவை இருக்கும்.



எந்தவொரு விடயத்தையும் ஒருமுறை பார்த்தாலோ அல்லது கேட்டாலோ கிரகித்துக் கொள்ளும் மன ஆற்றல் மிக்கவர்களாக மிருகசீரிடம் நட்சத்திரக்காரர்கள் இருப்பார்கள். சிறப்பான பேச்சாற்றல் இருக்கும். அதன்மூலம் பகைவரையும் நண்பராக்கிக் கொள்வார்கள்.

மிருகசீரிட நட்சத்திரக்காரர்கள் எங்கிருந்தாலும் அவர்கள்தான் பிறரின் கவனத்துக்குரிய நபர்களாக இருப்பார்கள். பொதுவாகவே மிருகசீரிட நட்சத்திரக்காரர்கள் நல்ல வசதி மிக்க குடும்பத்தில் பிறந்தவர்களாகவே இருப்பார்கள். வாழ்வில் எந்தவொரு கஷ்டம் ஏற்பட்டாலும், அதனைச் சாதாரணமாக எடுத்துக் கொண்டு தங்களின் கடின உழைப்பின் மூலம் அதை விட சிறப்பான நிலைக்கு வந்து விடுவார்கள்.

மிருகசீரிடம் நட்சத்திரக்காரர்களுக்குத் திருமணம் அவர்களின் விருப்பம் போலவே நடைபெறும். இவர்களுக்கு வருகின்ற வாழ்க்கைத் துணை நல்ல பொருளாதார வசதி நிறைந்த குடும்பத்தில் இருந்து வருபவராகவே இருப்பார். வாழ்க்கைத்துணை மற்றும் குழந்தைகள் மீது மிகுந்த பாசம் கொண்டவர்களாக இருப்பார்கள். அவர்களின் எதிர்காலத்துக்காகத் தங்களை வருத்திக்கொண்டு கடினமாக உழைத்து பொருள் சேர்ப்பார்கள். எந்த ஒரு விடயத்திலும் பிறருக்காக விட்டுக் கொடுத்து செல்லும் தன்மை கொண்ட மனப்பான்மை மிருகசீரிட நட்சத்திரக்காரர்களுக்கு இருக்கும்.

இந்தக் குணம் காரணமாக உண்மையான நண்பர்களை அதிகம் பெற்றவர்களாக இந்த நட்சத்திரக்காரர்கள் இருக்கின்றனர். தன்னால் பிறருக்கு கஷ்டங்கள் ஏற்படக் கூடாது என்கிற எண்ணம் கொண்டவர்களாக இருப்பார்கள். தங்களுக்கு ஏற்படும் வசதி குறைவு, துயரங்கள் போன்றவை எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் முகமலர்ச்சியுடன் இருப்பார்கள், ஆழமாகச் சிந்தித்துச் செயலாற்றும் சிந்தனைத் திறனும் பெற்றவர்களாக மிருகசீரிட நட்சத்திரக்காரர் இருக்கின்றனர்.

## திருவாதிரை

திருவாதிரை நட்சத்திரம் மிதுன ராசியில் அடங்கும். இது ஒரே ஒரு நட்சத்திரம் தான். இதனை ஒரு விளக்கு அல்லது கண் விழிபோலக் கருதலாம். 'சிவபெருமானின் ஓர் அம்சமான நடராஜப் பெருமான் அவதரித்த நட்சத்திரம்' இது என்பார்கள். மார்கழி மாதம், திருவாதிரை அன்று சிவாலயங்களில் நடராஜப் பெருமானின் தரிசனமே 'ஆருத்ரா தரிசனம்' எனப்படுகிறது.

நல்ல தோற்றம், அழகு, உடல் வலிமை உள்ளவர்கள். திடசித்தமும், எடுத்ததை முடிக்கும் ஆற்றலும் இருக்கும். இரக்கம், தயாள குணம், தர்ம சிந்தனை, பிறருக்கு உதவும் தன்மை இருக்கும். மனதில் பட்டதை வெளிப்படையாகச் சொல்பவர்கள். கோப தாபம் இருக்கும். அவச ரப்பட்டுச் செயல்களைச் செய்வார்கள். தவறு நேர்ந்தால், திருத்திக் கொள்வார்கள்.

**சிறப்பியல்புகள்:**

பண்டைய ஜோதிட நூல்களில் திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் எவருமே வாழ்வில் தாழ்மை நிலையை அடைவது இல்லை எனக் கூறுகிறது. திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் பேச்சு இரட்டைத் தன்மை உடையதாக இருக்கும். ஓர் இடத்தில் ஒரு கருத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் இவர்கள், மற்றொரு இடத்தில் அந்தக் கருத்துக்கு எதிர்ப்பை தெரிவிப்பார்கள். திருவாதிரை நட்சத்தி ரக்காரர்கள் பெரும்பான்மையான மக்களின் செல்வாக்குப் பெறும் நிலைக்கு உயர்வார்கள்.

திருவாதிரை நட்சத்திரக்காரர்கள் இடம், பொருள், ஏவல் அறிந்து செயற்படுவதில் வல்லவர்களாக இருப்பார்கள். இதனால் இவர்களுக்கு நண்பர்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்குமே தவிர, எதிரிகள் என்பவர்கள் அநேகமாக இருக்க மாட்டார்கள். இவர்களுக்கு முன் கோபம் அதிகம் இருக்கும்.

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாமல் எல்லா வகையான உணர்வுகளையும் உடனே வெளிக்காட்டி விடுவார்கள்.

திருவாதிரை நட்சத்திரக்காரர்கள் கடினமான நபர்களைப் போல் காணப்பட்டாலும், இவர்களிடம் நன்கு பழகிய பின்பு அவர்களின் இனிமையான குணங்களை பலர் தெரிந்து கொள்வார்கள். எந்தவொரு சூழ்நிலை யிலும் கொடுத்த வாக்கை காப்பாற்ற முயற்சிப்பார்கள். தன்னை நம்பி வந்தவர்களை ஒருபோதும் கைவிடமாட்டார்கள். தனக்கு ஒரு விடயம் தெரியவில்லை என்றாலும் அது குறித்து தெரிந்ததைப்போல் பேசிச் சமாளிப்பார்கள்.

திருவாதிரை நட்சத்திரக்காரர்களுக்கு சிறந்த அறிவாற்றல் இருக்கும் . எடுத்துக்கொண்ட காரியங்களை முடிக்கும்வரை உணவு, தண்ணீர் கூட அருந்தாமல் உழைப்பார்கள். சற்று சுயநல குணங்கள் இருந்தாலும் பிறருக்கு எத்தகைய உதவி செய்யவும் தயங்க மாட்டார்கள். தங்களின் வாழ்க்கைத் துணையை மிகவும் நேசிப்பார்கள். ஆன்மிகத்தில் மிகுதியான ஈடுபாடு இருக்கும். பல திருத்தலங்களுக்கு அடிக்கடி சென்று வழிபட்டு நன்மை அடைவார்கள்.

# மணி பிளான்ட் செடி எந்தத் திசையில் வளர்க்க வேண்டும்?

மணி பிளான்ட் செடியை வீட்டில் வளர்ப்பதால் செல்வம் பெருகும், கடன் தொல்லை தீரும் என்ற நம்பிக்கை எமது மக்களின் மத்தியில் இருந்து வருகிறது. இதை வீட்டில் வளர்த்தாலே பணம் பெருகும் எனச் சிலர் நினைப்பது உண்டு.



**சரியான திசை முக்கியம்**

மணி பிளான்ட் வீட்டில் வளர்க்க விரும்புவோர் அதை சரியான திசையில் வளர்க்க வேண்டும். வாஸ்து நிபுணர்கள் மணி பிளான்ட்டை தென்கிழக்கு திசை நோக்கி தான் வளர்க்க வேண்டும் என்று கூறுகிறார்கள். தென்கிழக்கு திசையில் தான் அதிகம் நேர்மறை ஆற்றல் கிடைக்கிறது என்பதால், இந்தத் திசையில் தான் மணி பிளான்ட் நன்கு வளரும். இதனால் செல்வம் பெருகும். யோகம் பெற முடியும் எனக் கூறப்படுகின்றது. விநாயகரின் திசை தென்கிழக்கு திசை விநாயகருக்கு உகந்த திசையாகும். இது சுக்கிரனை பிரதிநிதித்துவம் செய்யும் திசை எனக் கூறப்படுகிறது. இதன் காரணங்களுக்காகத் தான் மணி பிளான்ட்டை தென்கிழக்குத் திசையில் வைக்க சொல்லி கூறுகிறார்கள்.

செல்வம் பெருகக் காரணங்கள் தென்கிழக்கு திசையில் மணி பிளான்ட்டை வைப்பதால், விநாயகர் தீயதை நீக்குகிறார் என்றும், சுக்கிரன் செல்வம் பெருக செய்கிறார் என்ற நம்பிக்கை நிலவிகிறது என வாஸ்து நிபுணர்கள் கூறுகிறார்கள்.

**வைக்கக் கூடாத திசை**

எக்காரணம் கொண்டும் மணி பிளான்ட்டை வடகிழக்கு திசையில் வைக்க கூடாது. ஏனெனில் இது எதிர்வினையை அதிகரிக்கும் திசை எனக் கூறுகிறார்கள். குருவின் ஆதிக்கம் வடகிழக்கு குருவின் திசையை பிரதிநிதித்துவம் செய்கிறது. சுக்ரனும், குருவும் எதிரிகளாக கருதப்படுகிறார்கள். இந்தத் திசையில் வைத்தால் நஷ்டம் ஏற்படும் என்று கூறுகிறார்கள்.



# அஜித்தின் அடுத்த அதிரடி படம்

அஜித்குமார் தொடர்ந்து அதிரடி படங்களில் நடித்து வந்தார். வேதாளம், விவேகம், விஸ்வாசம் ஆகியவை சண்டை படங்களாகவே வெளிவந்தன. வேதாளம், விஸ்வாசம் படங்களில் 'தாதா' வேடம் ஏற்று வில்லன்களுடன் மோதினார். தற்போது திரைக்கு வந்துள்ள 'நேர்கொண்ட பார்வை' படத்தில் சட்டத்தரணி வேடத்தில் நடித்துள்ளார். இந்தப் படம் மூலம் இன்னொரு நடிப்பு பரிமாணத்தை வெளிப்படுத்தி இருக்கிறார். படத்துக்கு ரசிகர்கள் மத்தியில் பெரிய வரவேற்பு கிடைத்துள்ளது.

இந்த நிலையில் மீண்டும் அதிரடிக் கதையில் நடிக்க அஜித் தயாராகி உள்ளார். இந்தப் படத்தையும் வினோத் இயக்குகிறார். போனிகபூர் தயாரிக்கிறார். படத்தில் நடிக்கும் இதர நடிகர், நடிகைகள் தேர்வு நடக்கிறது. ஸ்ரீதேவியின் மகள் ஜான்வியும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க இருப்பதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

## twitter

நண்பர்களுடன் ஒளிப்படங்கள் எடுக்கையில் போலியாக புன்னகைக்க வேண்டி இருக்காது!

உன்னை, மற்றவர்கள் போற்றும்போது மகிழ்ச்சி அடையாதே..! அது போல், உன்னை மற்றவர்கள் தூற்றும்போது மனம் வருந்தாதே..!




கௌதம் மேனன் – 'எனை நோக்கிப் பாயும் தோட்டா' திரைப்படம் விரைவில் வெளியிடப்படும்

ஐக்கிய தேசியக் கட்சி – அரச தலைவர் வேட்பாளர் யார் என்பது விரைவில் வெளியிடப்படும்...



இலங்கையின் இரு அரச தலைவர் வேட்பாளர்களுக்கும் சிறிய வித்தியாசம்தான்..

ஒருவர் விசத்தைக் கையில் கொடுத்து ஒரேயடியாக குடிக்கச் சொல்லுவார்..

அடுத்தவர் விசத்தைத் தேனுடன் கலந்து கொஞ்சம் கொஞ்சமாக குடிக்கச் சொல்லுவார்..

வரவுள்ள அரச தலைவர் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பதென்பதை விட யாருக்கு வாக்களிக்கக்கூடாதென்ற விடயத்தில் தமிழர்கள் தெளிவோடிருப்பார்கள்.



## பொன்மொழிகள்

1. நாவையடக்க எந்த மனிதனாலும் முடியாது. அது அடங்காத தீமை. கொல்லும் விஷம் நிறைந்தது.
2. பயம் வேதனையுள்ளது. ஆகையால் பயப்படுகிறவன் நேசத்துக்குப் பூரணமானவனல்ல.
3. உன் பகைவன் பசித்திருந்தால் உணவிடு. அவன் தாகத்தோடிருந்தால் பானம் கொடு.
4. மற்றவனின் பாவத்துக்கு நீ பங்காளியாகவும் ஆகாதே. உன்னைத் தூயவனாகக் காப்பாற்றிக் கொள்.
5. இரும்பை இரும்பு கூர்மையாக்கும். மனிதனை நல்ல நண்பன் கூர்மையாக்குகிறான்.
6. கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள் கண்டடைவீர்கள். தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும்.
7. தீமையைச்செய்து துன்புறுவதை விடநன்மையைச்செய்து துன்புறுவதே மேல்.
8. துன்மார்க்கன் தன் மமதையினால் எளியவனை வாட்டுகிறான். தாங்கள் கற்பிக்கும் தந்திர மோசங்களில் அவர்களே அகப்பட்டுக் கொள்வார்கள்.












YAMAHA
Revs Your Heart

57,000/= வரை
விலைக் கழிவுக் கொண்டாட்டம்

அரச உத்தியோகத்தர்களுக்கு
முற்கொடுப்பனவில் விஷேட சலுகை

ரூபா. 36,000 ஐச் செலுத்தி
எடுத்துச் செல்லுங்கள்




நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

பழைய மோட்டார்
சைக்கிள்களை கொடுத்து புதிய மோட்டார்
சைக்கிள் ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள்

Digital Electronics
62/16, Stanley Road, Jaffna.
YAMAHA DIGITAL - JAFFNA
0776 623 824

## மணமகள் தேவை

மணமகன் கொழும்பில் படித்து UK இல் MBA பட்டம் பெற்று கட்டாரில் பணிபுரிகிறார். வயது 41, 6 மாத காலத்தில் விவாகரத்துப் பெற்றவருக்கு மணமகள்தேவை. சாதி, மதம், கவனிக்கப்பட மாட்டாது. வெளிநாட்டில் விவாகரத்துப் பெற்றவர்களும் தொடர்புகொள்ளலாம்.

**076 873 5718** (CS/27399) (11,17)

## பெயர்மாற்றம்

மடத்தடி, சண்டிலிப்பாயைச் சேர்ந்த **லீலாதேவி** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **லீலாவதி** எனப் பெயர்மாற்றம் செய்வதோடு இனிவரும் காலங்களில் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்று தெரியப்படுத்துகின்றேன்.

(CS/27402) (11,17) **- லீலாவதி -**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (20.07.2019) சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் திருமதி கௌரி இலட்சுமணராசா

அவர்களின் அந்தியேட்டிக்கிரியை நாளை (17.08.2019) சனிக்கிழமை காலை 8மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியை (19.08.2019) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

C11001(16/17)

45, பரவைக்குள ஒழுங்கை,
சிவன் வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

நாகேந்திரர் இலட்சுமணராசா
கணவர்

## மரண அறிவித்தல்



பிறப்பு 15 . 04 . 1937

இறப்பு 13 . 08 . 2019

### திருமதி செல்வரட்ணம் இராஜேஸ்வரன்

மூளாயைப் பிறப்பிடமாகவும் மெல்பேனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரட்ணம் இராஜேஸ்வரன் 13.08.2019 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னாச்சிபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், தெல்லிப்பழையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வைரமுத்துப்பிள்ளை - தையல்நாயகி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற வைரமுத்துப்பிள்ளை இராஜேஸ்வரனின் பாசமிகு மனைவியும், தேவகி (ஆஸ்திரேலியா), பாரதி (லண்டன்), இராஜ்குமார் (இலங்கை), ரஞ்சித்குமார் (நியூசிலாந்து) ஆகியோரின் பாசமிகு தாயும், சிவச்சந்திரன், அன்ரு, அனுசாந்தி, மேகலா ஆகியோரின் பாசமிகு மாமியும், நேசரத்தினம் (இலங்கை), சண்முகநாதன் (இலங்கை), சச்சி (கனடா), தெய்வராணி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற சதானந்தன் (சிவம்), கௌரீஸ்வரி (லண்டன்), ஜெகதீஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சோபன், சுதர்சன், ஏட்ரியன், யொனர்த்தன், தாரணி, குகாயினி, நிதன், துவாரகா, கீர்த்திகா, மானேஸ்வரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (18.08.2019) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு ஆஸ்திரேலியாவில் நடைபெறும். அத்தினத்தில் மூளாயில் உள்ள அவரது இல்லத்தில் துக்கநிகழ்வு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய் றோட்,
சுழிபுரம்.

(cs 27395) (13.17)

தகவல்:
மகன் (077 749 3745)

## மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 01 . 1963

மறைவு 10 . 08 . 2019

### பாலசுப்பிரமணியம் சந்திரகுமார் (சந்தி)

யாழ்.அளவெட்டி சிறுவிளானைப் பிறப்பிடமாகவும் கனடா Mississauga வை வதிவிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் சந்திரகுமார் கடந்த 10.08.2019 சனிக்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சிறுவிளானைச் சேர்ந்த காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் - சகுந்தலா தேவி தம்பதிகளின் அன்பு மகனும், பரந்தனைச் சேர்ந்த காலஞ்சென்ற தர்மஞானசிங்கம் - பூபதி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், பிறேமலதாவின் (லதா) ஆருயிர்க் கணவரும், தமிழினி, மகிழினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகிகலா (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற சசிகலா மற்றும் சூரியகுமார் (அளவெட்டி), சுரேஸ்குமார் (ஆஸ்திரேலியா), சிவகுமார் (சிவம் - சுன்னாகம்), சூரியகலா (கனடா), சக்திகலா (கனடா), செந்தில்குமார் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், முரளிதரன் (கனடா), ஜீவாகரன் (லண்டன்), தர்சினி (ராதா - நீர்கொழும்பு), குணசீலன் (பிரான்ஸ்), அஜந்தா (மல்லாகம்), பரந்தாமன் (பரந்தன்), ராஜகுமார் (பரந்தன்), சாந்தி (பரந்தன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.08.2019 ஞாயிற்றுக்கிழமை மாலை 1.30 - 2.00 வரை Highland Hills Funeral Home and Cemetery 12492 Woodbine Ave, Gormley, ON LOH I GO, Canada வில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவம் போட்டோ,
சுன்னாகம்.

(CS/27396)(11.17)

தகவல்:-
சிவகுமார் (சகோதரர்)

பிறேமலதா (மனைவி) - +141 690 34939,
சிவம் (சகோதரர்) - 077 379 2318

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
### 78, கலட்டி ஒழுங்கை, வட்டாரம் - 01

வலிகாமம் மேற்கு பிரதேச சபை, வட்டுக்கோட்டை உப அலுவலகத்துக்குட்பட்ட வட்டாரம் 01 கலட்டி ஒழுங்கையிலுள்ள இல.78 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் திருமதி A.S.K. **செல்வத்துரை** என்றே காணப்படுகின்றது.

பெயர் மாற்றத்துக்குட்படும் ஆதனத்துக்கு **செந்தில்நாதன் கைம்பெண் மீனலோஜினி** ஆகியவர் தனது கணவர் செல்வத்துரை செந்தில்நாதனின் பெற்றோரான அம்பலவாணர் செல்வத்துரைக்கும் பெண் நாகரட்ணம்மாவுக்கும் சொந்தமாகவிருந்து அவர்கள் காலஞ்செல்ல தானும் தனது கணவரும் குறித்த ஆதனத்தில் 1966 ஆம் ஆண்டிலிருந்து இருந்ததாகவும் தனது கணவர் காலஞ்செல்ல குறித்த ஆதனம் தனது எதுவித தங்கு தடையற்ற ஆட்சியில் இருப்பதாகவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு பொ.பூலோகசிங்கம் முகதாவில் 1280/19.12.2011 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியுள்ளார்.

**ஆறுமுகம் சிவாஸ்கரன்** பிரசித்த நொத்தாரிசு பொ.பூலோகசிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1295/02.04.2012 ஆம் இலக்க உறுதியால் குறித்த **செந்தில்நாதன் கைம்பெண் மீனலோஜினி** ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**பரமசிவம் பெண் கமலா** பிரசித்த நொத்தாரிசு - பொ.பூலோகசிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1298/11.04.2012 ஆம் இலக்க உறுதியால் குறித்த ஆறுமுகம் சிவாஸ்கரன் ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**கணேசரத்தினம் கஜேந்தன்** பிரசித்த நொத்தாரிசு செ.கனகசபாபதி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2009/06.01.2018ஆம் இலக்க உறுதியால் குறித்த **பாலன் பரமசிவமும் பெண் கமலாவும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **கணேசரத்தினம் கஜேந்தன்** ஆகியவர் ஆதனப்பெயர் மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **கணேசரத்தினம் கஜேந்தன்** ஆகியவருக்குப் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் வலிகாமம் மேற்கு பிரதேச-சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

(CS/27391)(11)

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 20, புனிதமரியாள் வீதி 11 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் நீக்கிலன் செல்லத்தம்பி என்னும் பெயரில் ஆதனவரிப்பதிவேட்டில் காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தினை யாழ்ப்பாணம் நாவாந்துறை வடக்கினைச் சேர்ந்த செபஸ்ரியாம்பிள்ளை பிரான்சிஸ்சும் பெண் அக்னேசம்மாவும் பிரசித்த நொத்தாரிசு முடியப்பு றெமிடியஸ் முகதாவில் 2012.06.12 ஆம் திகதியிடப்பட்ட 5514 இலக்க சீதன உறுதி மூலம் அவர்களது மகளாகிய செபஸ்ரியன் பெண் ஜெயறூட்டம்மாவுக்கு வழங்கியுள்ளார்.

இவ்வாதனம் அக்னேசம்மாவின் தந்தையாகிய பிலிப்பு நீக்கிலாம்பிள்ளைக்கு முதுசமாக சொந்தமாயிருந்து பின் 1957 ஆம் ஆண்டு காலத்தில் குறித்த பிரான்சிஸ்சும் பெண் அக்னேசம்மாவினதும் திருமணத்தின் பொருட்டு சீதனமாக கொடுக்கப்பட்ட கைவசமற்ற உறுதியின்படியும் 1957 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையான தொடர்ச்சியானதும் இடையூறற்றதுமான ஆட்சியுமாக இருந்து வருகிறது. எனவும் குறித்த 551 ஆம் இலக்க சீதன உறுதியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆதன விபரம் : வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோயிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை பராயப்படியும் வாடிக்கரையும் நிலப்பரப்பு ($2\frac{1}{2}$) இரண்டரை இதில் வடக்கு பக்கமாக நிலப்பரப்பு ($1\frac{1}{4}$) ஒன்றேகால் இதற்கு எல்லை,

கிழக்கு : சென்மேரிஸ் வீதி.
வடக்கு : தொம்மை அந்தோனிப்பிள்ளையினது ஆதனம்.
மேற்கு : பிலிப்பு சூசைப்பிள்ளையினது ஆதனம்.
தெற்கு : இதன் மிகுதியினதும் இடதங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

தற்போது இவ்வாதனத்தை யோகராசா செபஸ்ரியன் பெண் ஜெயறூட்டம்மா தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த் திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும். உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது யோகராசா செபஸ்ரியன் பெண் ஜெயறூட்டம்மா என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(இம்மனுவல் ஆனல்ட்),**
**முதல்வர்,**
**மாநகரசபை.**

(CS 27339)
(14,17)

## 77 ஆவது பிறந்தநாள் நினைவும் ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலியும்

**அமரர் தவமணி தம்பிராசா**

மலர்வு
01.07.1942

உதிர்வு
11.08.2014

திதி:- ஆடித்திங்கள் அபரபட்ச பிரதமை



ஆண்டு பல ஆனாலும் அன்னையே உம் அன்பின் அரவணைப்பு
என்றும் எம் மனதை விட்டகலாது எமது ஈரவிழி நீரால் உம் பாதமலர்
இறைஞ்சுகின்றோம் எத்தனை ஆண்டுகள்
ஆனாலும் உமது நிழல் எம்மனத்தே என்றும் விட்டகலாது
ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
கணவர், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

மஞ்சத்தடி, இணுவில்.

(CS/27403)(13,17)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
01
.
06
.
1958



மறைவு
17
.
07
.
2019

**அமரர் திருமகள் தனபாலரத்தினம்**

(ஓய்வுபெற்ற ஆசிரியை - கோண்டாவில் இந்துக் கல்லூரி)

கடந்த 17.07.2019 இல் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் செய்தி அறிந்து நேரிலும் தகவல் ஊடகங்கள் மூலமும் மலர் வளையங்கள். பிரசுரங்கள் பதாகைகள் மூலமும் உள் நாட்டிலும். வெளிநாட்டில் இருந்தும் துயரில் பங்கு கொண்டு அனுதாபம் தெரிவித்த நல்ல உள்ளங்களை கனத்த இதயம் நிறைந்த நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கின்றோம்.


**தில்லைஸ்தான்**
**புகையிரத நிலைய வீதி,**
**கோண்டாவில் மேற்கு.**

(CS.27376) (13)

**குடும்பத்தினர்**
**021 205 3311**

## மரண அறிவித்தல்

தோற்றம்
27
.
02
.
1927



மறைவு
15
.
08
.
2019

**சின்னத்தம்பி செல்லையா தியாகராஜா**

(ஓய்வு நிலை ஆசிரியர் -யா/தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி)

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கு, தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தியாகராஜா நேற்று (15.08.2019) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - செல்லாச்சி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், கந்தையா - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், ஞானம்மாவின் பாசமிகு கணவரும், சிறீதர்சினியின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற துஷ்யந்தனின் பாசமிகு மாமனும், சங்கீதா, கிருசாந்தன் (மாணவன் - யா/தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி), சிவானுயா, ரினோஜ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக அளவெட்டி மணல்பிட்டி இடுகாட்டிற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோயிலடி.**
**அளவெட்டி வடக்கு, அளவெட்டி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 951 2123**

(cs 27398) (13.17)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

வதிரி திக்கத்தில் தங்கி இருந்து
பணிசெய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

**076 667 2217**

## தேவை


யாழ்நகரப் பகுதியில் உள்ள வீடு ஒன்றிற்கு
துப்பரவு வேலை செய்யக்கூடிய
ஆண்/பெண் தேவை.

**071 513 0100**




## மரண அறிவித்தல்கள்

### சபாபதிப்பிள்ளை செல்வநாயகம்




704, யோகபுரம் மத்தி மல்லாவியை வசிப்பிடமாக கொண்ட சபாபதிப்பிள்ளை செல்வநாயகம் 13.08.2019 அன்று காலமானார்.

அன்னார் ஜெயமணியின் அன்புக்கணவராவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.08.2019) மதியம் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அனிஞ்சியம்குளம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**704, யோகபுரம் மத்தி மல்லாவி.** **தகவல்: குடும்பத்தினர்.**



### அழகரட்ணம் பவளம்மா

இருபாலையை பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட அழகரட்ணம் பவளம்மா 14.08.2019 அன்று ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து அம்மாகண்டு தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அழகரட்ணம் (பலநோக்குக்கூட்டுறவுச்சங்க பரிசோதகர்) அவர்களின் பாசமிகு மனைவியும் திலகராணி (கனடா). திலகராஜன் (ஆஸ்திரேலியா). கிருஸ்ணவேணி (ஜேர்மன்) ஆகியோரின் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.08.2019 ஞாயிற்றுக் கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது. 17.08.2019 சனிக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இருபாலைஇல்லத்தில்ஆத்மசாந்திபிரார்த்தனைஇடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முனி கோவிலடி, கோப்பாய் தெற்கு. கோப்பாய்.** **தகவல்: உறவினர்கள்**

### திருமதி கமலாம்பிகை பத்மநாதன்



பிறப்பு 19.04.1953 இறப்பு 15.08.2019

காரைநகர்,பெரியமணலை பிறப்பிடமாகவும் வலந்தலை சயம்பு வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை பத்மநாதன் நேற்று (15.08.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி செல்லையா செல்லம்மா தம்பதியினரின் மகளும் காலஞ்சென்றவர்களான திரு திருமதி நல்லதம்பி சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மருமகளும் பத்மநாதனின் அன்பு மனைவியும்விமலச்சந்திரன், வரலட்சுமி (ஆசிரியர், கிளி/தர்மபுரம் மத்திய கல்லூரி), பரமேஸ்வரன், தவறஞ்சன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாலறூபி (மருத்துவமாது, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), அருள், யசோதினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் நல்லம்மா, நேசரத்தினம், வேலுப்பிள்ளை, சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும் நாகலிங்கம், தேவராசா, புஸ்பதேவி சிவசுப்பிரமணியம் காலஞ்சென்ற நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற இரட்ணசபாபதியின் சகலியும் பிரணவி, பிரஜித், ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (18.08.2019) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப 8.30 மணியளவில் சாம்பலோடை இந்துமயானத்திற்குஎடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:குடும்பத்தினர்.**
**077 610 1172**

## ஒட்டுமொத்த...

வில்லை. மாறாக அரசில் இருந்து வரப்பிரசாதங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டுள்ளார்கள்' இவ்வாறு மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:


'தமிழ் மக்களின் ஆதரவை எமது அரச தலைவர் வேட்பாளரான முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவால் பெறமுடியாது என்ற தவறான கருத்தை அரசு தற்போது தெரிவித்து வருகின்றது. நிச்சயம் வடக்கு - கிழக்கு உட்பட ஒட்டுமொத்த தமிழ் மக்களின் ஆதரவுடன் ஆட்சி மாற்றம் ஏற்படும். வடக்கு மக்கள் தற்போது எவர் தலைமையிலான ஆட்சி சிறந்தது என்பதைத் தீர்மானித்து விட்டார்கள்.

தமிழ்மக்களைப்பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள் எவரும் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசுக்கு அழுத்தம் கொடுக்கவில்லை. மாறாக தேவையற்ற நிறைவேறாது என்று தெரிந்த ஒரு விடயத்துக்கு (புதிய அரசமைப்பு) முக்கியத்துவம் வழங்கி காலத்தை வீணடித்து தமிழ் மக்களைத் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றார்கள்.

அரசியல் தீர்வு என்ற விடயத்தை குறிப்பிட்டுக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்கி வருகின்றது. ஆதரவு வழங்குவதால் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மாத்திரமே பெரிதும் பயனடைந்துள்ளார்கள். ஆனால், எதிர்பார்ப்புடன் அபிவிருத்திகள் ஏதும் பெற்றுக்கொள்ளாத வடக்குத் தமிழ் மக்கள் தொடர்ந்து ஏமாற்றமடைந்துள்ளார்கள். இறுதியில் அபிவிருத்தியும், அரசியல் தீர்வும் வெறும் கானல்நீராகவே காணப்படும்.

மறுபுறம் மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள் பெருந்தோட்ட மக்களுக்கு எவ்வித நியாயமான தீர்வையும் பெற்றுக்கொடுக்கவில்லை. ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும், இறுதியிலும் மலையகத்தில் இயற்கை அனர்த்தம் ஏற்படுவது எதிர்பார்க்கக் கூடியதொன்றாகக் காணப்படுகின்றது. ஆனால், மலையக மக்களுக்கு நியாயமான தீர்வை அரசு வழங்கவில்லை. அரசுக்கு அழுத்தம் கொடுப்பதாக மலையக அரசியல்வாதிகள் வெறும் பேச்சளவில் மாத்திரமே கருத்துரைக்கின்றார்களே தவிர செயலளவில் எதனையும் வினைத்திறனாகச் செயற்படுத்தவில்லை.

தமிழ் மக்கள் தொடர்ந்து தம்மை ஏமாற்றி அதில் சொகுசாக வாழும் அரசியல்வாதிகளுக்கு ஆதரவு வழங்குவதால் எந்தவித பயனும் ஏற்படாது. கடந்த நான்கு வருட காலமாக அரசில் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் வெறும் பேசுபொருளாகவே காணப்பட்டது. நிச்சயம் எமது அரசில் பாதிப்பற்ற விதத்தில் வடக்கு - கிழக்குக்கு அடிப்படைத் தீர்வும் மலையக மக்களுக்குப் பொருளாதாரத் தீர்வும் பெற்றுக்கொடுக்கப்படும் - என்றார். (ம-22,61)



## முதல் உபதேசம்

ஒருநாள் புத்தரை அணுகிய சீடன் ஒருவன். "தங்களைப்போல மக்களிடத்தில் ஞான வாழ்க்கையை உபதேசிக்க நானும் விரும்புகிறேன். இதற்காக உலகம் முழுவதும் பயணம் மேற்கொள்ளலாம் என்று முடிவு செய்திருக்கிறேன். தங்களின் அனுமதி தேவை" என்று கேட்டார்.

அதைக்கேட்ட புத்தர் "சீடனே நீ கூறுவது நல்ல யோசனைதான். ஆனால் எடுத்தவுடன் உலகத்தைச் சுற்ற வேண்டும் என்று அகலக்கால் வைக்கிறாய். நீ மக்களுக்கு ஞானவாழ்க்கையை உபதேசிக்கும் அளவுக்கு பக்குவப்பட்டுள்ளாயா? என்பதை முதலில் தெரிந்துகொள்ள முயற்சி செய். முதலில் இந்த ஊரில் உனது அனுபவப் பயிற்சியைத் தொடங்கு; இவ்வூரிலுள்ள மக்களிடம் சென்று சந்தித்து உபதேசங்களைத் துவங்கு. அதன் பிறகு உலகம் சுற்றுவதைப் பற்றி யோசி"- என்றார்.

புத்தரிடம் ஆசிபெற்ற சீடன் புத்தரின் ஆச்சிரமத்தைவிட்டு வெளியேறி ஊருக்குள் நடந்தான். வழியில் ஒரு மரத்தடியில் பசியோடிருந்த ஒரு பிச்சைக்காரனைப் பார்த்தான். இருவரும் ஆளை ஆள் பார்த்துக் கொண்டனர். தனது முதல் உபதேசத்தை அவனிடம் ஆரம்பிக்கலாமென்றிருந்த நிலையில் பிச்சைக்காரன் "ஐயா! பசி உயிர் போகிறது. சாப்பிட்டு இரண்டு நாள்களாகிறது. சாப்பிட ஏதாவது இருந்தால் கொடுங்களய்யா"என்று கை கூப்பியபடி கேட்டான்.

அவன் முன் சென்றமர்ந்த சீடன் "ஐயனே! பசிக்கிறது என்றா சொன்னீர். தவறு பசி என்பது பொய். நமக்குப் பசிக்கிறது என்று நாம் நினைப்பதாலேயே நமக்கு பசிக்கிறது. ஆனால் உண்மையில் பசி என்று எதுவுமில்லை. எல்லாம் மனப்பிரமைதான்.

"ஒருவேளை பசி என்று இருப்பதாக இருந்தாலும் நாம் அதற்கு அடிமையாகி விடக்கூடாது. அந்த நேரம் எமது கவனத்தைக் கடவுள் பக்கம் திருப்பி விட வேண்டும்.

"அந்தச் செயல் கடவுளுக்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடிய செயலாகும். அதற்குப் பிறகு பாரும். கடவுள் நமக்கு எத்தனை சௌபாக்கியங்களைக் கொடுக்கிறார்"என்று உபதேசம் செய்தார்.

பிச்சைக்காரன் எரிச்சலோடு பார்த்தான். சீடனும் விடவில்லை. தனது உபதேசத்தைப் பற்றி எடுத்துரைத்துக்கொண்டிருந்தான்.

பசி மயக்கத்திலிருந்த பிச்சைக்காரனுக்கு இந்த உபதேசங்கள் உச்ச எரிச்சலைக்கொடுக்க அவன் சீடனை ஆத்திரம் பொங்கப் பார்த்தான்."நீ படித்தவன் போல் இருக்கிறாய். பசி மயக்கத்திலிருக்கும் எதை எதையோ பேசி என் வயிற்றெரிச்சலைக்கொட்டிக்கொள்கிறாய்"என் பசி நீங்க ஏதாவது வழி இருந்தால் சொல். இல்லாவிட்டால் உடனே இந்த இடத்தை விட்டுப்போய் விடு! என் உயிரை எடுக்காமல்"என்று கத்தி னான். பிச்சைக்காரன், சீடன் பிச்சைக்காரனை நோக்கி "ஐயனே! கோபப்படாதீர்"கோபம் தான் மனிதனின் முதல் எதிரி. அதை அழித்து விட்டால் உள்ளத்தில் பக்தி தோன்றும். அது முற்றினால் முக்தி" என்றான்.

சட்டென்று வெகுண்டெழுந்த பிச்சைக்காரன். "யோவ்!எனக்கு பக்தியும் வேண்டாம். முத்தியும் வேண்டாம். மரியாதையாக இந்த இடத்தை விட்டுப்போய் விடு. இல்லையேல் இங்கே ஒரு கொலைதான் நடக்கும்" என்று வெறிகொண்டவன் போல் கத்தினான். சீடன் முகத்தைத் தொங்கப் போட்ட படி புத்தரிடம் வந்தான், நான் செய்த உபதேசங்களையும், அதற்கு பிச்சைக்காரன் கொடுத்த பதிலடிகளையும் கூறிக் கவலைப்பட்டான்.

புத்த யோசித்து விட்டு. சிறிது வேலையின் பின் அந்தப் பிச்சைக்காரன் இருந்த இடத்துக்குச் சென்றார். கூடவே புத்தரின் சீடனும் சென்றான். இப்போது பிச்சைக்காரன் பசிக்களையினால் ஒரு மரத்தடியில் தூங்கிக்கொண்டிருந்தான். தூங்கிக்கொண்டிருந்த பிச்சைக்காரனை புத்தர் தட்டி எழுப்பினார். மிரண்டு எழுந்தவன் முன்பு போல உபதேசம் செய்யவே சீடன் மற்றொருவரையும் அழைத்து வந்ததாக நினைத்து மிகுந்த கோபத்துடன் எழுந்து நின்றான்.

புத்தர் "இதோ பாரப்பா நான் உனக்கு எந்த உபதேசமும் செய்யவரவில்லை. நீ மிகுந்த பசியுடன் இருக்கிறாய். இதோ இந்த உணவை முதலில் சாப்பிடு"என்று தான் கையோடு கொண்டு வந்திருந்த உணவுப் பொட்டலத்தை அவனிடம் நீட்டினார். பிச்சைக்காரன் தன் கண்கள் பிரகாசிக்க அந்த உணவுப் பொட்டலத்தைப் பிரித்துச் சாப்பிடத் தொடங்கினான். வயிறு நிறைய உண்டு முடிந்ததும் புத்தருக்கு நிறைய நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தான்.

பின்னர் புத்தர் எழுந்து செல்ல அவன் படுத்து நன்றாகத் தூங்கத் தொடங்கினான். இப்போது எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்த சீடன்! புத்தர் அருகே வந்தான். புத்தர் "ஆக ஒரு மனிதனின் அப்போதைய நிலையை அறிந்த பின்னரே அவனுக்கு உபதேசம் செய்ய வேண்டும். உணவு வேண்டுபவனுக்கு முதலில் உணவை வழங்க வேண்டும். நீ இனிப்போய் பிச்சைக்காரனை எழுப்பி அவனிடம் உன் உபதேசத்தைக்கூறு. காதுகொடுத்துக் கேட்பான்" -என்றார்.

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் தர்மலிங்கம் தர்மராஜா

(ஓய்வுபெற்ற உதவித் தொழில் ஆணையாளர், தொழில் திணைக்களம். வவுனியா)

மலர்வு 17.07.1940 உதிர்வு 16.08.2010

திதி: 07.08.2019

பண்பு நெறியூட்டி தத்துவங்கள் புரியவைத்து
ஆதரவுக் கரம் கொடுத்து கரையேற்றி விட்டவர் நீங்கள் - அப்பா!
வழிப் பயணம் முடிந்ததென்று வையகம் விட்டு சென்றீர்களா?
ஒவ்வொரு பொழுதிலுமே உங்கள் நிஜத்தை தேடுகின்றோம் - அப்பா!
தங்கள் ஆத்மா சாந்திபெற பிள்ளையார் துணை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

"தேவி மகால்"
கோப்பாய் மத்தி. (10461) (13) குடும்பத்தினர்.

## பச்சைக்கிளி

கிளியே கிளியே பறந்து வா
பச்சைக்கிளியே பறந்து வா
இறக்கை அடித்து பறந்து வா
கிள்ளை மொழியே பறந்து வா
பேசும் கிளியே பறந்து வா
பாடம் சொல்வாய் பறந்து வா
பழங்கள் தருவேன் பறந்து வா
கொறித்து உண்பாய் பறந்து வா
கொஞ்சும் கிளியே பறந்து வா



அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 701
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.08.15
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 79,910,745/-
வெற்றி இலக்கங்கள் 01 03 18 66 H
விசேட வெற்றி இல. 6299
அபிவிருத்தி லொத்தர் சபை
தொ.பே: 0112 333 546-47 ... 0114 824 824, 0112 333 776 or 1919 ... 0114 825 825
பச்சை நிற டிக்கெட்டுக்கள் இன்றைய சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1595
சீட்டிழுப்பு திகதி 15.08.2019
வெற்றி இலக்கங்கள் 16 24 33 68 I
அடுத்த செவ்வாய் கிழமைக்கான ஜக்பொட் ரூ.35, 880. 056/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY ... 1919
மஞ்சள் நிற டிக்கெட்டுக்கள் 20.08.2019 திகதி செவ்வாய்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 15.08.2019 | வெற்றி வாரம் 2587 | வர்ணம் கபிலம்
கடகம்
வெற்றி இலக்கங்கள் 04 33 41 44
வெள்ளிக். கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,280,248/=

டபள் சான்ஸ்
விசேட இல.
ரூ.500 பரிசுக்காக 3261
ரூ.100 பரிசுக்காக 920
16.08.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW ... 1919 ... 1919

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை
## பொது அறிவித்தல்

எமது சபையின் பயன்பாட்டில் இருந்த உப பற்றுச்சீட்டுப் புத்தகம் ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. இப்பற்றுச்சீட்டுப் புத்தகத்தில் உள்ள இலக்கம் **13655 தொடக்கம் 13700** வரையான பற்றுச்சீட்டுக்கள் ஊடாக எந்தவிதமான கொடுப்பனவுகளினையும் மேற்கொள்ள வேண்டாம் என பொதுமக்கள் கவனத்துக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது.

மேலும் குறித்த **13655 தொடக்கம் 13700** வரையான பற்றுச்சீட்டின் ஊடாக ஏதாவது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தால் அது தொடர்பாக வலிகாமம் வடக்குப் பிரதேச சபைக்கு நேரடியாகவோ அல்லது தொலைபேசி இலக்கம் **021 224 1130** ஊடாகவோ அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்குப் பிரதேசசபை,**
**காங்கேசன்துறை.**
(CS/27401)(11,17)

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் (வ/து)


## விசேட பொதுச் சபைக் கூட்டம்
## 18.08.2019

### அங்கத்தவர்களுக்கான முக்கிய அறிவித்தல்

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் **18.08.2019 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சங்கத் தலைமை காரியாலய மண்டபத்தில்** சங்கத்தின் தலைவர் **செல்வரட்ணம் செந்தூரன்** அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது. இவ்விசேட பொதுச்சபைக் கூட்டத்திற்கான அழைப்பிதழ் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் தனித் தனியே தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. கூட்ட அழைப்பிதழ் கிடைக்கப்பெறாத சங்கத்தின் . அங்கத்தவர்கள் இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று மேற்படி விசேட பொதுச்சபைக் கூட்டத்திற்கு குறித்த நேரத்திற்கு வருகை தந்து கலந்துகொள்வதுடன் புதிய நிர்வாக சபை தெரிவை மேற்கொள்ள ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

**உ. பரமநாதன்,**
**செயலாளர்,**
**சாவகச்சேரி கால் நடை வளர்ப்போர்,**
**கூட்டுறவுச் சங்கம்.**
(cs: 665) (13.17)

## வர்ணம் தீட்டுவோம்



## விடுகதைகள்

1. அச்சு இல்லாத சக்கரம். அழகு காட்டும் சக்கரம். அது என்ன?
2. வெளியில் விரியும். வீட்டில் சுருங்கும். அது என்ன?
3. மரமுண்டு ஆனால் கிளையில்லை., மட்டையுண்டு ஆனால் கட்டையில்லை; பூவுண்டு மணமில்லை. அது என்ன?
4. கிணற்றுக்குள்ளே கிண்ணம் மிதக்குது. அது என்ன?
5. வட்ட வட்ட பாய். வாழ்வு தரும் பாய். ஊர் சுற்றும் பாய். அது என்ன?
6. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல். அது என்ன?
7. அவள் பறக்கும் போது தீப்பொறி பறக்கும். அது என்ன?
8. 'அடியடா பிடியடா' என்பவன் அறையை விட்டு வெளியே வரமாட்டான். அவன் யார்?
9. வாய் பூ; வாடாத பூ. அது என்ன?
10. ஓடும் ஆனால் இருக்கும் இடத்தை விட்டு நகராது. அது என்ன?

## விடைகள்

1. வளையல்
2. குடை
3. வாழை மரம்
4. முழுநிலா
5. ரூபாய்
6. கிளி
7. மின்மினிப் பூச்சி
8. நாக்கு
9. சிரிப்பு
10. கடிகாரம்

## ஆறுமுக நாவலர்



ஆறுமுக நாவலர்
அருந்தமிழின் காவலர்
வீறுகொண்டு சைவத்தின்
மேன்மைதந்த கோனவர்

நல்லூரிலே பிறந்தவர்
நல்லறிவு நிறைந்தவர்
எல்லோருக்கும் இனியவர்
ஈசனையே பணிபவர்


திருக்குறளை மிகமிகத்
திருத்தமாகப் பதித்தவர்
இருக்குமுதல் வேதங்கள்
இயம்பும் நெறியை மதித்தவர்

கந்தபுராணங் கற்றவர்
கருணையுள்ளம் பெற்றவர்
சிந்தைசெயலில் தூயவர்
சித்தாந்தமே ஆய்பவர்

பேச்சில்மிகவும் வல்லவர்
பிறமதத்தை வெல்பவர்
மூச்சும்தமிழ்க்காய் விட்டவர்
மும்மலத்தைச் சுட்டவர்

தென்னாட்டிலும் ஈழத்தின்
சிறப்பைநாட்டி வைத்தவர்
பொன்னாட்டினும் புரவலன்
போற்றுமெங்கள் நாவலன்

## ஒவ்வொரு படத்திலும் உள்ள வடிவங்களை எண்ணி எழுதுங்கள்



## எறும்பு!

எறும்பு சுறுசுறுப்புக்குப் பெயர் பெற்றது. சிறுக சிறுக சேமித்து வைக்கும் பழக்கத்தை எறும்பிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டும் என்பர். மேலும் அணிவகுப்புக்கு உதாரணமாக எறும்பைச் சொல்வர். இப்படி எறும்புகள் தொடராகச் செல்வதற்குக் காரணம் பலர் எறும்புக்குக் கண் தெரியாது என்பர். இதில் ஓரளவு உண்மை இருக்கிறது. எப்படியென்றால், 'ஓம்மடீரியா' என்ற சிறு கண் போன்ற கூட்டுறுப்புகள் பல கொண்டுள்ள எறும்புக்கு கண்ணின் பார்வை மிக மங்கல்தான். பின், இவை எப்படி ஒன்றன்பின் ஒன்றாக செல்கிறது.



"ப்யூரமோன்" என்றும் "ப்யூமரிக் அமிலம்" என்றும் சில இரசாயனப் பொருள்கள் எறும்பின் உடலிலிருந்து வெளிப்படும். எனவே, ஒரு எறும்பு செல்லும்போது அவற்றில் இருந்து வெளிவரும் இந்த இரசாயனத்தின் மணத்தை வைத்து மற்றொரு எறும்பு பின் செல்கிறது. இது அறிவியல் கூறும் உண்மை.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# ஐ.தே.கவின் நிலைப்பாடு நீடித்திருக்கவேண்டும்

தமிழ் மக்களுக்கான தீர்வு குறித்த ஐக்கிய தேசியக்கட்சியின் நிலைப்பாடு என்ன என்று அந்தக் கட்சியின் தலைவரும் தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்றுக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. அதற்குப்பதிலளித்தஅவர், தமிழ் மக்கள்சமத்துவமாகவும் சுயமரியாதையுடனும் தமக்கான விடயங்களைத் தாமே தீர்மானிக்கும் அதிகாரங்களுடனும் வாழத் தக்க தீர்வு ஒன்றேதமது கட்சியின்நிலைப்பாடு என்று தெரிவித்திருக்கிறார்என்கிறதகவலைத்தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆபிரகாம் சுமந்திரன் ஊடகங்களிடம் தெரிவித்திருக்கிறார்.

நாடாளுமன்றத்தில்அறுதிப் பெரும்பான்மை கிடைக்காததனால் அத்தகைய ஒரு தீர்வைக் கொண்டு வரமுடியவில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். அத்தோடு அடுத்து வரவிருக்கும் தேர்தல்களில் தமது கட்சி தோல்வியைத் தழுவி ஆட்சி அமைக்க முடியாத நிலை ஏற்பட்டாலும்கூட தீர்வு தொடர்பான கட்சியின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏதும் இருக்காது என்றும் அவர் தெரிவித்தார்என்று சுமந்திரன் தெரிவித்திருக்கிறார்.

கூட்டாட்சி (சமஷ்டி) என்கிற சொல் சிங்கள மக்களிடம் வெறுப்புணர்வைக் கிளப்புகின்றது என்பதால் அதனைத் தவிர்த்து அதன் உள்ளடக்கங்களை விவரிக்கும் வகையில் அமைந்த தீர்வு தொடர்பான இந்த விவரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனால் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்போது அதையேதான் ரணில் விக்கிரமசிங்கவும் கூறியிருக்கிறார் என்று சொல்லப்படுகின்றது.

மறுபுறத்தில் மகிந்த தரப்பினரின் அரச தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய கோத்தபாய ராஜபக்ச, அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அப்பால் தீர்வு தொடர்பில் தான் அதிகம் நகரமாட்டார் என்று கூறியிருக்கும் நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு சிறப்பானது, வரவேற்கத்தக்கது.

தேர்தல்கால வெறும் அறிவிப்பாக இது இருக்காமல் இருந்தால் இன்னும் சிறப்பானது. எத்தகையதொரு தீர்வு முயற்சியிலும் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பு நிலையை எடுக்காமல் அத்தகைய முயற்சிகளுக்கு ஆதரவாக இருந்தால் அது இன்னும் சிறப்பானதாக அமையும். வரலாற்றில் ஐக்கிய தேசியக் கட்சி அத்தகைய பண்பை வெளிப்படுத்தியதில்லை. முன்னாள் அரசதலைவர் சந்திரிகா அம்மையாரின் ஆட்சிக் காலத்தில் அவரால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தை ஆதரிக்காமல் நாடாளுமன்றத்தில் கிழித்து எறிந்தது போன்றில்லாமல், ஆட்சியில் இல்லாதபோதும் இதே நிலைப்பாட்டில் ஐ.தே.க. இருந்தால் அது வரவேற்கத்தக்கதே.

ஆனால், அதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றதா என்று பார்த்தால் வரலாற்றில் இருந்து, இல்லை என்பதுதான் பதிலாகக் கிடைக்கின்றது. டட்லி– செல்வா ஒப்பந்தம் முதற்கொண்டு ஐ.தே.க – தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் ஒஸ்லோவில் இணங்கிக்கொண்டுள்ள சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வு என்கிற விடயம் வரையில் எதனையும் ஐக்கிய தேசியக் கட்சி நிறைவேற்றியதில்லை என்பதுதான் வரலாறு. அவை போன்றே தற்போதைய கட்சியின்நிலைப்பாடும் இருந்துவிடக்கூடாது என்பதே தமிழ் மக்களின் அங்கலாய்ப்பு.

ஏனெனில் 2015ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட, பொது மக்களின் காணிகள் அனைத்தும் அவர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்படும், புதிய அரமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படும், ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்களை நீதியின் முன் நிறுத்தித் தண்டிப்பது, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவது போன்ற பல வாக்குறுதிகளில் சில முழுமையாகவும் சில பகுதியளவிலும் காற்றில் பறக்கவிடப்பட்டதைப்போன்றே, இந்த வாக்குறுதியும் காற்றில் பறந்துபோய்விடக்கூடாது என்பதே தமிழ் மக்களின் விருப்பம்.

# அரச தலைவர் தேர்தலுக்கும் ஒற்றுமைக்கும் தொடர்பென்ன?

இந்துமதி

அரச தலைவர் தேர்தலில் தமிழர்கள் ஒன்றுபட்ட நிலைப்பாட்டை மேற்கொள்ளும் பொருட்டு அவர்களிடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சிகள் இடம்பெறுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது விடயமாக ரெலோ தரப்பினர் முன்னாள் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் பேசியுள்ளதாகவும் தெரியவருகின்றது. ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவரான சுரேஷ் பிரேமச்சந்திரனும் இந்த விடயத்தில் அக்கறை காட்டுவதாகத் தெரிகின்றது.

> அடுத்து இடம்பெறப் போகும் மாகாண சபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை மனதில்கொண்டு இந்த ஒற்றுமை தொடர்பாகச் சிலர் சிந்திப்பவர்களாக இருந்தால் அவர்களைவிடத் தமிழினத் துரோகிகள்வேறு எவருமே இருக்க முடியாது.

### ஏராளமான பிரச்சினைகளுக்கு மத்தியில் வடக்கு - கிழக்குத் தமிழர்கள்

தமிழர்கள் இன்றுள்ள நிலையில் ஏராளமான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். போர் தந்த வடுக்கள் அவர்களிடமிருந்து இன்னமும் நீங்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கதி தொடர்பாக எந்தத் தகவலும் இது வரையில் கிடைக்கவில்லை. அவர்களின் உறவுகள் ஆண்டுக் கணக்கில் தமது உறவுகளைத் தேடி அலைந்துகொண்டிருக்கின்றனர். இவர்களில் சிலர் உயிரிழந்தும் விட்டனர். படையினரால் பொது மக்களுக்குச் சொந்தமான காணிகள் அடாத்தாகப் பிடிக்கப்பட்டு, இன்னமும் விடுவிக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன. தமது நிலங்களை விடுவிப்பதற்கான போராட்டங்களில் அந்த மக்கள் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர். முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் இடம்பெறுகின்ற அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களால் அந்தப் பகுதிகளில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வரும் மக்கள் பெரும் அச்சமானதொரு சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இவர்களுக்குச் சொந்தமான காணிகளும் மெல்ல மெல்லப் பறிபோய்க்கொண்டிருக்கின்றன. வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களால் இடம்பெறுகின்ற சட்ட விரோதமான மீன்பிடித் தொழிலால், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மீன்பிடித் தொழிலையே நம்பியிருக்கும் அப்பாவி மக்கள் வருமானமின்றி ஏழ்மை நிலையில் வாழ்கின்றனர். கடல் வளமும் அழிவடைகின்றது. இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டு பௌத்த விகாரைகளை அமைக்கின்ற பணிகள் துரிதமாக இடம்பெற்றுவருகின்றன. திருகோணமலை மாவட்டத்தின் கன்னியாவிலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் நீராவிப் பிட்டியிலும் இடம்பெற்ற இத்தகைய சம்பவங்கள் தமிழர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. இதை விட பௌத்தர்களே இல்லாத தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள தமிழர்களுக்குச் சொந்தமான காணிகளில் புத்தரின் சிலைகளை நிறுவும் பணிகள் பரவலாக இடம்பெற்று வருகின்றன. காலப்போக்கில் அந்தப் பிரதேசங்கள் சிங்களவர்களின் கைகளுக்குள் சென்று விடுமென்பதை அறுதியிட்டுக் கூற முடியும். நாவற்குழியில் சிங்களக் குடியேற்றமொன்று ஏற்படுத்தப்பட்டு அதன் பின்னணியில் பெரியதொரு பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளமை நல்ல சகுனமாகத் தெரியவில்லை.



### தனித்துவத்தை இழந்து வரும் யாழ்.பல்கலைக் கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் தனது தனித்துவத்தை இழந்து கொண்டிருப்பது தெளிவாகவே தெரிகின்றது. அது மட்டுமல்லாது தமிழர் பகுதிகளில் அரச துறைகளில் ஏற்படுகின்ற வெற்றிடங்களுக்கு வேறு இனத்தவர்களை நியமிக்கின்ற நடவடிக்கைகளும் அதிகரித்துவிட்டன. இதனால் தமிழ் இளைஞர்,யுவதிகள் வேலை வாய்ப்புக்களைப் பெற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். புதிய அரசமைப்பின் உருவாக்கம் கானல் நீராகவே மாறிவிட்டது. தமிழர்கள் அதிகாரப் பகிர்வைச் சிந்திக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர். இவ்வாறு அடுக்கடுக்காக ஏராளமான பிரச்சினைகள் தமிழர்களைச் சூழ்ந்து நிற்கின்றன. வடக்கு மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த வடக்கு மாகாண சபை அவர்களை முற்றாகவே ஏமாற்றிவிட்டது. இதனால் மக்களுக்கு எந்த வித நன்மையும் கிடைக்கவில்லை. ஆனால் முதலமைச்சர் உள்ளிட்ட மாகாண சபை உறுப்பினர்கள் தமக்குக் கிடைத்த வரப்பிரசாதங்களால் திண றிப்போய்விட்டார்கள். மாதாந்த ஊதியம்,படிகள், முதலமைச்ச ருக்னெ அதிக வாடகையில் வசதியான வீடுகள், வாகனங்களை இறக்குமதிசெய்வதற்காகவழங்கப்பட்ட தீர்வையற்ற வரி அனுமதிப் பத்திரத்தை விற்றுக்கிடைத்த பெருந்தொகைப் பணம் என அவர்கள் வசதி வாய்ப்புக்களைப் பெற்றனர். ஆனால் இவர்களைத் தெரிவு செய்து மாகாண சபைக்கு அனுப்பிய மக்கள் நடுத் தெருவில் நிற்கின்றனர்.

தமக்கு தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்படவில்லை என்ற ஒரே காரணத்துக்காகவே சுரேஷ் பிரேமச்சந்திரன் கூட்டமைப்பிலி ருந்து வெளியேறினார். தமது தவறான செயல்களைத் தட்டிக் கேட்பதற்கு கூட்டமைப்பி லுள்ள ஒரு பிரிவினார் முயன்றதால் விக்னேஸ்வர னும் கூட்ட மைப்பை வெறுத்து ஒதுக்கினார். புதிய கட்சியும் ஆரம்பித்தார். அதுமட்டுமல்லாது சம்பந்தனுக்கு மாற்றீடான தலைவராகத் தம்மைத் தாமே கற்பனையில் நியமித்துக்கொண்ட அவர் கூட்டமைப்பையும் அதன் தலைமையையும் கேவலமாக விமர்சனம்செய்யவும் தவறவில்லை. கூட்டமைப்புக்கு எதிரானவர்கள் விக்னேஸ்வரனுக்குக் கொம்பு சீவுகின்ற வேலையைக் கச்சிமாகவே செய்தனர்.

### ஒற்றுமை தொடர்பாகக் கதைப்பதற்கு இவர்களுக்குத் தகுதி உள்ளதா?

இதெல்லாம் நடக்குபோது வாய் மூடி மௌனிகளாக இருந்தவர்கள். அரச தலைவர் தேர்தல் இடம்பெறுவதையொட்டித் தமிழர்கள் ஒற்றுமைப்பட வேண்டுமெனக் கூறுகின்றனர். விக்னேஸ்வரனிடம் சிலர் தூது சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. தமிழர்களைப் பிளவுபடுத்தி வேடிக்கை பார்த்த விக்னேஸ்வரன், ஒற்றுமை தொடர்பாகப் பேசுவதற்கே தகுதியில்லாதவர். அது மட்டுமல்லாது அரச தலைவர் தேர்தல் தொடர்பாகத் தமிழர்கள் எந்த முகாந்திரத்துடன் ஒற்றுமைப் பட வேண்டும்? இவர்கள் ஒற்றுமைப்படுவதால் தமிழர் ஒருவர் அரச தலைவராக வந்து விட முடியுமா? அல்லது ஆட்சிக்கு வரப் போகிறவரின் மனதில் மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா?

அடுத்து இடம்பெறப்போகும் மாகாண சபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை மனதில் கொண்டு இந்த ஒற்றுமை தொடர்பாகச் சிலர் சிந்திப்பவர்களாக இருந்தால் அவர்களை விடத் தமிழினத் துரோகிகள்வேறு எவருமே இருக்க முடியாது.

உதயன்

# செய்திகள்

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

வெள்ளிக்கிழமை 16 ஒகஸ்ட் 2019



# யாழ். பல்கலை மாணவர்கள் நேற்று வகுப்புப் புறக்கணிப்பு

*யாழ்ப்பாணம், ஒக. 16*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் முன்னர் அறிவித்தவாறு நேற்று வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். மாணவர்களின் நலன் சார்ந்து மூன்று கோரிக்கைகளை முன்வைத்து வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டோம் என்று அவர்கள் தெரிவித்தனர்.*

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பட்டக் கல்வியை நிறைவு செய்த பல மாணவர்களுக்கு இது வரை பட்டமளிப்பு நடத்தப்படவில்லை. இதற்கு துணைவேந்தர் நியமனம் செய்யப்படாமை காரணமாகச் சொல்லப்படுகிறது. எனவே உடனடியாகத் துணைவேந்தர் நியமிக்கப்படவேண்டும். பட்டமளிப்பு விழாவை நடத்த வேண்டும். மூன்று மாதங்கள் காலத்துக்கு மேலாக வெளியிடப்படாமலிருக்கும் பரீட்சை முடிவுகளை வெளியிட வேண்டும். ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டோம் என்று அவர்கள் தெரிவித்தனர். (ம-த.ரி1)




## வடபகுதியில் இன்று மழை

யாழ்ப்பாணம், ஒக. 16

வடக்கு மாகாணத்தின் சில இடங்களில் இன்று பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழை பெய்வதற்குச் சாத்தியம் உள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். அதேவேளை கொழும்பிலிருந்து காலி ஊடாக மாத்தறை வரையான கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது மேற்கு முதல் தென்மேற்கு வரையான திசைகளிலிருந்து வீசக்கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30 தொடக்கம் 40 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

பொத்துவிலிலிருந்து ஹம்பாந்தோட்டை, கொழும்பு மற்றும் புத்தளம் ஊடாக மன்னார் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 தொடக்கம் 55 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடுவதுடன் அவ்வேளைகளில் கடல் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

பொத்துவிலிலிருந்து ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது சடுதியாக மணித்தியாலத்துக்கு 60 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடுவதுடன் அவ்வேளைகளில் கடல் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும்.


இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற்பிரதேசங்கள் கொந்தளிப்பாகவும் காணப்படும் என்றுள்ளது. (ம)

## கிரான்பாஸ் பகுதியில் இருவர் வெட்டிக்கொலை

கொழும்பு, ஒக. 16

கிரான்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதம்பிட்டிய மயானத்துக்கு அருகில் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு இருவர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு முச்சக்கர வண்டிகளில் வந்த பாதாள உலக குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் காரணமாகவே இந்தக் கொலைகள் இடம்பெற்றுள்ளன. மட்டக்குழியைச் சேர்ந்த 32 வயதுடைய ஆனமாலு ரங்க மற்றும் 22 வயதுடைய சி.எச்.இம்ரான் ஆகியோரே உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம)



கண்டியில் நேற்று ஆதரவாளர்களை சந்தித்த சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச, கண்டி கட்டுக்கலை பிள்ளையார் கோயிலுக்கும் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். (ம)

## ஆணைக்குழுவுக்கு வருமாறு அஜித் டயஸூக்கும் அழைப்பு

கொழும்பு, ஒக.16

சிறிலங்கன் விமான நிறுவனத்தின் முன்னாள் தலைவர் அஜித் டயஸ், கடந்த 4 வருடங்களில் அரச நிறுவனங்களில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில் விசாரணை செய்யும் அரச தலைவர் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

மத்தள விமான நிலையத்தின் ஒரு பகுதியில் நெல் களஞ்சியப்படுத்தியமை மற்றும் அரச நிறுவனங்களுக்கு நட்டத்தை ஏற்படுத்தியமை தொடர்பில் கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைய வாக்குமூலம் பெறுவதற்காகவே அஜித் டயஸ் அழைக்கப்பட்டுள்ளார். அத்துடன் புவியியல் நிபுணர் கே.எம்.அமரசேனவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின், தங்கம் கலந்த மண்ணை சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்தமை தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய அவரிடம் விசாரணை நடத்தப்படுகிறது.

இதேவேளை, கல்வி அமைச்சால் பாடசாலை சீருடைகளுக்குப் பதிலாக, வவுச்சர் வழங்கியதில் இடம்பெற்ற முறைகேடு தொடர்பிலும் இலங்கை மின்சார சபை தொடர்பில் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் குறித்தும் நேற்று ஆணைக்குழுவில் விசாரணைகள் நடைபெற்றன.

அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவால் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சட்டவிரோதமாக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடு தொடர்பிலும் ஆணைக்குழுவில் விசாரணை நடைபெற்றன.

இதனிடையே, அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேராவின் கோரிக்கைக்கு இணங்க, எதிர்வரும் 9 ஆம் திகதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. நேற்றும் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தார். (எ)

# 30 வருடங்கள் நீடித்த பிரச்சினையை ஐந்து வருடங்களில் தீர்க்க முடியாது!

## *இன்னும் ஐந்து வருடங்கள் தாருங்கள் என்று கோருகிறார் இராஜாங்க அமைச்சர் விஜயகலா*

யாழ்ப்பாணம், ஒக. 16

சிறுபான்மை மக்களை எவர் மதிக்கின்றார்களோ அவர்களுக்கே நாம் வாக்களிக்க வேண்டும். 30 வருடங்கள் நீடித்த பிரச்சினையை 5 வருடங்களில் தீர்க்க முடியாது. இன்னும் 5 வருடங்களில் எமக்கான தீர்வுத் திட்டத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தமிழ் மக்கள் ஆதரவு வழங்க வேண்டும். இவ்வாறு வலியுறுத்தினார் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன்.

மயிலிட்டி துறைமுகத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியூடாக மயிலிட்டித் துறைமுகம் இயங்க வைக்கப்பட்டுள்ளது. எமக்குப் பெரும் பொறுப்புள்ளது. கடந்த அரசு போர் காரணமாக கடந்த 30 வருடங்கள் பாதுகாப்பு வலயமாக இந்த இடங்களை வைத்திருந்தது. போர் நிறைவடைந்த பின்னர், இந்தப் பகுதிப் பாடசாலைகள், தேவாலயங்கள், கோவில்கள், தனியார் காணிகளில் இருந்த வீடுகளை இடித்துடைத்து தமக்குத் தேவையானவற்றை அமைத்த வரலாறு கடந்த கால அரசுக்கு உள்ளது.

கடந்த கால அரசு சட்டத்துக்கு முரணாகப் பல கட்டடங்களை தம்வசம் வைத்திருந்தது. இங்கிருந்து இடம்பெயர்ந்து வீதிகளிலிருந்த மக்களின் எதிர்காலத்தை ஐக்கிய தேசியக் கட்சி அரசு மாற்றிக் கொடுத்துள்ளது. கடந்த கால அரசு போரை முடிவுக்குக் கொண்டு வந்து. தமிழ் மக்களை எந்த இடத்திலும் திரும்பிப் பார்க்கவில்லை. முன்னாள் போராளிகள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் இருக்கின்றார்கள். தொழில்கள் இன்றி எமது இளைஞர்கள் இருந்தார்கள். அவற்றை எல்லாம் இந்த அரசு மாற்றி அமைத்துள்ளது.

இன்று 5 ஆயிரம் ஏக்கர் காணிகளை விரும்பியோ விரும்பாமலே மக்களிடம் கையளித்துள்ளார்கள். பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்புக்கள், தொண்டராசிரியர்களுக்கான வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. 23 ஆயிரம் சமுர்த்தி பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இந்த அரசுக்கு நன்றி கூற வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை உருவாக்குதற்கு ஒத்துழைத்தவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள். அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும்பான்மை கட்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிய வரலாறு இல்லை. ஆனால், எமது ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே வாக்களித்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியில் இருந்தபோது, அவர்களுக்கு அப்பால் இன்னொரு சக்தி வடக்கு-கிழக்கை ஆட்சிபுரிந்துகொண்டிருந்தது.

எமக்குத் தீர்வுத் திட்டம் வேண்டும். அதைத் தருவார்கள் என்று உணர வேண்டும். கடந்த காலங்களில் பல தலைவர்கள் வந்தார்கள். அவர்களிடம் இருந்து நாங்கள் ஏமாற்றப்பட்டோம்.

சந்திரிகா பண்டாரநாயக்க 2 தடவைகள் அரசதலைவராக இருந்தார். மகிந்த ராஜபக்ச 2 தடவைகள் அரசதலைவராக இருந்தவர். நாங்கள் கொண்டு வந்த தற்போதைய அரச தலைவர், எம்மை கடந்த ஒக்ரோபர் மாதம் நடு வீதியில் விட்டுவிட்டார். அதேபோன்ற ஓர் அரசதலைவரைத் தெரிவு செய்யாது, வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் - முஸ்லிம்களுக்குத் தீர்வைத் தரக்கூடிய ஒரு தலைவரைத் தெரிவு செய்ய வேண்டும்.

சிறுபான்மை மக்களை எவர் மதிக்கின்றார்களோ அவர்களுக்கு நாங்கள் வாக்களிக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியதற்கு இணங்க, தமிழ் மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு கடந்த தவணை வாக்களித்தீர்கள். 30 வருடங்கள் நீடித்த பிரச்சினையை 5 வருடங்களில் தீர்க்க முடியாது. எனவே, அடுத்த 5 வருடங்களில் தீர்வுத் திட்டம் உட்பட இளையோருக்கும் வேலைவாய்ப்பு, உட்கட்டமைப்பு, உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைப் பெற்றுக்கொள்வதோடு, எதிர்காலத்தில் எமக்கான தீர்வுத் திட்டத்தைப் பெற்றுச் சாதித்துக் கொள்ள வேண்டும் - என்றார். (த-106)



# உலர் உணவு பொருள்கள் கையளிப்பு

காங்கேசன்துறை,ஓக. 16
உடுவில் பகுதியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளைக் கொண்ட பெண் தலைமைத்துவக் குடும்பத்துக்கு ஒரு தொகுதி உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. காங்கேசன்துறை கோல்டன்லயன்ஸ்கழகத்தால் இந்த உதவி வழங்கப்பட்டது.

கழகத்தின் செயற்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது, கழகத் தலைவர் லயன் கலாநிதி கா.பீ.ஜெயவிந்தன், செயலர் லயன்.த.தசிதரன், பொருளாளர்லயன்சீமாட்டி அடம்சியா ஆகியோரால் உதவிப்பொருள்கள்வழங்கப்பட்டன. (ஐ-9)



# வீதிவிபத்தில் ஒருவர் காயம்

கொடிகாமம்,ஓக.16
மூடுந்துடன் உந்துருளி மோதியதில் ஒருவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்த விபத்து கொடிகாமம் சந்தியில்நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

உந்துருளியில் பயணித்த பாலாவிவடக்கைச்சேர்ந்த ஜெனன் (வயது-26)என்ற இளைஞனே காயமடைந்தார்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (ஐ-159)

# அடிக்கல் நடும் நிகழ்வு

பருத்தித்துறை,ஓக.16
பருத்தித்துறை மந்திகை ஆதார மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்றுகாலை8.30மணிக்கு இடம்பெறவுள்ளது.

நெதர்லாந்துஅரசின்இலகு கடன் உதவியுடன் அமைக்கப்படவுள்ள கட்டடத்துக்கு சுகாதாரபோசணைமற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ராஜித சேனாரத்னவால் அடிக்கல் நடப்படவுள்ளது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-9)


## டச்சுக்கால ஓலைச் சுவடியை வைத்து

# யாழ். நல்லூர் மந்திரிமனையை சிங்களவர் உரிமைகோருகிறார்

## நல்லூர்ப் பிரதேச செயலகம் ஆராய்கிறது

*யாழ்ப்பாணம், ஓக.16*

*டச்சுக் கால ஆட்சியில் பயன்படுத்தப்பட்ட ஓலைச் சுவடியை ஆவணமாகக் கொண்டு, நல்லூர் மந்திரிமனை அமைந்துள்ள காணி தனக்குச் சொந்தமானது என்று தெரிவித்து பெரும்பான்மை இனத்தைச்சேர்ந்தவர் உரிமை கோருகிறார். குறித்த நபர் ஓலைச்சுவடியை காணி உரித்துத் திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்தில் காட்டி உரிமை கோருகிறார் என்று திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.*



குறித்தநபர் பண்டாரகமவைச்சேர்ந்தவர். தனக்குச் சொந்தமான காணியில் மந்திரிமனை அமைந்துள்ளது என்று கூறி காணி அமைச்சின் கடிதத்துடன் காணி ஆவணமாக ஓலைச் சுவடியையும் கொண்டு குறித்த திணைக்களத்துக்குச் சென்றுள்ளார். உரிமைக்கான கோரிக்கைக்கடிதத்தைக் கொடுத்துள்ளார்.

அவரின்கோரிக்கையைக்கேட்டறிந்த திணைக்களத்தினர், ஓலைச் சுவடி ஏற்றுக்கொள்ள முடியாத ஆவணம். பிரிட்டன் ஆட்சியின் பின்னர் இலங்கைச் சட்டப்படி காணி உறுதியையே காணி உரித்து ஆவணமாக ஏற்றுக் கொள்ள முடியும். ஆனால் காணி தொடர்பான கோரிக்கையைக் குறித்த நபர் முன்வைத்தமையால் பிரதேச செயலருக்குத் தெரியப்படுத்தி அதற்கான பதிலை குறித்தநபருக்கு வழங்குவதாகக் கூறியுள்ளனர்.

"காணி உரித்து நிர்ணயத் திணைக்களம் ஊடாகக் குறித்த விடயம் பிரதேச செயலருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. மந்திரிமனை நல்லூர்ப் பிரதேச செயலக எல்லைக்குள் அமைந்துள்ளது. தற்போது மந்திரிமனை உள்ள காணி சட்டநாதர்சிவன்கோவில் ஆலய தர்ம கர்த்தா சபையின் நம்பிக்கை நிதியச் சொத்தாக உள்ளது. ஆகவே இந்த விடயம் தொடர்பாக அவர்களுக்குத் தெரியப்படுத்தப்படவுள்ளது" என்று பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர்.

"மந்திரிமனை இலங்கைஅரசின் தொல்பொருள் மூலாதாரச்சொத்தாக உள்ளது. 2007ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி அரச பாதுகாக்கும் மூலாதாரமாகத் தெரிவித்து ஆயிரத்து 486 ஆம் இலக்க அரசிதழ் வெளியிடப்பட்டது. நல்லூர் ஆலயத்தில் இருந்து 0.9 கிலோமீற்றர் தூரத்தில் ஜே/107 கிராம அலுவலர் பிரிவில் பாதுகாக்கப்படும் தொல் பொருள் மூலாதாரச் சொத்தாக இது காணப்படுகின்றது" என்று அரச தகவல்மையம் தெரிவித்தது. (த-7)

# விழிப்புணர்வு கருத்தரங்கு

கொழும்புத்துறை,ஓக.16
திண்மக்கழிவு முகாமைத்துவம்தொடர்பானவிழிப்புணர்வுக் கருத்தரங்கு கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

கொழும்புத்துறை சென். றொசாறியன் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் அரியாலை சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தால் இந்தக் கருத்தரங்கு இடம்பெற்றது.

சனசமூக நிலையத் தலைவர் எஸ்.யேசுதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலைய கள முகாமையாளர் செ.வருணன் வளவாளராகக் கலந்துகொண்டு, பொலித்தீன் பாவனைத் தவிர்ப்பு மற்றும்திண்மக்கழிவுகள் தொடர்பான விழிப்பூட்டலைவழங்கினார்.

ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி றோய்பேடினன் அடிகள் சிறப்புக் கருத்துரைகளைவழங்கினார். துணியிலான பைகள் இலவசமாக வழங்கப்பட்டன. (ஐ-135)

# உறுப்புரிமையை உறுதிப்படுத்தவும்

சாவகச்சேரி, ஓக.16
கமநலசேவைகள் திணைக்களத்தின் கமக்கார அமைப்புகளின் உறுப்பினர்கள் புதிய விண்ணப்பப் படிவங்கள் மூலம் உறுப்புரிமையை உறுதிப்படுத்தும் பணிகளை ஆரம்பித்துள்ளனர். இதன் பிரகாரம் ஒவ்வொரு கமக்கார அமைப்புக்குட்பட்ட உறுப்பினர்கள் தமது பிரிவு அமைப்பில் உரிய படிவத்தைப் பெற்று உறுப்புரிமைக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. நுணாவில் மேற்கு கமக்கார அமைப்பால் அங்கத்தவர் உறுப்புரிமை பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டுவருவதாக அமைப்பின்தலைவர் சு.பூபாலசிங்கம் அறிவித்துள்ளார். (ஐ-9)

# கை துண்டாடப்பட்ட நிலையில் இளைஞன் சிகிச்சைக்கு சேர்ப்பு

கொடிகாமம், ஓக. 16
இளைஞனின் கை துண்டாடப்பட்ட நிலையில் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். இனந்தெரியாதவரின்வாள்வெட்டுக்கு இலக்காகி இந்தநிலைஏற்பட்டுள்ளதுஎன்று தெரிவிக்கப்பட்டது. இந்தச்சம்பவம்மந்துவில்மேற்கில்நேற்றுமுன்தினமிரவு இடம் பெற்றது. மந்துவில் மேற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த 25 வயதுடையவரே இந்த நிலைக்கு ஆளானார்.

தனது பிறந்தநாளுக்காக பொருள்கள் வாங்கக் கடைக்குச்சென்றபோது வழிமறித்த இனந்தெரியாத நபரின் வாள் வெட்டுக்கு இலக்காகி கை துண்டாடப்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். இது தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-159)

# திருக்கேதீச்சர அலங்கார வளைவை அமைப்பது பற்றிய பேச்சு தொடரும்

யாழ்ப்பாணம், ஓக. 16
திருக்கேதீச்சர ஆலய வளைவு அமைப்புத் தொடர்பில் அடுத்த கட்டமாக இரு தரப்பும் ஒன்றாகச் சந்திப்பதோடு, இணக்கப்பாட்டுடன் வளைவை மீண்டும் அமைக்க முயற்சிகள் இடம்பெறுகின்றன என்று தெரிவிக் கப்பட்டது.

முயற்சிகள் நிறைவடையும்வரை எந்தவித ஊடக அறிக்கைகளும் வெளி விடுவதில்லை என்றும் தீர்மானிக் கப்பட் டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

மன்னார் திருக்கேதீச்சர வளைவு தொடர்பான சர்ச்சைக்குத் தீர்வு எட்டும் வகையில் நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் மன்னார் ஆயர் மற்றும் திருக்கேதீச்சர ஆலய நிர்வாகத்தினரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போதே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் மகா சிவராத்திரி பூசை வழிபாட்டு ஏற்பாடுகளின்போது மன்னார் திருக்கேதீச்சர ஆலய வீதியில் அமைக்கப்பட்டிருந்த ஆலய வளைவைப் புதுப்பிக்க முயன்ற சமயம், சில கத்தோலிக்க மதகுருமார் மற்றும் கிறிஸ்தவ மக்களால் வளைவு பிடுங்கி அழிக்கப்பட்டது.

இது பெரும் சர்ச்சையாக உருவெடுத்து அதன்பின் நீதிமன்றம் சென்றும் அது மீள அமைக்கப்படவில்லை.

இவ்வாறு வளைவு சீரமைக்கப்படாத விடயம் சைவ மக்களிடத்தில் பெரும் அதிருப்தியாக உருவெடுத்துள்ள நிலையில் அதனைப் பயன்படுத்தி தென்னிலங்கை சக்திகளும் இனத்தையே கூறுபோடும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளன என்று குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்படுகின்றன.

இந்த நிலையில் குறித்த விடயத்துக்கு மத ரீதியிலேயே இரு மதங்களின் இணக்கத்துடன் தீர்வை எட்டும்நோக்கில் கடந்த வாரம் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் உள்ள சைவ சமய குரு முதல்வர்களை நல்லை ஆதீனத்தில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இதன் பிரகாரம் குறித்த விடயத்துக்குத் தீர்வு எட்டும் நோக்கில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

குறித்த சந்திப்பில் இரு தரப்பும் சர்ச்சை இன்றி முன்னர் இருந்த வளைவை இரு தரப்பின் இணக்கத்துடன் அமைப்பது தொடர்பிலேயே அதிக கவனம் செலுத்தப்பட்டது.

இது குறித்து மீண்டும் இரு தரப்பும் சந்தித்து இந்த விடயம் தொடர்பில் பணிகளை முன்கொண்டு செல்வதை விரைவுபடுத்தும், அதுவரை பேச்சுத் தொடர்பில் எந்தவித மான அறிக்கைகளும் வெளியிடுவதில்லை எனவும் இரண்டு பகுதியினரும் இணங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-105)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஓக.16
இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு வருகைதரும் போதனாசிரியர்களுக்கானவிண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகவல்தொடர்பாடல்தொழில்நுட்பவியலாளர், கணினி பட வரைஞர், கணினி வன்பொருள் திருத்துநர், முன்பள்ளி ஆசிரியர், மின்னிணைப்பாளர், காய்ச்சி ஒட்டுபவர், அலுமினியம் பொருத்துநர், நீர்க்குழாய் பொருத்துநர், வளி சீராக்கி மற்றும் குளிர்சாதன உபகரணங்கள்திருத்துநர், பெண்கள்சிறுவர்களுக்கானஆடைவடிவமைப்பாளர், அறைப் பராமரிப்பாளர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர், வெதுப்பாளர், கட்டட அமைப்பு உதவியாளர், மரவேலை தொழினுட்பவியலாளர், உந்துருளி திருத்துநர், முச்சக்கரவண்டி திருத்துநர், டீசல்பெற்றோல்வாகனஇயந்திர திருத்துநர் ஆகிய தொழிற்பயிற்சிகற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தக் கற்கைநெறிகளை கற்பிப்பதற்கு பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட துறைகளில் டிப்ளோமா அல்லது என்.வி.கியூ 5,என்.வி.கியூ 4சான்றிதழ்மற்றும்ஒருவருடகாலத்துக்குமேல்இந்தத்துறையில் செயல்முறையுடன் கூடிய கற்பித்தல்அனுபவம்உள்ளவர்கள்விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரிகள்தமதுசுயவிவரக்கோவையை"உதவிப்பணிப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை,வீரசிங்கம் மண்டபம்,இல.12/4,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் (0212227949) என்ற முகவரிக்கு எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறுகேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

# தூக்கில் தொங்கிய நிலையில் சடலம்மீட்பு

*அடையாளம் காணுமாறு பொலிஸார் அறிவிப்பு*

சாவகச்சேரி,ஓக.16
தூக்கில் தொங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர். யாழ்ப்பாணம் சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி கிறிஸ்தவ சேமக்காலையின் பின்பகுதியில் இருந்துநேற்றுமுன்தினம் மாலை சடலம் மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட 48 வயதுமதிக்கத்தக்க குறித்த ஆணின் சடலத்தை அடையாளம் காட்டி உதவுமாறு பொலிஸாரால்அறிவிக்கப்பட்டுள்ளது.

அப் பகுதியில் மாடு மேய்க்கச் சென்றவர் வழங்கிய தகவலையடுத்து பொலிஸார்சடலத்தைமீட்டுசாவகச்சேரி ஆதார மருத்துவமனை சவச்சாலையில் ஒப்படைத்துள்ளனர்.(ஐ-9)

# கூடுதலான தயிரை விற்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.16
நல்லூரில் உள்ள கூட்டுறவு உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையத்தில் கூடுதலான தயிரை கொள்வனவு செய்து அதனை விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வன்னிப்பிரதேசத்தில் உள்ள கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் தயிர் இந்த விற்பனை நிலையம் ஊடாக நுகர்வோருக்கு வழங்கப்படவுள்ளன. நல்லூர் கந்தன் ஆலயத்துக்குவருகை தரும் பக்தர்கள் தமக்குத் தேவையான தயிரை இந்த நிலையத்தினுடாகப் பெற்றுக்கொள்ள முடியும். தயிர் பைக்கற் யாவும் நியாயவிலையில் விற்பனை செய்யப்படும் என்று உள்ளூர் உற்பத்தி விற்பனை கூட்டுறவு நிலையம் தெரிவித்தது. (ஐ-17)

# பொருளாதார அபிவிருத்தி நிலையம் யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவுள்ளது

## *விவசாய ஆராய்ச்சி உற்பத்தி நிலைய திறப்பு விழாவில் அமைச்சர் ஹரிசன் தெரிவித்தார்*

யாழ்ப்பாணம், ஓக. 16

யாழ்ப்பாணத்தில் பொருளாதார அபிவிருத்தி நிலையம் ஒன்றைத் திறக்கவிருக்கிறோம். இந்த நிலையத்தில் விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தி வருமானத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று விவசாயம், கிராமிய பொருளாதாரம், பண்ணை வள அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் ஹரிசன் தெரிவித்தார்.



யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் நேற்று நடந்த விவசாய ஆராய்ச்சி உற்பத்தி நிலையத் திறப்பு விழாவில் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;
இங்குள்ள விவசாய ஆராய்ச்சி நிலையம் சுமார் 60 வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டது. அருகிலுள்ள பழைய கட்டடத்திலேயே இந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 300 இலட்சம் ரூபா செலவில் புதிய ஆராய்ச்சி நிலைய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள விவசாயிகள் ஏதுமற்றவர்கள், மற்றவர்களுக்குத் தொந்தரவு செய்யாத விவசாயிகள். அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும், சிறந்த அறிவுரைகளையும் வழங்கினால் எவருக்கும் எந்த விதமான பிரச்சினையும் இல்லாது விவசாயம் செய்து நல்ல முறையில் தங்களுடைய வாழ்க்கையை நடத்தக் கூடியவல்லமைஅவர்களுக்குஉண்டு.

**உள்ளூர் உற்பத்திக்கு முன்னுரிமை**

இங்குள்ள முக்கியமான விடயம் உருளைக்கிழங்குப் பிரச்சினை. அதே போன்று உளுந்துப் பிரச்சினையும் இருக்கிறது. அதிகளவு உளுந்துச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் அதனை விற்பனை செய்ய முடியாத நிலை உள்ளது. ஏனென்றால் எங்களுடைய உளுந்து சந்தைக்கு வரும்போது இறக்குமதிசெய்யப்பட்ட உளுந்துகளுடன் போட்டி போடுவதால் எங்களுடைய உள்ளூர் விவசாயிகள் உளுந்தைச் சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. இனிமேல் நான் உளுந்தின் வரியை அதிகரிக்கவுள்ளேன். வரியை அதிகரித்ததால் உளுந்துக்கு எல்லாக் காலத்திலும் நல்ல விலை கிடைக்கும். சின்ன வெங்காய விடயத்திலும் இதே நிலைதான். எந்தநாளும் நடைமுறையில் இருக்கும் வகையில் சின்ன வெங்காயத்துக்கு வரி அறவிடப்படுகிறது. இதனால் எந்தப் பிரச்சினையும்



இல்லை. விவசாயிகள் சின்ன வெங்காயத்தை உற்பத்தி செய்ய முடியும். அதேபோன்று நிலக்கடலையைப் பொறுத்த வரை இந்த நாட்டில் நாங்கள் தன்னிறைவடைந்துள்ளோம். எனவே எதிர்காலத்தில் இந்த நிலக்கடலை உற்பத்தி முற்றாகத் தடைசெய்யப்படும். இதேபோன்று கௌப்பி, பாசிப்பயறு போன்றவற்றின் உற்பத்திகளை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அவற்றுக்கும் நாங்கள் வரிஅறவிட்டு எங்களுடைய விவசாயிகள் சந்தைப்படுத்தக்கூடிய முக்கிய வழிவகைகளைச் செய்துள்ளோம். உருளைக் கிழங்கு உற்பத்தியைப் பொறுத்த வரையில் மலைநாட்டில் குறிப்பாக நுவரெலியாவிலும், வெளிமடையிலும் மாத்திரம் செய்தால் நாங்கள் எங்களுக்குத் தேவையான உருளைக்கிழங்கை உற்பத்திசெய்ய முடியாது.

**உதவி, ஒத்தாசை வழங்கப்படும்**

எனவே யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளிலும் நாங்கள் உருளைக்கிழங்கை உற்பத்திசெய்யவேண்டும். உற்பத்தி செய்வதற்கான சகல தொழில்நுட்ப ஆலோசனைகளையும், உதவி, ஒத்தாசைகளையும், ஏற்கக்கூடிய விவசாயத் திணைக்களம் உங்களுக்கு வழங்கும்.

2018ஆம் ஆண்டு சிறுபோகத்தில் அழிவேற்பட்டவர்களுக்கான இழப்பீடுகளை முற்காகவே கொடுத்து முடித்துள்ளோம். யாழ்ப்பாணத்தில் உள்ள விவசாயிகளுக்கு இன்னும் இழப்பீடுகள் கிடைக்கவில்லை என்று எவரும் சொல்லமுடியாது. அதே போன்று 2018ஆம் ஆண்டின் காலபோகத்தின் அழிவுக்கான இழப்பீடுகளையும் இன்று (நேற்று) வழங்குகிறோம். கிட்டத்தட்ட 350 மில்லியன் ரூபா வரை செலவிட்டு இந்த இழப்பீட்டை உங்களுக்கு வழங்குகின்றோம்.

**புதிய இன உற்பத்தி**

இந்தக் கட்டடம் திறக்கப்பட்டபின்னர், இங்கும் முதன்மையான ஆராய்ச்சிகள் இடம்பெறும். அதனூடாக புதிய இனங்கள் உற்பத்தி செய்யப்படும். அதை உங்களுக்கு வழங்குவதனூடாக உங்கள் விவசாய உற்பத்திகளை நீங்கள் அதிகரித்துக்கொள்ளமுடியும். வடக்கு மாகாணத்தில் மண் பரிசோதனை செய்யக் கூடிய வசதிகளும் இங்கு கிடைக்கும். எனவே அதனூடாகவும் சிறந்த பயனை இங்குள்ள விவசாயிகள் பெற்றுக்கொள்ளமுடியும்.

உற்பத்தி போன்று ஏற்றுமதி செய்யும் துறையிலும் நாங்கள் ஈடுபட்டு வருகிறோம். இங்குள்ள விவசாயிகள் ஏற்றுமதியில் ஆர்வம் கொண்டவர்களானால் அதற்கான ஆலோசனை வழங்குவதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**விரைவில் நியமனம்**

இந்த மாவட்டத்திலே நிலவும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களுக்கும், விவசாயப் போதனாசிரியர்களுக்கும் நிலவும் குறைபாடுகளையும், அந்த வெற்றிடங்களை முழுமைசெய்யுமாறும், இங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி என்னிடம் கோரிக்கை விடுக்கின்றார் கள். அந்தக் கோரிக்கையையும் நான் விரைவில் நிறைவேற்றுவேன். வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு என்று ஒரு அமைச்சரவைப் பத்திரத்தினூடாக விவசாய ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளையும் நான் மேற்கொள்ளவுள்ளேன்- என்றார். (து-21)

# சக்கர நாற்காலி கையளிப்பு

வடமராட்சி,ஓக.16
கிளிநொச்சி வட்டக்கச்சி கட்சன் வீதியில் வசிக்கும் முன்னாள் போராளியான பொன்கலனுக்கு சக்கர நாற்காலி ஒன்று வழங்கி வைக்கப்பட்டது.

புலம்பெயர்ந்த உறவுகளின் அனுசரணையில் பொற்பதி மக்கள் நலன்புரி சங்க தலைவர் அசோவால் இந்த உதவி வழங்கி வைக்கப்பட்டது.

பயனாளியின் வீட்டுக்கு நேற்றுமுன்தினம் நேரடியாகச் சென்ற ஜனநாயக போராளிகள் கட்சித் தலைவர் ச.வேந்தன், பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினர் ஆ.சுரேஸ்குமார் மற்றும் உறுப்பினர்கள் இணைந்து இந்த உதவியை வழங்கியிருந்தனர். (ஐ-26)

# வீதிகள் திறப்பும் மதிப்பளிப்பும்

அளவெட்டி,ஓக.16
சீரமைக்கப்பட்ட இரு வீதிகளின் திறப்பும், மதிப்பளித்தல் நிகழ்வும் நாளைமறுதினம் யாழ்ப்பாணம் தொல்புரத்தில் நடைபெறவுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் நிதி ஒதுக்கீட்டில் சீரமைக்கப்பட்ட சர்வோதய வீதி,கண்டாமை கிளை வீதி ஆகியன திறந்து வைக்கப்படவுள்ளன.

தொடர்ந்து அகில இலங்கை சமாதான நீதிவான் பட்டம் பெற்ற வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ச.ஜெயந்தனுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

தொல்புரம் சர்வோதய மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு தொல்புரம் மத்திய சனசமூக நிலையம் செயலர் க. முருகானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வுகளில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் .ஈ.சரவணபவன்,சிறப்பு விருந்தினராக வலி. மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் த.நடனேந்திரன், மதிப்புறு விருந்தினராக சட்டத்தரணி திருமதி சாருஜா மயூரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(ஐ-63)

# கடந்த வருட காலபோக பயிர் அழிவுக்கு இந்த வருடமே இழப்பீடு வழங்கி நிறைவு

யாழ்ப்பாணம், ஓக.16
வடக்கு மாகாணத்தில் 2018ஆம் ஆண்டு காலபோகப் பயிர் செய்கையின்போது ஏற்பட்ட பயிர் அழிவுக்கான இழப்பீடுகள் நடப்பாண்டில் காலபோகச் செய்கைக்கு விவசாயிகள் தயாராகும்போதே கிடைக்கப்பெறுகின்றன. கட்டம் கட்டமாக இழப்பீடுகள் வழங்கி வைக்கப்பட்டாலும், நேற்றைய தினமே அந்த இழப்பீடுகள் வழங்குவது நிறைவுக்கு வந்தது.


யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர், யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்ட விவசாய ஆராய்ச்சி நிலையத்தை நேற்று பகல் திறந்து வைத்தனர். திருநெல்வேலியில் உள்ள விவசாய ஆராய்ச்சி உற்பத்தி நிலை யத்தில் இது நடைபெற்றது. இந்த நிகழ்வில் வைத்தே



இழப்பீடுகள் வழங்கப்பட்டன.

இந்த இழப்பீடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் கடிதம் அனுப்பப்பட்டு, அந்தக் கடிதத்துடன் விவசாயிகள் நிகழ்வுக்கு வருகை தந்திருந்தனர். கூடியது 75ஆயிரம்ரூபாபெறுமதியான இழப்பீடுகளிலிருந்து பயிர் அழிவுக்கான இழப்பீடுகள் மதிப்பீடு செய்யப்பட்டு நேற்று வழங்கப்பட்டிருந்தது.

குடாநாட்டின் பல பாகங்களைச் சேர்ந்த விவசாயிகள் வருகை தந்திருந்தனர். காலை 9 மணிக்கு வந்த அவர்கள் பிற்பகல் 2மணிக்கே தங்களுக்கான இழப்பீடுகளைப் பெற்றுக்கொண்டு வீடு திரும்பினர். நிகழ்வில் கலந்துகொண்ட பலர் நேரமுகாமைத்துவத்தால் சிரமங்களை எதிர்கொண்டமையை அவதானிக்க முடிந்தது. (து-21)



## மருத்துவமனை வளாகம் துப்புரவு செய்யப்பட்டது

வடமராட்சி.ஓக.16
பருத்தித்துறை ஆதார மருத்துவமனை வளாகத் துப்புரவுப் பணி நேற்று முன்னெடுக்கப்பட்டது. மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.
இதனை முன்னிட்டு மருத்துவமனை அத்தியட்சகர் தலைமையிலான குழுவினர் துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர்.
நெதர்லாந்து அரசின் இலகுக்கடன் உதவித் திட்டத்தால் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு அமைக்கப்படவுள்ளது. (ஜ-173)



## இடர் முகாமைத்துவத் திட்ட மீளாய்வுச் செயலமர்வு

திருகோணமலை,ஓக.16
திருகோணமலை மாவட்ட இடர் அபாயக் குறைப்பு முகாமைத்துவத் திட்டம் தொடர்பான மீளாய்வுச் செயலமர்வு ஒன்று நேற்று இடம்பெற்றது.
திருகோணமலை ஜேகப் ஹோட்டலில் மாவட்ட மேலதிக செயலர் கே.அருந்தவராஜா தலைமையில் நடைபெற்றது.
மாவட்டத்தில் தயாரிக்கப்பட்ட இடர் முகாமைத்துவத் திட்டத்தை மீளாய்வு செய்து அதனை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் இந்தச் செயலமர்வு இடம்பெற்றது.
மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தின் ஒழுங்கமைப்பில் திருகோணமலை சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் அனுசரணையில் நடைபெற்ற செயலமர்வில், இடர் முகாமைத்துவ நிலையத்தின் திருமலை மாவட்ட உதவிப் பணிப்பாளர் க.சுகுணதாஸ், சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் சம்மேளன முகாமையாளர் ஆர்.ஆரியரத்தினம், திட்ட அலுவலர் டி.சந்திரபவன் பிரதேச செயலர் அலுவலகங்களைச் சேர்ந்த அலுவலர்கள், முப்படையினர், பொலிஸ் அலுவலர்கள் மற்றும் தொடர்புபட்ட திணைக்களங்களின் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஜ-40)

# கூமாங்குளம் தேவாலயத்துள் சென்று தகாத வார்த்தைகள் எழுதிய விசமிகள்

*பொலிஸார் தேடுதல் நடத்தி விசாரணை*

*வவுனியா, ஓக. 16*
*வவுனியா கூமாங்குளம் பகுதியில் தேவாலயத்துள் நேற்றுமுன்தினமிரவு சென்ற விசமிகள் தகாத வார்த்தைகளை எழுதியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அதனையடுத்து அந்தப் பகுதியில் பொலிஸார் தேடுதலில் ஈடுபட்டனர்.*



வவுனியா கூமாங்குளம் முறியாகுளம் பகுதியிலுள்ள புனித இராஜப்பர் தேவாலயத்தில் இந்த நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. நேற்று மாலை தேவாலயத்துக்குச் சென்றவர்கள் சிலுவைக்கு அருகே வைக்கப்பட்டுள்ள பூச்சாடி எரியூட்டப்பட்டிருப்பதை அவதானித்து நிர்வாகத்துக்குத் தெரியப்படுத்தினர். தேவாலயத்தின் பின் பின்பகுதியூடாக உள்ளே சிலர் சென்றுள்ளனர் என்றும் - நிறப் பூச்சைப் பயன்படுத்தி ஆலயத்தின் சுவரில் தகாத வார்த்தைகள் எழுதியுள்ளனர் என்றும் -தேவாலய நிர்வாகத்தினர் பொலிஸாருக்குக் கூறியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸ் பொறுப்பதிகாரி சம்பத் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மோப்ப நாயின் உதவியுடன் தேடுதலை மேற்கொண்டனர்.
திருட்டுச் சம்பவங்கள் எவையும் இடம்பெறவில்லை.
இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (த)

## சந்திப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.16
யாழ்ப்பாணம் தமிழ்த்தாய் மன்றத்தின் 30 ஆவது ஆண்டு கொண்டாட்டங்கள் தொடர்பான சந்திப்பு இன்று வெள்ளிக்கிழமை மன்றப் பணி மனையில் ( இல. 31, புதிய செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கு) மாலை 5 மணிக்கு தலைவர் வே. நவமோகன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ)

## டெங்கு ஒழிப்பு

கம்பகா மாவட்டத்தை கேந்திரமாகக் கொண்டு சிறப்பு டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.
இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 36 ஆயிரத்து 858 பேர் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேநேரம், வருடத்தில் அதிக நோயாளர்கள் கடந்த ஜூலை மாதத்திலேயே பதிவாகியுள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ)

# நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 16
நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழாவின் பக்தி நிகழ்வுகள் வரிசையில் சிறிலசிறி ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பஜனை நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இன்று உடுவில் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கந்தரோடை வற்றாக்கை அம்மன் ஆலயப் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

★ ★ ★ ★

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இடம்பெற்று வருகின்ற "கந்தபுராண எழுச்சி அருள்நெறியில் இன்று மாலை 6.30 மணிக்கு வணக்கத்துக்குரிய வேதாந்த மடம், சிவகுருநாத பீடக் குரு பீடாதிபதி ஸ்ரீமத் வேத வித்தியாசாகரர் சுவாமிகள் மற்றும் இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர், சிவஸ்ரீ கு.வைத்தீஸ்வரக் குருக்கள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க .இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரனின் தலைமையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர், பேராசிரியர், கலாநிதி என்.சண்முகலிங்கன் முதன்மை விருந்தினராகவும், வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் எந்திரி, வே.பிரேமகுமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்க நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.
உடுவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இணுவில், கந்தசுவாமி அறநெறிப் பாடசாலை மற்றும் கோப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட, உரும்பிராய் கற்பக விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், யாழ்ப்பாணம் யூனியன் கல்லூரி ஆசிரியர், சைவப்புலவர் ச.முகுந்தனின் "காம தகனம்" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன.
சிறப்புச் சொற்பொழிவின்போது மாணவர்களிடையே சொற்பொழிவு தொடர்பான வினாக்கள் உள்ளடங்கிய வினாத்தாள் வழங்கப்பட்டுச் சிறப்புத் திறனை வெளிப்படுத்துவோருக்குப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.
இன்றைய தின நிகழ்வுகளின் சிறப்பு நிகழ்வாக கலாவித்தகர், திருமதி ஜெயகௌரி செல்வமோகனின் இசைக்கச்சேரி நிகழ்வும் இடம்பெறவுள்ளது என்று இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

★ ★ ★ ★

நல்லூர்க் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் தினமும் தெய்வீக இசையரங்கு நடத்தப்பட்டு வருகிறது.
தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அனுசரணையுடன் இலங்கை இளங்கலைஞர் மன்றத்தால் தினமும் மாலை 6.45 மணி தொடக்கம் 8.15 மணி வரை தெய்வீக இசையரங்கு நடத்தப்பட்டுவருகிறது.
தெய்வீக இசையரங்கில் இன்று வீணை இசை, இசைக்கச்சேரி என்பன இடம்பெறவுள்ளன.
வீணை இசையை கவிதா வாமதேவனின் மாணவர்களும், கீபோட் து.பிரசன்னன்,மிருதங்கம் து.பிரசாந்தன்,தபேலா ந.கேதாரநாத் ஆகியோரும் இசைக்கச்சேரியில் பா[illegible] சுரேந்திர நரேந்திரா,வ[illegible] ஜெயராம்,மிருதங்கம் ஞா.வசந்,கெஞ்சிரா ஜே.யுதிர்ஸ்றன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (ஜ)

## அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.16
யாழ்ப்பாணம், அளவெட்டி வடக்கு அரசடி வைரவர் ஆலயத்துக்குத் தண்ணீர்த் தாங்கி அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார். இதற்காக 5 லட்சம் ரூபா நிதியை நாடாளுமன்ற உறுப்பினர் வழங்கியுள்ளார். (ஜ-63)

## இந்துமாநாடும் முத்தமிழ் சங்கமமும்

கிளிநொச்சி,ஓக.16
பன்னாட்டு இந்து இளைஞர்பேரவையின்இந்துமாநாடும் முத்தமிழ் சங்கம நிகழ்வும்நாளைமறுதினம் ஞாயிற்றுகிழமை கிளிநொச்சி கூட்டுறவுச்சபை மண்டபத்தில் மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளன.
இலங்கையில்கடந்தஐந்து வருடங்களாக பன்னாட்டு இந்து இளைஞர் பேரவையின் இந்து மாநாடு சிறப்பாக நடைபெற்று வருகிறது. இவ்வருடமும் கிளிநொச்சியில்நடைபெறவுள்ளது.
நிகழ்வில் தமிழ்நாட்டிலிருந்து கௌமார மடாலய ஆதீனம் முனைவர் தவத்திருகுமரகுருபரசுவாமிகள் மற்றும் ஸ்ரார் விஜய் தொலைக்காட்சி தெய்வீக சங்கம நிகழ்ச்சி தொகுப்பாளர் சிவத்தமிழ் சிரோன் மணிதிருமதி[illegible], ஈழம் மற்றும்பிரித்தானியாவின் சமயப்பெரியார்கள், அறிஞர்கள்எனப்பலரும்கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.(ஜ-402)

# இந்தியாவின் 73ஆவது சுதந்திர தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக. 16
இந்தியாவின் 73ஆவது சுதந்திர தினம் யாழ்ப்பாணத்தில் நேற்றுச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் தூதரக பணிமனையில் கொன்சியூலர் ஜெனரல் சங்கர்பாலசந்திரன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. தேசியக் கொடி ஏற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. இதில் மதத் தலைவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (கு-7)



# தமிழ் தேசத்தையும் இறைமையையும் இந்திய நாடாளுமன்று ஏற்கவேண்டும்

## மோடியிடன் கோருகின்றது முன்னணி

முல்லைத்தீவு, ஓக. 16

இந்தியா தான் விரும்பும் ஒருவரை அரச தலைவராகத் தெரிவுசெய்யவிரும்புகிறதென்றால், அவருக்குத் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றது என்றால் இந்திய நாடாளுமன்றத்தில் இலங்கையின் தமிழ்த் தேசத்தையும் அதன் இறைமையையும் அங்கீகரிக்கவேண்டும். அதாவது தமிழ் மக்கள் பேரவை தயாரித்துள்ள தீர்வுத் திட்டத்தின் அடிப்படை யில் அரசியல் தீர்வு பெற்றுத்தரப்படும் என்ற உத்தரவாதத்தை இந்தியா தர வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலர் செ.கஜேந்திரன் தெரிவித்தார். வானூர்திப் படையினரின் குண்டு வீச்சில் உயிரிழந்த செஞ்சோலை மாணவர்களின் 13ஆம் ஆண்டு நினைவேந்தல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட அலுவலகத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்றது.

அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மேற்படி அங்கீகாரம் கிடைக்குமாயின் இந்தியா விரும்புகின்ற ஒருவரை அரச தலைவர் ஆக்குவதற்கு எங்கள் மக்களை வாக்களியுங்கள் என்று கோரமுடியும். அதனைச் செய்வதற்கு இந்தியா தயாரில்லை என்றால், வாக்களிப்பில் கலந்துகொள்வதில் அர்த்தம் இல்லை. இப்போது கூட்டமைப்பு மக்கள் மட்டத்தில் அம்பலப்படுத்தப்பட்டுவிட்டது. கூட்டமைப்பு துரோகம் செய்கின்றது என்று மக்கள் இனங்கண்டுகொண்டார்கள்.

விக்னேஸ்வரன் தமிழ் மக்களுக்குத்தான் நீதி செய்யப் போகின்றேன். நேர்மை செய்யப் போகிறேன் என்று சொல்லிக்கொண்டிருக்கின்றார். அவரைநம்பிநாங்களும் தமிழ் மக்கள் பேரவையில் இணைந்து செயற்பட்டோம். 2016ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்டத்தைத் ஷ்துதிர்ஸ்டவசமாக விக்னேஸ்வரன் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனை அரசிடம் கையளிக்க அவர் மறுத்துவிட்டார்.

அந்தத் தீர்வுத்திட்டத்தை நிராகரிக்கக்கூடிய வகையில் மாகாண சபையில் தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து அதில் தமிழ்த்தேசம் மற்றும் இறைமை என்கின்ற விடயத்தை கைவிட்டு சம்பந்தன் நாடாளுமன்றத்தில் முன்னெடுக்கின்ற அரசியலுக்கு இடைஞ்சல் இல்லாமல் அரசிடம் கொடுத்துள்ளார்.

அரச தலைவர் தேர்தல் தொடர்பில் அண்மையில் விக்னேஸ்வரன் கருத்துக் கூறியுள்ளார். ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அதில் கொஞ்சத்தை நிறைவேற்றுவதற்குத் தயாரான ஒருவரை நாம் ஆதரிக்கலாம் என்ற நிலைப்பாட்டை எடுத்துள்ளார். என்னத்தைச் சொல்லப்போகின்றார் என்றால் கூட்டமைப்பு எவ்வாறு இந்தியா சொல்பவருக்கு வாக்களிக்கப்போகின்றதோ அதேபோல் இந்தியா சொல்வதற்கு வாக்களிக்க விக்னேஸ்வரனும் முடிவெடுத்துவிட்டார்.

ஆனால்எங்கள்மக்கள்புரிந்துகொள்ளாதவாறு மக்களை ஏதோ ஒருவகையில் நம்பவைத்து தான்சொல்கிறவருக்கு வாக்களிக்கச் செய்ய வேண்டும் என்பதற்கான கருத்தைச்சொல்லத்தொடங்கியுள்ளார்.

இந்த விடயங்களில் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். தமிழ் மக்கள் இந்த அரச தலைவர் தேர்தலை வைத்து பேரம் பேசுவதற்கான வாய்ப்பை இழந்துவிடக் கூடாது.

விக்னேஸ்வரன் இந்தியாவின் நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படவில்லை என்றால் நேரடி விவாதத்துக்கு வாருங்கள் நேரில் கதைப்போம்.

கோத்தபாய ராஜபக்ச சீன தரப்புடையவர். அவர் அரச தலைவராக வந்தால் இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்குப் பெரிய அச்சுறுத்தல் ஏற்படும். சீனாவை இலங்கைக்குள் முழுமையாக சுதந்திரமாகச் செயற்பட அனுமதிப்பார். இந்தியா பல துண்டங்களாகச் சிதறிப்போகுமளவுக்குச் சீனா செயற்படக்கூடியநிலைமை களை உருவாக்கும். இதனை இந்தியா ஒருநாளும் விரும்பாது. என்ன விலைகொடுத்தாலும் கோத்தபாய ராஜபக்சவைத் தோற்கடிக்கவேண்டிய தேவை இந்தியாவுக்கு உள்ளது. அந்த விடயத்தில் நாங்கள் ஒத்துழைப்பதற்குத் தயாராக இருக்கின்றோம்.

இந்தியாவிடம் நாங்கள் கேட்பது தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள, தமிழ் தேசத்தையும் அதன் இறைமையையும் இந்திய நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்க வேண்டும். இந்த கோரிக்கையை எல்லா மக்களும் எல்லாமட்டத்திலும் வலியுறுத்த வேண்டும்- என்றார். (த-ரி3)



## கிளிநொச்சி மாணவருக்கு மாங்குளத்தில் செயலமர்வு

துணுக்காய், ஓக. 16

தரம் 11 மாணவர்களுக்கான செயலமர்வு மாங்குளத்திலுள்ள மாகாண தொழில்நுட்பக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மூத்த சட்டத்தரணி வே.தேவசேனாதிபதியின் முழுமையான நிதிப் பங்களிப்பில் இது நடைபெற்றது.

துணுக்காய் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சக்திதரன் தலைமையில் நடந்த இந்தச் செயலமர்வுக்குத் தலைமை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் இணைப்புச் செயலர் சட்டத்தரணி எஸ்.செவ்வேள் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலதி கலந்துகொண்டார். ஏராளமான மாணவர்கள் அதில் பங்குகொண்டு பயனடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த)



## சீரமைத்த வீதி திறந்து வைப்பு

வவுனியா,ஓக.16

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மெனிக்பாம் கதிர்காமர் வீதி சீரமைக்கப்பட்டு அண்மையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசாவால் திறந்துவைக்கப்பட்டது. கிராம எழுச்சித் திட்டத்தினுடாக நாடாளுமன்ற உறுப்பினரால் வீதி சீரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. (ஜ-222)



## ஆலயத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு

வவுனியா,ஓக.16

வவுனியா-பாலமோட்டை, மருதங்குளம் மடுக்கரை நரசிங்கம் ஆலயத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வும் அண்மையில் இடம் பெற்றது.

நிகழ்வில் வடக்கு மாகாண சபை முன்னாள் சுகாதார அமைச்சரும் இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் வவுனியா கிளைத் தலைவருமான மருத்துவர் ப. சத்தியலிங்கம் கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார்.

நிகழ்வில் வவுனியாதெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர்களான திருமதி அஞ்சலா கோகிலகுமார், மங்களநாதன், ஆலய குருக்கள், கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ)

# முதிரை குற்றிகளை கடத்தி வந்த வாகனம் விபத்துக்குள்ளானது

## கடத்தல்காரர்கள் வாகனத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளனர்

வவுனியா,ஓக.16

முதிரை குற்றிகளை கடத்தி வந்த கப் ரக வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானதில் கடத்தல்காரர்கள் வாகனத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வவுனியா, சாந்தசோலை சந்திக்கு அருகில் நேற்றுக் காலை இடம்பெற்றதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஓமந்தை பகுதியிலிருந்து வவுனியாநோக்கி10 முதிரை மரக்குற்றிகளைக் கடத்திச் சென்ற கப் ரக வாகனம் சாந்தசோலை சந்தியில் வாகன அச்சு உடைந்து விபத்துக்குள்ளானது.

இதனையடுத்து முதிரை மரக் குற்றிகளை அந்த இடத்திலேயே இறக்கிவிட்டு வாகனத்தை கட்டி இழுத்து செல்ல முற்பட்ட நிலையில் அதுவும் உடனடியாக சாிவு ராமையால் மரக்கடத்தலில் ஈடுபட்டவர்கள் மரங்களையும், வாகனத்தையும்





கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

எவருமற்ற நிலையில் வாகனம் நின்றமையால் சந்தேகமடைந்த அந்தப் பகுதி மக்கள் வவுனியாப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், வன இலாகாவினருக்கு தெரியப்படுத்தியதையடுத்து அங்கு வருகை தந்த அவர்கள் மரங்களையும், வாகனத்தையும் கைப்பற்றியுள்ளனர். தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஜ-402,110,ரி4)



## கிளிநொச்சி மாவட்டத்தில் 23 ஏக்கர் காணியை படையினர் விடுவித்தனர்

கிளிநொச்சி, ஓக. 16

கிளிநொச்சி மாவட்டத்தில் படையினரால் 23 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆவணங்களை மாவட்டச் செயலரிடம் ஒப்படைக்கும் நிகழ்வு மாவட்ட செயலகத்தில் நேற்றுமுற்பகல் நடைபெற்றது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிருஷ்ணபுரம் பகுதியில் படையினரின் பயன்பாட்டிலிருந்த காணிகளே இவ்வாறு கையளிக்கப்பட்டன. இதற்கான ஆவணங்களை கிளிநொச்சி இராணுவ தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ரவிப்பிரிய மாவட்டச் செயலர் சு.அருமைநாயகத்திடம் கையளித்தார்.

காணி விடுவிப்புத் தொடர்பில் ரவிப்பிரிய ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:

இன்னும் பல காணிகள் விடுவிப்பதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றை விடுவிப்பது தொடர்பிலான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. தனியார் காணிகளை விரைவாக விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தார்.

மாவட்டச் செயலர் சு.அருமைநாயகம் தெரிவித்ததாவது:

குறித்த காணிகளை மக்கள் அடையாளப்படுத்தும் ஆவணங்களைச் சமர்ப்பித்தால் அவற்றைப் பரிசீலித்து கரைச்சி பிரதேச செயலகம் ஊடாக கையளிக்கலாம் - என்றார். (த-6)

# ஏப்ரல் குண்டுத் தாக்குதல்களுக்கு நீதியான விசாரணை இன்னுமில்லை

## அரசையும் அரசியல்வாதிகளையும் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை சாடுகிறது

தலைமன்னார், ஒக. 16

கடந்தஏப்ரல்உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களுக்கு அரசோ? அரசியல்வாதிகளோ? நீதியான உண்மையான விசாரணை மேற்கொள்ளாது இருப்பதையிட்டு இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை கவலை தெரிவிக்கின்றது. நீதி நேர்மையுடன் பக்கச் சார்பற்ற முறையில்விசாரணை மேற்கொள்வது கட்டாயத் தேவையாக இருக்கின்றது என்பதை நாம் அரசிடமும் அரசியல் தலைவர்களிடமும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை வலியுறுத்தி நிற்பதாக மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.

மன்னார் மருதமடு ஆலயப் பெருவிழா நேற்று நடைபெற்றது. அங்குகூடிய பக்தர்கள்மத்தியில்ஆண்டகைமறையுரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

குண்டுத்தாக்குதல்தொடர்பாககுற்றவாளிகளை விசாரணை செய்து நீதியின் முன் கொண்டு வருமாறு நாம் தாழ்மையுடன் அரசைக் கேட்டிருந்தோம். ஆனால் இது விடயமாக நீதியான உண்மையான எதுவும் இன்னும் இடம்பெறவில்லை. இது விடயமாகஇலங்கைக்கத்தோலிக்கஆயர் பேரவை தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்து. நிற்கின்றது. பாதுகாப்புக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார்? பொறுப்புக் கூற வேண்டும் என்பதையும் நாம்கேட்டுநிற்கின்றோம்.

அரசுவழங்கியஉதவிகளுக்குநாம்நன்றி கூறிநிற்பதுடன், மீண்டும்அரசைவேண்டி நிற்பது நீதியான உண்மையான விசாரணையை மேற்கொள்ளும்படியும் நடந்த சம்பவத்துக்கு பொறுப்புக் கூற வேண்டும் என்றும் - குற்றவாளி களை நீதியின் முன் கொண்டு வர வேண்டும் என்று தெரிவித்தார்.

மருதமடுஅன்னைஉங்கள்அனைவரையும்பாதுகாத்து இறைமகன்இயேசுவிடம் பரிந்துபேசி, நீங்கள் மகிழ்ச்சியோடும், சுகத்தோடும், பொருளாதார பிரச்சினைகளும் உங்களை விட்டு நீங்க, அன்னையின் வேண்டுதலும் ஆசிரும் நன்மை பயப்பதாக. இறைவன் தன் மகன் இயேசுவின் பேழையாக இருந்த மரியாளை மகிழ்ச்சியோடுவிண்ணகத்துக்குஎடுத்துச் சென்றவிழாவையேஇன்று(நேற்று)நாம் கொண்டாடுகின்றோம்.

(து-60)

# மடுஅன்னையின் பெருவிழாநேற்று

தலைமன்னார், ஒக. 16

மன்னார்மறைமாவட்டத்தின்புனிதயாத்திரை தலமாக விளங்கும் மருதமடு அன்னையின் ஆவணிபெருவிழாபலத்தபாதுகாப்புக்குமத்தியில்நேற்றுநடைபெற்றது. அங்குலட்சக்கணக்கானமக்கள்கலந்துகொண்டனர்என்றுகூறப்படுகின்றது.

கடந்த உயிர்த்த ஞாயிறு அன்று தென் மற்றும் கிழக்கு பகுதிகளில் ஆலயங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களைத் தொடர்ந்து, அச்சநிலை ஏற்பட்டிருப்பினும் பக்தர்கள் லட்சக்கணக்கில் கலந்துகொண்டிருந்தனர் என்று கூறப்படுகின்றது.

மேற்குறித்த சிக்கலால் வழமையைவிட இந்த முறை பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது.

மன்னார்மறைமாவட்டஆயர்இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் நடைபெற்றபெருவிழாவில்பதுளைஆயர்வின்சன்ட் பெர்னாண்டோ ஆண்டகை தலைமைதாங்கிதிருப்பலியைஒப்புக்கொடுத்தார்.

இதில் அநுராதபுரம் ஆண்டகை நோபேட் அன்றாடி ஆண்டகை, குருநாகல் ஆண்டகை ஹரல்ட் அன்ரனி ஆண்டகை ஆகியோரும் இணைந்துதமிழ், சிங்களம்மற்றும்திருச்சபையின்தாய்மொழியான இலத்தீன்மொழிகளில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அன்னையின் திருச்சொரூப பவனியைத் தொடர்ந்து பதுளை ஆயர் ஆசிர் வழங்கினார்.

(து-60,56)

# கைகலப்புத் தொடர்பில் விசாரணை வேண்டும்

## சபையில் உறுப்பினர் கோரிக்கை

வவுனியா, ஒக. 16

தவிசாளரை இங்கு பணிபுரியும் ஊழியர் அண்மையில் தாக்கினார் என்று குற்றஞ்சாட்டப்படு கின்றது. எனினும், எவர் முதலில் தாக்கினார்கள் என்று எமக்குத் தெரியாது. இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் நடக்காதிருக்க சபைக்குள்ளாகவே ஒரு விசாரணைக் குழு அமைத்து உண்மையைக் கண்டறிய வேண்டும். இவ்வாறு வவுனியா நகர சபை உறுப்பினர் நா.சேனாதிராஜா, சபையின் நேற்றைய அமர்வில் கோரிக்கையை முன்வைத்தார்.


இத்தகைய சம்பவங்கள் மதிப்புப் பிரச்சினையாகவுள்ளது.

அத்துடன் அலுவலக நேரத்துக்குப் பின்னர் நகரசபை வளாகத்துக்குள் வருபவர்கள் எவராக இருந்தாலும் அவர்களின் விவரங்கள் காவலாளியால் பதியப்படவேண்டும்.

இது கட்டாயமாக்கப்படவேண்டும் என்றும் அந்த உறுப்பினர் தெரிவித்தார். விசாரணைக்கு சக உறுப்பினர் ராஜலிங்கமும் ஆதரவு தெரிவித்தார்.

(து-110)







நேற்று சிறப்பாக நடைபெற்ற மடுத் திருவிழாவின் காட்சிகள்

# மட்டக்களப்புமரியாள் தேவாலயத் திருவிழா

மட்டக்களப்பு.ஒக.16




மட்டக்களப்பு மரியாள்தேவாலய வருடாந்தத் திருவிழா திருப்பலி நேற்றுமுன்தினம் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மட்டக்களப்புமறைமாவட்ட ஆயர் கலாநிதி பொன்னையா ஜோசப் ஆண்டகை தலைமையில் பங்குதந்தை அன்னதாஸ் இமானுவேல் ஆகியோர் இணைந்து திருவிழா கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

ஆலய வருடாந்ததிருவிழாகடந்த 7 ஆம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா 9 நாள்கள் இடம்பெற்றன.

நேற்றுமுன்தினம்புதன்கிழமைஅன்னையின்திருச்சொரூபபவனியைத்தொடர்ந்துநற்கருணை வழிபாடுகளும் மறைவுரைகளும் இடம்பெற்றுதிருப்பலிஒப்புகொடுக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து கொடியிறக்கப்பட்டு ஆலய வருடாந்த திருவிழா நிறைவுபெற்றது.

(ஜ-46)









# எதிரிகளை எதிர்கொள்ளும் சக்தி ராணுவத்துக்கு உண்டு

*இராணுவத் தளபதி தெரிவிப்பு*



கொழும்பு, ஒக.16
எந்தவொரு எதிரியையும் எதிர்கொள்ளும் சக்தி இராணுவத்துக்கு உள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக கைது சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறும் என்று இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய குற்றவாளிகள் தொடர்ந்தும் கைது செய்யப்படுவார்கள். சந்தேக நபர்கள் எவராக இருந்தாலும் கைதுகள் தொடரும்.

உலகில் எந்த நாடும் 100% பாதுகாப்பை உறுதி செய்யவில்லை. பயங்கரவாதக் குழுக்கள் பன்னாட்டு இணைப்புகள் மூலம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. அதனால் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான செயல்முறை தொடரும்.

தற்போதைய நிலமையைக் கட்டுப்படுத்தவும் பாதுகாப்பை வழங்கவும் அதிகபட்ச சக்தியை இராணுவம் பயன்படுத்தும். நாட்டினதும் நாட்டு மக்களது பாதுக்காப்பை பேணும் என இராணுவம் உறுதி பூண்டுள்ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய அமைப்பின் பின்னணி குறித்த புலனாய்வுத்துறை தேடுதல்களை முன்னெடுத்து வருகிறது. தேசிய பாதுகாப்பு குறித்து பொது மக்கள் எந்த அச்சமும் கொள்ளத் தேவையில்லை.

எதிர்காலத்தில் எதிர்கொள்ளக்கூடிய எதிரி தொடர்பாக நன்கு அறிந்து, அதனை எதிர்கொள்ளத் தேவையான சக்தியை இராணுவத்துக்குள் உருவாக்க முயற்சிக்கின்றோம்.

எந்தவொரு அரசியல் பிரிவினருக்காகவோ அல்லது வெளிநாட்டுக் குழுவின் தேவைகளுக்கு ஏற்பவோ இராணுவம் இயங்காது - என்றார். (எ)

# கோத்தாவை ஆதரிக்கும் எண்ணமே எமக்கில்லை

*ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு*

கொழும்பு, ஒக.16

கோத்தபாய ராஜபக்சவுக்கோ அல்லது வேறு வேட்பாளரையோ ஆதரிக்கும் எண்ணம் மக்கள் விடுதலை முன்னணிக்கு இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அரசவை எதிர்க்க வேண்டுமானால் மக்கள் விடுதலை முன்னணி கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்திருந்தார். அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே பிமல் ரத்நாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோத்தபாய ராஜபக்ச ஒரு அரசியல் கட்சியை வழிநடத்துவதற்கு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் சகோதரர் என்பதைத் தவிர வேறு எந்தத் தகுதியும் இல்லை. எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணி பரந்துபட்ட கூட்டணியில் தேர்தலில் போட்டியிடும். என்றார். அதே வேளை மக்கள் விடுதலை முன்னணி எதிர்வரும் 18ஆம் திகதி தமது அரச தலைவர் வேட்பாளரை அறிவிக்கவுள்ளது. (எ)

# பாலர் பாடசாலை மாணவரை ஏற்றி வந்த பேருந்து விபத்து!

நிட்டம்புவ பகுதியில் பாலர் பாடசாலை மாணவர்களை அழைத்து வந்த தனியார் பேருந்து கட்டுப்பாட்டையிழந்து எதிர்திசையில் வந்த 6 வாகனங்களுடன் மோதி விபத்துக்குள்ளானது.

கொழும்பு - கண்டி முதன்மை வீதியில் நிட்டம்புவ பகுதியில் நேற்றுக் காலை 7.45 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து எதிர் திசையில் வந்த 6 வாகனங்களுடன் மோதியுள்ளது. இதன்போது 2 மகிழுந்து , 2 உந்துருளி, மூடுந்து மற்றும் முச்சக்கர வண்டியுடன் பேருந்து மோதியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கவலைக்கிடமான நிலையில் எவரும் மருத்துவமனையில் சேர்க்கப்படவில்லை என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்து தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிட்டம்புவ பொலிஸார், பேருந்துச் சாரதியை கைது செய்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

## உலக சந்தையில் தங்கத்தின் விலை வீழ்ச்சி

கொழும்பு, ஒக.16
உலக சந்தையில் தங்கத்தின் விலை சற்று வீழ்ச்சியடைந்துள்ளது. நேற்று முன்தினத்துடன் ஒப்பிடுகையில், தங்கத்தின் விலை ஒரு வீதத்தால் குறைவடைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சந்தையில் தங்கம் அவுன்ஸின் விலை 1,523 அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

ஏனைய நாணய பெறுமதிகளுடன் ஒப்பிடுகையில் அமெரிக்க டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமை மற்றும் உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி வேகம் குறைவடைந்துள்ளமை ஆகிய காரணிகளால் தங்கத்தின் விலை அதிகரித்துள்ளது என்று பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (எ)

## தரம் 5 பெறுபேறுகள் ஒக்ரோபர் முதல் வாரத்தில்

கொழும்பு, ஒக.16
தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் பணிகள் நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில், இந்தப் பரீட்சையின் பெறுபேறுகளை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஐந்தாம் திகதியளவில் வெளியிட முடியும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித்த நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை நாடு முழுவதிலும் 2 ஆயிரத்து 995 மத்திய நிலையங்களில் வெற்றிகரமாக நிறைவு பெற்றது என்று தெரிவித்துள்ள பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித்த, இந்த முறை 3 இலட்சத்து 39 ஆயிரத்து 369 மாணவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.(எ)

## கருத்துத் தெரிவிக்கும் உரிமை நாட்டில் அனைவருக்கும் உண்டு

*பொன்சேகாவின் கருத்துக்கு சஜித் பிரேமதாச பதில்*



நாட்டில் இருக்கும் ஜனநாயக முறைமை காரணமாக எந்தவொரு நபருக்கும் எந்தவித கருத்தையும் தெரிவிக்க முடியும் என வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசிய முன்னணியின் கட்சி தலைவர்கள் கூட்டம் நேற்றுமுன்தினம் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் அலரி மாளிகையில் இடம்பெற்றது. அதன்பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே சஜித் பிரேமதாச இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்தக் கூட்டத்தில் கிராமமட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது என்றும், இதன்போது அனைத்து அமைப்புக்களையும் ஒன்றிணைத்து அதற்கான திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## வழக்குகளைத் துரிதப்படுத்த சட்ட மா அதிபர் அறிவுறுத்தல்



கொழும்பு, ஒக.16
கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டமை உட்பட ஊடகவியலாளர் மற்றும் வசீம் தாஜுதீன் ஆகியோர் கொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்குகளைத் துரிதப்படுத்த வேண்டும் என்று சட்டமா அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க, பிரபல ரகர் வீரர் வசீம் தாஜுதீன், மூதூரில் 17 பேர் படுகொலை, ஊடகவியலாளர் கீத் நொயர் தாக்கப்பட்டமை உள்ளிட்ட 5 வழக்குகளின் விசாரணைகள் தொடர்பாகவே அவர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்த வழக்குகளின் விசாரணைகள் விரைவாக நிறைவடைவதை உறுதிசெய்யுமாறு பதில் பொலிஸ் மா அதிபர் சீ டி விக்ரமசிங்கவுக்கு சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை - பொலிஸ் அலுவலர்கள் சட்டத்தைக் கண்டிப்பாகப் பின்பற்றவும், தமக்கு முழு அறிக்கையை சமர்ப்பிக்கவும் சட்டமா அதிபர் பதில் பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள் ளார். (எ)

## பாடப் புத்தகம் வழங்கும் ஆரம்ப நிகழ்வு இன்று

கொழும்பு, ஒக.16
பாடசாலை மாணவர்களுக்கும், பிரிவெனா பிக்கு மாணவர்களுக்குமான அடுத்த ஆண்டுக்கான பாடப் புத்தகங்கள் வழங்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு இன்று ஆரம்பமாகவுள்ளது. இந்த நிகழ்வு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

வருடத்தின் இறுதி தவணைக்கான பாடசாலை விடுமுறைக்கு முன்னர் சகல மாணவர்களுக்குமான பாடப் புத்தகங்களை வழங்க வேண்டும் என்று கல்வி அமைச்சர் ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

இலவச பாடப் புத்தகங்களை வழங்குவதற்காக அரசு இந்த முறை நான்காயிரத்து 160 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

# சமூக வலைத் தளங்களை கண்காணிக்க நடவடிக்கை

*'பவ்ரல்' அமைப்பு தெரிவிப்பு*

கொழும்பு. ஒக.16
தேர்தல் நடவடிக்கைகளுக்கு சமூக வலைத்தளங்களால் ஏற்படுகின்ற அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்கான சிறப்புத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த பவ்ரல் அமைப்பு உத்தேசித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் தேர்தல் காலத்தில் முகப்புத்தகம் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களை மேற்பார்வை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுடன் பேச்சு நடத்தப்படவுள்ளது என்றும் - பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

தேர்தல் காலப்பகுதியில் சமூக வலைத் தளங்களில் பரப்பப்படுகின்ற வதந்திகள் மற்றும் தேர்தலுக்கு இடையூறாக அமையும் பதிவுகளை நீக்குமாறு சமூக வலைத்தள நிறுவனங்களுக்கு அறிவிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

நீதியானதும் நியாயமானதுமான தேர்தல் ஒன்றை நடத்தும் வகையிலேயே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (எ)




## தேரர் கைது

பதுளை.ஒக.16
அரசமரமொன்றைவெட்டி அகற்றிய குற்றச்சாட்டில் விகாரையின் ஆரணிய தேரர் ஒருவர் பொலிஸா ரால் நேற்றுக் கைதுசெய் யப்பட்டார்.
எல்ல பகுதியின் நாவலகம என்ற இடத்தில் அமைந்தி ருக்கும் விகாரையொன் றின் ஆரணிய (சத்திரம்) தேரர். ஆரணியத்தின் அபிவிருத்திக்கு தடையாக வுள்ள, அரசமரமொன்றை வெட்டி அகற்றியுள்ளார்.
இது குறித்து பிரதேச மக் கள் 119 என்ற அவசர பொலிஸ் இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி முறைப்பாடு செய்தனர்.
இதனையடுத்து விசார ணைகளை மேற் கொண்ட பொலிஸார் ஆர ணியத்தின் (சத்திரம்) தேர ரைக் கைது செய்தனர்.
தேரர் விசாரணையின் பின்னர், பண்டாரவளை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படு வார் என்று எல்ல பொலி ஸார் தெரிவித்தனர். (ஐ)

# வெற்றிபெறக்கூடிய வேட்பாளருக்கே முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளிக்கும்!

## *கிழக்கு முன்னாள் முதலமைச்சர் திட்டவட்டம்*

கொழும்பு, ஒக.16
உட்கட்சிப் பூசல்கள் தீர்ந்தும், கூட்டு இழுபறிகள் நீங்கியும், தமது அரச தலைவர் தேர்தல் வேட்பா ளர் எவர் என்பதை தேசியக் கட்சிகள் இறுதித் தீர்மான மாக அறிவித்த பின்னர், அதில் எந்த வேட்பாளர் வெற் றிபெறக் கூடியவரோ அவருக்கே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்கும். கடந்த காலங்களைப் போன்று நம்பிக்கையின் அடிப்படையில் செயற்படும் எந்தவொரு ஏற்பாட்டுக்கும் இனி இடமளிக்கமாட் டோம்.



இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கி ரஸின் பிரதித் தலைவரும், கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரு மான நஸீர் அகமட் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் நேற்று வெளியிட் டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் குறிப் பிடப்பட்டுள்ளதாவது:
நாட்டில் சமகாலத்தில் நடந்துகொண்டி ருக்கும் நிகழ்வுகள் முஸ்லிம் மக்கள் மத்தியில் ஆளும் அதிகாரம் கொண்ட கட்சிகள் மீதும், அவற்றின் தலைமை கள் மீதும் நம்பிக்கைகளை இழக்கச் செய்துள்ளன. எவருக்கு ஆதரவளித் தும் நமக்கேதும் பிரயோசனம் இல்லை என்ற எண்ணமே வலுப்பெற்றிருக் கின்றது. உத்தரவாதங்கள் அனைத் தும் உதவாக்கரையானவை என்பதே மக்களின் தீர்வாக இருக்கின்றது.
சமகாலத்தில் முஸ்லிம் சமூகம் எதிர் கொண்டுவரும் நெருக்கடிகள், பரித விப்புகள், பராமுகங்கள் அவர்தம் அரசியல் பரப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. ஆட்சி அதிகா ரங்களால் வழ்ங்கப்பட்ட உத்தரவா தங்களும் - சமாளிப்புக்களும் - இழுத் தடிப்புக்களும் - நம்பிக்கை அரசியல் காரணமாக முஸ்லிம் மக்களுக்குக் கிடைப்பெற்ற வெறுமையின் பெறு பேறுகள் என்பதை நிரூபித்துள்ளன.
இந்தநிலையில், தொடர்ந்தும் முஸ் லிம் சமூகம் ஏமாறுவதற்குத் தயா ரில்லை என்பதைக் கடந்த காலப் பட்ட றிவு சிறப்பாக நமக்குப் பாடம் படிப்பித் துள்ளது. எனவே, ஆட்சி அதிகாரம் எவர் வசம் வரப்போகின்றதோ அவர் களுக்கே ஆதரவளித்து எமக்குரிய உரி மைகளை உரியமுறையில் உத்தர வாதம் அளிக்கும் ஏற்பாடுகளின் ஊடா கப்பெற்றுக்கொள்வதே முக்கியமானது என்பதை நாம் தீர்க்கமாக உணர்ந்து செயற்பட முடிவு செய்திருக்கின்றோம்.
இதற்கான வழிநடத்தல்களையே எமது கட்சி தற்போது மேற்கொண்டு வருகின்றது. எதிர்காலத்தில் முஸ்லிம் மக்கள் எந்தவித அச்சமும் இன்றி வாழும் நிலையை உருவாக்க நாம் கூட்டுணர்வோடு திட்டமிட்டுச் செயற் பட முன்வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளவிரும்புகின்றேன் என்றுள்ளது. (எ-22)



## ஆணின் சடலம் மீட்பு

நீரோடையிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம்மீட்கப்பட்டுள்ளது.
ஹற்றன் மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாமிமலை சின்ன சோலங் கந்தை பகுதியில் உள்ள நீரோடையிலிருந்தே சட லம் மீட்கப்பட்டதாக மஸ் கெலியாப் பொலிஸார் தெரிவித்தனர்.
40 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது.
சடலம்அடையாளம்காணப் படாத நிலையில் மேலதிக விசாரணைகளை மஸ்கெ லியா பொலிஸாரும், ஹற் றன் பொலிஸ் நிலைய கைரேகைப் பிரிவினரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஐ.தே.க. வேட்பாளரது பெயர் விரைவில் வெளியிடப்படும்

## *அமைச்சர் கபீர் ஹாசீம் தெரிவிப்பு*

கொழும்பு. ஒக.16
வெகு விரைவில் ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளரைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பார். இப்போதே கட்சியின் அதிக பெரும்பான்மை ஆதரவு தெரிவிக்கப்படும் நபர் தொடர்பாகவே அக்கறை செலுத்தி வருகின்றோம்.



இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் அமைச்சர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக சஜித் பிரேமதாசவை நியமிக்க வேண்டும் என்ற கட்சியின் ஏகோபித்த நிலைப்பாடாக உள்ள நிலையில் கட்சியின் தலைமைத்துவம் இன்னமும் எந்தவித கருத்துக்களும் முன்வைக்கவில்லை. இந்த நிலையில் கட்சியின் மூத்த உறுப்பினரும் அமைச்சருமான கபீர் ஹாசீமிடம் இது குறித்து வினவியபோது அவர் மேற்கண்டவாறு கூறினார்.
கட்சியின் ஏகமனதான நிலைப்பாடுகள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் நிலைப்பாட்டை புறக்கணித்து மாற்று அணியை உருவாக்க இடமளிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார். (எ)

# கோத்தாவே சரியான ஆள் சுமங்கல தேரர் கூறுகிறார்

கொழும்பு. ஒக.16
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி யின் வேட்பாள ராக அறிவிக்கப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்சவால் தான் பாதுகாப்புப் பிரச்சினை களைக் கையாள முடியும் என்று மல்வத்தை பீட மகாநா யக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் தெரிவித் துள்ளார்.



முன்னாள் பாதுகாப்பு செயலரும், முன் னாள் அரச தலைவரும் அவரை நேற்று முன்தினம் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றனர்.
அப்போது கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பாதுகாப்பு நிலவரத்தை கையாள்வ தற்கான திறனும் அனுபவமும் கோத்தபாய ராஜபக்சவுக்குஉள்ளது.
தேசிய பாதுகாப்புத் தொடர்பில் பிரச் சினை உள்ளது. அது தொடர்பாகக் கவனம் செலுத்தவேண்டும்.
அரச தலைவர் தேர்தலில் கோத்த பாய ராஜபக்ச போட்டியிடுவதற்கு முழுமை யான ஆதரவை நாங்கள் வழங்குகின்றோம். - என்றார். (எ)

## மகிந்த தரப்பின் எதிர்பார்ப்பு!

நாட்டின் தேசிய பாதுகாப்பு முக்கியத்துவம் மிக்கது என்பதை உணர்ந்துள்ள தாலேயே கோத்தபாய ராஜபக்சவின் தெரிவு சரி யானது என்பதை முன் னாள் இராணுவத் தளபதி யும், நாடாளுமன்ற உறுப் பினருமான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித் திருக்கின்றார். சரத் பொன் சேகா விரைவில் எம்மு டன் இணைந்து செயற்படு வார் என நாங்கள் எதிர் பார்க்கிறோம். இவ்வாறு கூட்டு எதிரணியின் முக் கிய உறுப்பினரும், நாடா ளுமன்ற உறுப்பினரு மான ஹெகலிய ரம்புக் வெல தெரிவித்துள்ளார்.
பொதுஜன பெரமுனவின் அரசதலைவர்வேட்பாளராக கோத்தபாயராஜபக்ச தெரிவு செய்யப்பட்டமைசரியானது என்றுசரத்பொன்சேகாதெரி வித்துள்ளமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர்இவ்வாறுதெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்த தாவது:
அரச தலைவர் வேட்பாள ராக அறிவிக்கப்பட்டுள்ள கோத்தபாயராஜபக்சவுக்கு நாடுமுழுவதும் வரவேற்பு காணப்படுகின்றது. நாம் தேர்தலுக்கு சிறந்த முறை யில்தயாராகிவருகின்றோம்.
நாம் பல்வேறு இடங்க ளுக்கு எமது வேட்பாளரை அழைத்துச் செல்கிறோம்.
மக்கள் பெரிய அளவில் வரவேற்பு வழங்குகின்ற னர். தற்போது கோத்தபாய ராஜபக்ச வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டமை சரியான முடிவு என சரத் பொன்சேகா தெரிவித் துள்ளார். அவர் பாதுகாப்பு தொடர்பில்ஒரு நிபுணராகக் காணப்படுகின்றார். அவர் பாதுகாப்புக்கு முக்கியத்து வம் கொடுப்பதாலேயே கோத்தாவின் தெரிவை சரி யானது என்று கூறுகிறார்.
சரத் பொன்சேகா விரை வில் எம்முடன் இணைந்து செயற்படுவார் என்று நம்பு கின்றோம். - என்றார். (எ)



யாழ்ப்பாணம் - புங்குடுதீவில் இராணுவத்தினர் அமைக்கும் வீடுகளுக்கான கட்டடவேலைகளின் தராதரத்தை யாழ்ப்பாணப் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிக சூர்ய நேற்றுமுன்தினம் பார்வையிட்டார். வறுமை நிலையிலுள்ள குடும்பங்களுக்கு வீடமைப்பு அதி கார சபையின் நிதியில் இராணுவத்தினரின் சரீரப் பங்களிப்பில் வீடுகள் அமைக்கப்படுகின்றன என்று இராணுவத்தினர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரி விக்கப்பட்டுள்ளது. (த)

# மைத்திரி - மகிந்த இடையே அடுத்த வாரத்தில் சந்திப்பு!

கொழும்பு. ஒக.16
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கும், சிறி லங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையேஇணக்கப்பாட்டை ஏற்படுத்தும் விதமாக அடுத் தவாரம் சந்திப்பு ஒன்று நடக்கவுள்ளது என்று நாடா ளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர தெரிவித் துள்ளார்.



அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச ஆகியோர் நேரடியாகச்சந்தித்துத்தீர்மா னம் எடுக்க வேண்டும் என் றும்- அடுத்த வார சந்திப்பில் ஒரு இணக்கம் எட்டப்படும் என்றும் - அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.
இது தொடர்பாக அவர் தெரி வித்ததாவது:
ஒரே அணியினர் பிளவு பட்டு ஒருவரையொருவர் விமர்சித்து அரசியல் செய் வதில் எந்த அர்த்தமும் இல்லை. முதலில் பொது இணக்கப்பாடு அடிப்படை யில் ஒரு தீர்மானத்தை எட்ட வேண்டும்.
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் நாம் இணையமாட்டோம்என்று கூறவில்லை. அது தொடர் பான பேச்சு முன்னெடுக்கப் படும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியை அவர்களும் நிரா கரிக்கவில்லை. இந்த விட யத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் எதிர்க்கட்சித்தலைவர்மகிந்த ராஜபக்சவும் நேரடியாக சந்தித்து தீர்மானம் எடுக்க வேண்டும். அடுத்த வாரம் இந்தச்சந்திப்பு இடம்பெறும்.
அதுவரையில் கட்சியின் தீர்மானம் குறித்து சிந்திக்க வேண்டியஅவசியமில்லை- என்றார். (எ)

# அரசை எதிர்ப்பதானால் ஜே.வி.பி. கோத்தாவை ஆதரிக்க வேண்டும்

## *சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தெரிவிப்பு*



கொழும்பு, ஓக.16

**மக்கள் விடுதலை முன்னணி உண்மையாக அரச எதிர்ப்பு கொள்கை உடையவர்களாக இருந்தால், அவர்கள் கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவளிக்க வேண்டும் என சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பாக நேற்றுக் கருத்து தெரிவித்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அவ்வாறு செய்யத் தவறினால், கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுர குமார திசாநாயக்கவை தங்கள் அரச தலைவர் வேட்பாளராக நிறுத்த வேண்டும்.

மக்கள் விடுதலை முன்னணி தொடர்ந்தும் தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாத்து வருகின்றது - என்றார்.

இதேவேளை - உத்தேசிக்கப்பட்டுள்ள அரச தலைவர் தேர்தலில் ஒரு பரந்துப்பட்ட கூட்டணியின் கீழ் மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் போட்டியிடும் அரச தலைவர் வேட்பாளர் எதிர்வரும் 18 ஆம் திகதி அறிவிக்கப்படுவார் என்று மக்கள் விடுதலை முன்னணி அறிவித்துள்ளது. (எ)

# ரணிலுக்கு எம்.பிக்கள் கடிதம்

கொழும்பு, ஓக.16

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் களமிறக்கப்படவுள்ள அரச தலைவர் வேட்பாளரை தெரிவு செய்வதற்காக செயற்குழு மற்றும் நாடாளுமன்றக் குழுவை கூட்ட வேண்டும் என்று கோரி கடிதமொன்றை இன்று வெள்ளிக்கிழமை அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களால் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படவுள்ளது என்று பிரதி அமைச்சர் நளின் பண்டார தெரிவித்தார்.

அரச தலைவர் வேட்பாளரை தெரிவு செய்வது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எழுந்துள்ள கருத்து வேறுபாடுகள் தொடர்பில் வினவியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவை அரச தலைவர் வேட்பாளராக களமிறக்குவதே கட்சியில் அநேகமானவர்களின் நிலைப்பாடாகவுள்ளது. அதேபோன்று கூட்டணியை அறிவிப்பதற்கு முன்னர்- அரச தலைவர் வேட்பாளரை அறிவித்தால் மாத்திரமே உறுதியான கூட்டணியொன்றை கட்டியெழுப்ப முடியும். அதுவே எனது நிலைப்பாடும் ஆகும்.

கடந்த முதலாம் திகதி கட்சியின் மத்திய செயற்குழு கூடிய போது, சஜித் பிரேமதாசவை அரச தலைவர் வேட்பாளராக களமிறக்க வேண்டும் என்ற நிலைபாட்டை வெளிப்படுத்தியிருந்தோம். தற்போதைய சூழ்நிலையில் அரச தலைவர் வேட்பாளரை விரைவில் அறிவிக்க வேண்டிய தேவையும் எமக்கு எழுந்துள்ளது.

அவ்வாறு அரச தலைவர் வேட்பாளரைத் தெரிவு செய்வது குறித்து தீர்மானிப்பதற்கு விரைவில் கட்சியின் செயற்குழுவையும், நாடாளுமன்றக் குழுவையும் அழைப்பது அவசியமாகும். இந்த நிலையில் செயற்குழுவையும் நாடாளுமன்ற குழுவையும் விரைவில் கூட்ட வேண்டும் என்று கோரி கட்சியின் தலைவர், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதமொன்றை கையளிக்க தீர்மானித்துள்ளோம்.

இதுவரையில் அநேகமான உறுப்பினர்கள் இந்த கோரிக்கை கடிதத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். இன்று வெள்ளிக்கிழமை இந்த கடிதத்தை அனுப்பி வைக்கவுள்ளோம். அதனை அடுத்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் தீர்மானங்களுக்கு அமைவாக எங்களின் முடிவுகளை அறிவிப்போம்.

யார் வேட்பாளராக அறிவிக்கப்பட்டாலும் கூட்டணியை அறிவிப்பதற்கு முன்னர் வேட்பாளரை அறிவிக்க வேண்டும். தேர்தல் அறிவிக்கப்பட்டதும் அரச தலைவர் வேட்பாளரை அறிவிப்பதால் வெற்றியை ஈட்டுவதில் சிக்கல் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. கூட்டணியை பொறுமையாக அறிவிக்கலாம். ஆனால் தற்போதைய நிலையில் அரச தலைவர் வேட்பாளரை அறிவிப்பதே சிறந்த அரசியல் பயணத்துக்கு வாய்ப்பாக இருக்கும். அரச தலைவர் வேட்பாளர் இன்றி கூட்டணியை அமைத்தால் கூட்டணிக்குள் சிக்கல் ஏற்படும் சந்தர்ப்பங்கள் உருவாகலாம்.

எது எவ்வாறாயினும் நிச்சயமாக ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஒருவரே அரச தலைவர் வேட்பாளராக இருக்க வேண்டும். இந்த நிலைப்பாட்டில் எங்களிடம் எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. வேட்பாளர் குறித்து கலந்துரையாடி விரைந்து தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் - என்றார். (எ)

# கோத்தபாயவின் குடியுரிமை ஆவணத்தை சமர்ப்பிக்கத் தயார்

## *நாமல் ராஜபக்ச கூறுகின்றார்*



கொழும்பு, ஓக.16

முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ச தனது அமெரிக்க குடியுரி மையை துறந்துள்ளமைக்கான ஆவணங்களை ஒப்படைப்பதற்கு தயாராக உள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்சவின் குடியுரிமை தொடர்பாக அமைச்சர் ஹர்ஷ டி சில்வா டுவீற்றரில் வெளியிட்ட கருத்துக்குப் பதிலளிக்கும் வகையில் நாமல் ராஜபக்ச இந்த விடயத்தைப் பதிவிட்டுள்ளார்.

பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளரைப் பற்றி கவலைப்பட வேண்டாம். அவரது ஆவணங்கள் தொடர்பாக பிரச்சினை என்றால், தேவைப்பட்டால் அதனை முன்வைப்போம். நீங்கள் எவரை போட்டியிட வைக்கலாம் என்று கவலைப்படுங்கள் என நாமல் ராஜபக்ச பதிவிட்டுள்ளார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்சவை கடந்த வாரம் மகிந்த ராஜபக்ச உத்தியோகப் பூர்வமாக அறிவித்திருந்தார். (எ)

# கோத்தாவை ஆதரிப்பது பற்றி சு.கட்சி முடிவெடுக்கவில்லை!

## *மகிந்த அமரவீர தெரிவிப்பு*



கொழும்பு, ஓக.16

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவளிப்பது தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி இன்னமும் தீர்மானிக்கவில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

கோத்தபாயவுக்கு ஆதரவளிப்பதற்கு சிறிலங்கா சுதந்திர கட்சி மத்திய குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம தெரிவித்துள்ள தகவல் உண்மைக்கு புறம்பானதாகும். நாம் இது வரையில் அவ்வாறான தொரு தீர்மானத்தை எடுக்கவில்லை. செப்ரெம்பரில் இடம் பெறவுள்ள கட்சி சம்மேளனத்தின்போதே அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ,22)



# சு.கட்சி தலைமையகத்துக்கு திடீரெனச் சென்ற சந்திரிகா

கொழும்பு, ஓக.16

முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க நேற்றுத் திடீரென சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்துக்குச் சென்றுள்ளார். நீண்டகாலமாக அவர் கட்சித் தலைமையகத்துக்குச் செல்லாத நிலையில், நேற்றுத் திடீரென அவர் அங்கு சென்றமை பரபரப்பை ஏற்படுத்தியது.

தற்போது கட்சியின் போசகராக இருக்கும் சந்திரிகா, மைத்திரிபால சிறிசேனவுக்கு கட்சி தலைமைப் பதவி கொடுக்கப்பட்டதன் பின்னர், அங்கு செல்வது அரிதாகவே இருந்தது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஏற்பட்ட அரசியல் குழப்பத்துக்குப் பின்னர் சந்திரிகா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்துக்கு முதன்முறையாகச் சென்றுள்ளார்.

நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் மகிந்த அணியின், அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ச களமிறங்கவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு சிறிலங்கா சுத்திரக் கட்சியின் சில உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்து வந்தாலும், சிலர் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவும் கோத்தபாயவுக்கு எதிரான கருத்துக்களையே வெளியிட்டு வருகின்றார்.

இந்தநிலையிலேயே அவர் திடீர் என சுதந்திரக் கட்சியின் தலைமையகத்துக்குச் சென்றுள்ளார். அங்குள்ளவர்களுடன் பேச்சு நடத்தினார். சந்திரிகாவின் இந்த நகர்வால் கொழும்பு அரசியலில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (எ)

# ஸஹ்ரானுடன் தொடர்பு: மூவர் கைது

கொழும்பு, ஓக.16

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலில் சூத்திரதாரி என்று கருதப்படும் ஸஹ்ரான் ஹாசீமின் ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்தில் 3 பேர் அம்பாறையில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரச புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த மூவரும் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்கசகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

இந்த மூவரும் ஜே.எம்.ஐ. பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்றும்- ஸஹ்ரான் ஹாசீமுடன் ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள் என்றும் பொலிஸார் கூறுகின்றனர். (எ)



# பொய்யான வாக்குறுதிகளால் ஐ.தே.க. ஆட்சிக்கு வரமுடியாது

## *பந்துல குணவர்த்தன தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.16

பொய்யான வாக்குறுதிகளால் ஐக்கிய தேசியக் கட்சி இனியொருபோதும் ஆட்சிக்கு வர முடியாது. அரசியல் ரீதியான தீர்மானத்தை நாட்டு மக்கள் தீர்மானித்து விட்டார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.



எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தற்போது உள்ள பல அரச தலைவர் வேட்பாளர்கள் மக்கள் மத்தியில் பல வாக்குறுதிகளை வழங்குகின்றார்கள். போலியான வாக்குறுதிகளால் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைக்க முடியாது. 2015ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் நாட்டு மக்கள் செய்த தவறைத் திருத்திக் கொள்ள அரச தலைவர் தேர்தலை எதிர்பார்த்துள்ளார்கள். இந்தத் தேர்தலை தொடர்ந்து இடம்பெறும் அனைத்து தேர்தல்களிலும் ஐக்கிய தேசியக் கட்சி பெரும் பின்னடைவை எதிர்கொள்ளும்.

பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவம், முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்சவைக் களமிறக்கியது சிறந்தது என்று பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

அவர் எதிரணியின் பக்கம் வரவுள்ளதாக அரசியல் களத்தில் உறுதிப்படுத்தப்படாத செய்திகள் குறிப்பிடுகின்றன. அரசியலில் நிரந்தர எதிரியும் இல்லை, நெருங்கிய நண்பனும் இல்லை - என்றார். (எ)

# இரு கட்சிகளின் உறுப்பினராக எம்.பிக்கள் செயற்பட முடியாது

## மகிந்தவின் பதவியை பறிக்க முடியும் தேர்தல் ஆணைக்குழு கூறுகின்றது

கொழும்பு, ஒக.16

எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் இரண்டு கட்சிகளின் உறுப்பினர்களாக செயற்படுவதற்கான அனுமதி இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச உட்பட பலரின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை நீக்க முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலதிக தேர்தல் ஆணையாளர் சமன் சிறிரத்நாயக்க தெரிவித்ததாவது:

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் உறுப்புரிமை பெற்றுக்கொண்ட உறுப்பினர்களை கட்சியில் இருந்து நீக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு அறிவித்த பின்னர், தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்தால் மகிந்த உள்ளிட்ட ஏனையவர்களின் நாடாளுமன்ற உறுப்புரிமை நீக்கப்படும்.

அவசியம் ஏற்பட்டால், உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும்.

நீதிமன்றம் உத்தரவிட்டால் உடனடியாக அவர்களின் உறுப்புரிமையை இரத்து செய்ய முடியும் - என்றார். (எ)

# சஜித் வெற்றியடையும் சாத்தியங்கள் குறைவு

## பொன்சேகா கூறுகின்றார்

கொழும்பு, ஒக.16

விடுதலைப் புலிகளிடம் சரணடைய உத்தரவிட்டதும், ஆயுதம் கொடுத்ததும் சஜித்தின் தந்தைதான். அதனால் அவர் வெற்றி பெற சாத்தியம் குறைவு. ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணியால், எனது பெயர் முன்மொழியப்பட்டால் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடத் தயாராக இருக்கின்றேன்



இவ்வாறு பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தனது அரச தலைவர் வேட்பாளராக, முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்சவைச் சரியாகவே தெரிவு செய்துள்ளது. மக்கள் பாதுகாப்பு குறித்து அக்கறை கொண்டுள்ள நிலையில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி அதில் கவனம் செலுத்தியுள்ளது.

கோத்தபாய ராஜபக்ச அடுத்த அரச தலைவராக வருவதற்கு மிகவும் பொருத்தமானவர் என்று நான் கூறவில்லை. ஆனால் மக்களின் மனதைப் புரிந்து கொண்டு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி சரியான தேர்வைச் செய்துள்ளது.

அண்மையில் நடந்த பேரணிகளில், அரச தலைவர் பதவிக்க போட்டியிடத் தயாராக உள்ளோம் என்று இரண்டு பேர் கூறினர். ஒருவர் தனது தந்தையின் பெயரை தேர்தல் மேடையில் பயன்படுத்த முயற்சிக்கிறார். உண்மை என்னவென்றால், அவரது தந்தை கொடுத்த ஆயுதங்களைப் பயன்படுத்தியே, புலிகள் இலங்கை இராணுவத்தைத் தாக்கினர். 600 பொலிஸ் அதிகாரிகளை விடுதலைப் புலிகளிடம் மற்றும் கருணாவிடம் சரணடைய உத்தரவிட்டது அவரது தந்தை தான்.

ஐ.தே.க. கூட்டணியின் அரச தலைவர் வேட்பாளராக, கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவு செய்யப்பட்டால், கட்சியின் அந்த முடிவுக்கு இணங்குவேன். நான் ஒரு ஒழுக்கமானவர். கட்சி மற்றும் அதன் தலைவரின் முடிவை நான் ஏற்றுக்கொள்வேன் - என்றார். (எ)

# மகிந்தவின் உறுப்புரிமை இயல்பாகவே நீங்கி விடும்

## மகிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஒக.16

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்ட போதே அவரது சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்புரிமை இயல்பாகவே இரத்தாகி விட்டது.

எனினும் அது தொடர்பில் அடுத்த வாரம் இடம்பெறவுள்ள சுதந்திரக் கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்சிக்கென்று யாப்பொன்று காணப்படுகிறது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஊடாக தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்கு தெரிவாகிய மகிந்த ராஜபக்சவுக்கு உறுப்புரிமை அந்த யாப்புக்கமைய இயல்பாகவே இரத்தாகும். எனவே தற்போது அவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் அல்ல.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைமைத்துவத்தை ஏற்றதால் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது. காரணம் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் கூட்டணி தொடர்பில் இன்னும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆனால் அடுத்த வாரம் கூடவுள்ள கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் இதுகுறித்து ஆராயப்படும். அதன்போது எடுக்கப்படும் தீர்மானத்தின் அடிப்படையிலேயே மகிந்த ராஜபக்சவின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி குறித்த சர்ச்சைக்கும் தீர்வு கிடைக்கும்.

எவ்வாறிருப்பினும் மகிந்த ராஜபக்சவின் உறுப்புரிமை நீங்கியுள்ளமை கவலையளிக்கிறது - என்றார். (எ)

# சவூதியிலிருந்து அழைத்து வரப்பட்ட பணிப் பெண்கள்

கொழும்பு, ஒக.16

சவூதியில் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை பணிப் பெண்கள் 15 பேர் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

சேவைக்காலம் நிறைவடைந்ததும், தொழில் வழங்குநர்களால் இலங்கை பணிப்பெண்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

சவூதியிலுள்ள இலங்கை தூதரகத்தின் தலையீட்டில் பணிப்பெண்கள் நாட்டுக்கு மீள அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இந்த பணிப்பெண்களுக்கு இழப்பீடும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. (எ)



# இலங்கை மக்களுக்கு இந்தியா உறுதியான ஆதரவை வழங்கும்

## தூதுவர் தரன்ஜித் சிங் சந்து தெரிவிப்பு

கொழும்பு, ஒக.16

பயங்கரவாதத்துக்கு எதிரான செயற்பாடுகளில் இந்தியா அனைத்து சந்தர்ப்பத்திலும் இலங்கைக்கு ஆதரவை வழங்கும். அண்மையில் பயங்கரவாத தாக்குதலை எதிர்கொண்டிருந்த இலங்கை மக்களுக்கும் உறுதியான ஆதரவை வழங்கும்.

இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 73 ஆவது சுதந்திர தின நிகழ்வு நேற்று கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:



அண்மையில் பயங்கரவாத தாக்குதலை எதிர்கொண்டிருந்த இலங்கை மக்களுக்கு நாம் எமது உறுதியான ஆதரவை என்றும் வெளிப்படுத்தி நிற்கின்றோம். இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடி கூறியதைப் போலவே, இந்தியா எப்பொழுதும் இலங்கையுடன் தனது உறுதியான ஆதரவை பகிர்ந்துகொள்ளும். என்றார்.

இந்திய சுதந்திர தின நிகழ்வுகள் நேற்றுக் காலை 8.30 மணியளவில் ஆரம்பமாகின. இராணுவ அணிவகுப்பு இடம்பெற்றது. இந்தியத் தூதுவரால் இந்தியத் தேசிய கொடி ஏற்றப்பட்டது. இந்திய பாரம்பரிய கலை நடனம் உள்ளிட்ட கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

அதேவேளை, யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்திலும் இந்திய சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெற்றன. இந்தியத் துணைத் தூதரகக் கொன்சியூலர் க.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், இந்தியதேசியக் கொடி ஏற்றி மரியாதை செலுத்தப்பட்டது. (ஏ-ரி)

# இயற்கை வாயு நிலங்களை கண்டறிய உடன்படிக்கை

கொழும்பு, ஒக.16

நாட்டில் கனிய எண்ணெய் மற்றும் இயற்கை வாயு என்பன காணப்படும் நிலப் பரப்புக்களைக் கண்டறிந்து, அவற்றை அகழ்ந்தெடுப்பதற்கான இருதரப்பு உடன்படிக்கையொன்று நேற்றுக் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி, பெற்றோலியவள அபிவிருத்தி அமைச்சர் கபீர் ஹாசிம் மற்றும் ஸ்கொட்லாந்தைதளமாகக்கொண்டு இயங்கும் பெல்ஜியோ என்டர்பிரைசஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தின் பொதுமுகாமையாளர் ஜோன் மக்போர்லேன் ஆகியோருக்கிடையில் கைச்சாத்திடப்பட்டது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி, பெற்றோலியவள அபிவிருத்தி அமைச்சில் மேற்படி இருதரப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. (எ)

# இடைக்கால அறிக்கையை சமர்ப்பிக்கப் பின்னடிப்பு

கொழும்பு, ஒக.16

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை செய்யும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணைகள் தொடர்பான இடைக்கால அறிக்கையை தற்போது நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதில்லை என முடிவு செய்துள்ளது.



இது தொடர்பாக நேற்றுக் கருத்துத் தெரிவித்த பிரதி சபாநாயகரும் தெரிவுக்குழுவின் தலைவருமான ஆனந்த குமாரசிறி, தற்போது விசாரணைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. ஆனால் இடைக்கால அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் தற்போது ஏற்படவில்லை எனக் கூறியுள்ளார்.

இதேவேளை- தெரிவுக்குழுவின் காலத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்க சபாநாயகரை கோரியதன் முக்கிய நோக்கம் இடைக்கால அறிக்கையைத் தொகுப்பதற்கே என்றும் அவர் கூறினார்.

தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை அழைப்பது குறித்தும் இறுதி முடிவு எட்டப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

ஒகஸ்ட் 20 ஆம் திகதி மீண்டும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை கூட்டுவது தொடர்பாகவும் முடிவு எட்டப்படவில்லை என்றும் - ஆனந்த குமாரசிறி தெரிவித்துள்ளார்.

## துறைமுகம்...

வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட மயிலிட்டி துறைமுகம் கடந்த வருடம் மக்கள் பாவனைக்காக விடப்பட்டது. மீன்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. தற்போது 70 வீதமான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தைப் பயன்படுத்தும் மக்கள் இன்னும் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை. பாடசாலைகள் விடுவிக்கப்பட வில்லை என்பது தொடர்பில் அரச தலைவருடன் பேசியபோது அவை அனைத்தும் உடனடியாக விடுவிக்கப்படு மென்றார்.

இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க மற்றும் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி தர்சன ஹெட்டியாராச்சி ஆகியோர் மக்களின் காணிகளை விடுவிப்பதில் மிகவும் உறுதுணையாக இருந்தவர்கள். ஒக்ரோபர் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றக் கலைப்புக்குப் பின்னர் காணி விடுவிப்பில் தாமதம் ஏற்பட்டது. இந்தத் துறைமுகத்தை இன்று (நேற்று) திறந்ததில் அர்த்தம் இருக்க வேண்டும். இந்தத் துறைமுகத்தை பயன்படுத்திய மக்கள் மீண்டும் இங்கு வந்து வாழ அந்த மக்களின் காணிகளை விடுவிக்கப்பட வேண்டும். இங்குள்ள சீமெந்து தொழிற்சாலை நிலங்கள், நகுலேஸ்வரம் தொடர்பான நிலங்கள், இராணுவத்தினரின் விடுதியுடன் தொடர்புடைய நிலங்கள் என்பவற்றைக் கையகப்படுத்துவதற்கான உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன. நாங்கள் தலைமை அமைச்சருடனும், அரச தலைவருடனும் பேசி அந்த முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டுள் ளது. போர்க் காலத்திலும், போர் முடிந்த பின்னரும் நூற்றுக்கணக்கான போராட்டங்களை நடத்தியிருக்கின்றோம். இந்த நிலங்களை விடுவிப்பதற்கு உச்ச நீதிமன்றில் இன்றும் வழக்குகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள ஏனைய இடங்களை விடுவிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ம-26)

## இன்னும்...

ணமாக இருக்கும். அதற்கு ஏற்ற வகையில் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன - இவ்வாறு தெரிவித்தார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.

தலைமை அமைச்சர் வடக்குக்கு மூன்று நாள்கள் சுற்றுப் பயணமாக வந்துள்ளார். சீரமைக்கப்பட்ட மயிலிட்டி துறைமுகத்தை அவர் நேற்று மக்களிடம் கையளித்தார். இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முகாம்களில் உள்ள மக்கள் மீண்டும் தத்தமது வீடுகளில் குடியேற வேண்டும். பாதுகாப்புக் காரணங்களுக்காக எடுக்கப்பட்ட மக்களின் நிலங்கள் அவர்களுக்கு மீண்டும் விடுவிக்கப்படும். இந்த செயற்பாடு விரைவாக நடைபெற்று வருகிறது. அதேபோன்று விடுவிக்கப்படும் இடங்களில் கோயில்களின் சீரமைப்பு கவனத்தில் கொள்ளப்படும். பலாலியில் வானூர்தி நிலையத்துக்கு காணிகள் தேவையாக உள்ளன. அதனால் உங்களின் இருப்பில் எந்தப் பிரச்சினையும் வாராது. கிராம எழுச்சி, துறைமுக அபிவிருத்தி, நவீன விவசாயமாக்கல், திறன் வகுப்பறைகளைத் திறத்தல், அண்மையப் பாடசாலை, நல்ல பாடசாலை உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் 14 பில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காங்கேசன்துறை துறைமுகம், சீமெந்துத் தொழிற்சாலை ஆகியவற்றின் அபிவிருத்திகளும், சீரமைப்பும் விரைவில் ஆரம்பிக்கப்படும். வடக்குக்கு அடுத்த ஐந்து வருடங்களில் என்ன தேவை என்பதை அறிந்து செயற்பட்டு வருகின்றோம். யாழ்ப்பாணம் முதல் ஹம்பாந்தோட்டை வரை வீதிகள் சரியாக இருக்க வேண்டும். வவுனியா பல்கலைக் கழக வளாகம் தனிப் பல்கலைக் கழகமாக அறிவிக்கப்படும் - என்றார். (ம7,26)

## பாதுகாப்பு...

லும் உள்ளன. அவற்றைக் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுங்கள் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்துமதத்தலைவர்கள்வலியுறுத்தியுள்ளனர்.

மூன்று நாள்கள் பயணமாக வடக்குக்கு வந்திருக்கும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பிரசித்திபெற்ற நல்லூர் ஆலயத்துக்கு நேற்றுச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டார். அதன் பின்னர் நல்லூர் ஆதீனத்தில் இந்துமதத் தலைவர்களுடனான சந்திப்பிலும் கலந்துகொண்டார். இதன்போதே தலைமை அமைச்சரிடம் மேற்கண்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் பகுதிகளுக்கும் நீங்கள் வருகை தந்தது மகிழ்ச்சி. திருப்பதிக்குச் சென்று உங்கள் எடைக்கு ஏற்ப ஐம்பொன்னை அள்ளி வழங்கினீர்கள். அது நீங்கள் இந்து சமயத்தில் கொண்டுள்ள பற்றைக் காட்டுகிறது. அதேபோன்று இந்துக்கள் பரந்து வாழும் இடங்கள் மற்றும் உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள ஆலயங்களை விடுவித்தல், சீரமைத்தல், பூசைகளை நடத்துதல் போன்ற செயற்பாடுகள் நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று திருக்கேதீச்சர வீதி அலங்கார வளைவு அமைக்கும் விடயத்தில் பிரச்சினைகள் காணப்படுகின்றன. அதற்கும் நடவடிக்கை எடுத்து வளைவை நிரந்தரமாக அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று கன்னியா வெந்நீர் ஊற்றுப் பிள்ளயார் கோவில் விடயத்தில் கவனம் எடுக்க வேண்டும். ஆயிரம் விகாரைகள் அமைக்கும் திட்டம் எமக்குச் சரியான விடயமாகத் தோன்றவில்லை என்று இந்து மதத் தலைவர்கள் தெரிவித்தனர்.

அதற்குத் தலைமை அமைச்சர் தெரிவித்ததாவது:

உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள இந்துக் கோவில்கள் தொடர்பில் நான் ஆராய்ந்து நகர்வுகளை மேற்கொள்வேன். நாட்டிலுள்ள ஈச்சரங்களில் நான் மிகுந்த கவனம் உடையவனாக உள்ளேன். திருக்கேதீச்சர வளைவு அமைப்பது தொடர்பில் ஆயருடன் கலந்துரையாடவுள்ளேன். ஆயிரம் விகாரைகள் அமைக்கும் திட்டத்துக்கு நிதி ஒதுக்கீடுகள் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை. இது தேர்தல் பரப்புரையாகக்கூட இருக்கலாம். யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் அமையவுள்ள புதிய நகரமயமாக்கல் திட்டத்தின்போது அதில் இந்துக் கோவில் ஒன்றை அமைப்பதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் - என்றார்.

இந்தச் சந்திப்பின்போது சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர், அமைச்சின் செயலர் சிவஞானசோதி, மாநகர ஆணையாளர், யாழ்ப்பாண பிரதேச செயலர் மற்றும் அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (த-7)

## மாகாணத்...

ளது. தலைமை நீதியரசர் அரச தலைவர் சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

அதன்படி, தலைமை நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையில் புவனேக அலுவிஹார, சிசிர ஆப்றூ, பிரசன்ன ஜயவர்தன, விஜித் மலல்கொட ஆகியோர் அடங்கிய ஐவர் கொண்ட நீதியரசர்கள் குழாமே இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்தத் பெயரிடப்பட்டுள்ளது.

இந்த நீதியரசர்கள் குழாம் முன்னிலையில், அரச தலைவரின் குறித்த விண்ணப்பம் மீது எதிர்வரும் 23ஆம் திகதி முற்பகல் 10 மணி முதல் விசாரணைகளை முன்னெடுக்க உயர் நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி உயர்நீதிமன்றின் தீர்ப்பானது, வியாக்கியானமாக இம்மாதம் 30ஆம் திகதிக்குள் அரச தலைவருக்கு அறிவிக்கப்படவுள்ளது.

இந்தநிலையில், ஜனாதிபதியின் இந்த விண்ணப்பம் தொடர்பில் சட்ட நுணுக்கங்கள் அடங்கிய எழுத்து மூல வாதங்களின் சமர்ப்பணங்கள் இருக்குமாயின் அவற்றை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு உயர்நீதிமன்றால் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றப் பதிவாளர் ஊடாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள குறித்த எழுத்து மூல அறிவித்தலில், எல்லை நிர்ணயம் தொடர்பான அறிக்கை முன்வைக்கப்பட்டிராத சந்தர்ப்பத்தில் பழைய முறைமையில் தேர்தலை நடத்துவதற்கான சட்ட ரீதியிலான இயலுமை தொடர்பில் அரசமைப்பின் 129 (1)ஆம் உறுப்புரைக்கு அமைய உயர் நீதிமன்றத்திடம் அரச தலைவர் வியாக்கியானம் கோரியுள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி குறித்த விடயம் தொடர்பில் எழுத்து மூல வாதங்களின் சமர்ப்பணங்களை முன்வைக்க சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்களுக்குச் சந்தர்ப்பம் இருக்குமாயின் அது தொடர்பில் எதிர்வரும் 21ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் அவற்றை உயர் மன்றப் நீதிபதிவாளரிடம் ஒப்படைக்குமாறு அந்த அறிவித்தலில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-21,22,71)

## சமத்துவம்...

யாழ்ப்பாணம் குருநகரில் மீன்பிடித் துறைமுகத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தலைமை அமைச்சர் ரணிலுக்கும் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனுக்கும் இடையில் இடம்பெற்ற கருத்துப்பகிர்வு தொடர்பில் உதயனுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் பொருளாதார அபிவிருத்திக்கு மட்டுமாக அரசுக்கு ஆதரவு வழங்கவில்லை. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் தொடர்பில் இன்னமும் இறுதி அறிவிப்பு வெளிவரவில்லை. அந்த அறிவிப்பு வெளிவர முன்னர் தலைமை அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணிலிடம் 'தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் சம்பந்தமாக உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன?' என்று கேட்டேன். அதற்கு பதில் வழங்கிய தலைமை அமைச்சர் ரணில், 'தமிழ் மக்கள் சமத்துவத்துடனும், சுய மரியாதையுடனும் தங்கள் விவகாரங்களைத் தாமே தீர்மானிக்கின்ற வகையில் அதிகாரப் பகிர்வை வழங்குவதே எமது நிலைப்பாடு. இதுவரை எமது கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஆதலால்தான் இந்தத் தீர்வை இதுவரை எம்மால் வழங்க முடியவில்லை. அவ்வாறானதொரு பெரும்பான்மை கிடைத்தால் நிச்சயம் அதை நிறைவேற்றுவோம். வரவிருக்கும் தேர்தல்களில் நாம் தோற்றாலும் எமது நிலைப்பாட்டில் மாற்றமில்லை' என்று தெரிவித்தார் - என்றார். (ம)

## கொலை...

இவ்வாறு தெரிவித்தார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.

யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ளதலைமை அமைச்சர் ரணில், திருநெல்வேலியில் உள்ள விவசாய ஆராய்ச்சி, உற்பத்தி நிலையத்தை நேற்றுத் திறந்துவைத்தார். அதன் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டார் அவர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று திறந்து வைக்கப்பட்ட இந்தக் கட்டடத் தொகுதி 1960ஆம் ஆண்டிலேயே முன்னாள் அரச தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இங்கு போதுமான அலுவலர்கள் இல்லை. இங்கு உற்பத்தி விவசாயப் பொருள்களையும், பெரிய பூசணிக் காய்களையும், ஏனைய மரக்கறி வகைகளையும் பார்க்கும்போது அவை எப்படிச் செழிப்பாக வளர்ந்துள்ளன என்பதை அறியமுடிகிறது. நாங்கள் இந்தத் தொழில்களை நவீனமயப்படுத்த வேண்டும். அப்போதுதான் சிறந்த அறுவடையைப் பெற இயலும். மீன்பிடித்துறையை அப்படி நவீனமயமாக்கி குளிரூட்டிகளை அமைக்கவுள்ளோம். இதில் தனியாரும் அரசும் இணைந்தே செயற்படவேண்டும். 21ஆம் நூற்றாண்டை நோக்கி நாங்கள் முன்செல்ல வேண்டும்.

நான் நல்லூர் கோவில் மற்றும் வீடமைப்புத் திட்டங்கள் போன்றவற்றுக்கு இன்று சென்றேன். இப்போது மக்கள் அமைதியாக, சந்தோசமாக வாழ்வதை நான் கண்டேன். மகிந்த, கோத்தபாய காலத்தில் இந்த நிலமையா இருந்தது. மக்கள் அச்சத்துடனேயே வாழ்ந்தார்கள். துரதிஷ்டவசமாக எங்கள் அரசின் காலத்தில் தேவாலயங்களில் குண்டுகள் வெடித்தன. அதனுடன் தொடர்புடைய 200 பேர் வரை கைது செய்யப்பட்டுவிட்டனர். நாங்கள் அது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறோம். கொழும்பு அதி பாதுகாப்புப் பகுதியாகக் கூறப்பட்ட காலத்தில்தான் ரவிராஜ் பொதுசாலையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் சரியாகச் சிங்களம் பேசுவதில்லை என்பதாலேயே கொல்லப்பட்டார் என்று கூறினர். கொழும்பில் உச்சகட்டப் பாதுகாப்பு இருந்த காலகட்டத்திலே இடம்பெற்ற இந்தக் கொலையைச் செய்தவர்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. அதிபாதுகாப்புக் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள சிவன் கோவிலில்தான் அமைச்சர் மகேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் எங்கள் அரசுடன் சார்ந்து செயற்பட்டதாலேயே விடுதலைப் புலிகள் அவரைக் கொன்றனர் எனக் கூறப்பட்டது. இவ்வளவு கட்டுக்காவல்களுக்கு மத்தியில் எப்படி விடுதலைப்புலிகள் அங்கு வந்து அவரைச் சுட்டிருக்க முடியும். அப்படியானால் அவரைச் சுட்டவர்களை மகிந்த அரசால் கண்டுபிடிக்கமுயவில்லை. ஓர் அமைச்சருக்கே பாதுகாப்பு அளிக்க இயலாத மகிந்த அரசு மீண்டும் வரவேண்டுமா? அந்தப் பாதுகாப்பற்ற நிலமை உருவாகுவதற்கா நீங்கள் வாக்களிக்கப் போகிறீர்கள்? கொலைக் கலாசாரம் மீண்டும் தலைதூக்கக் கூடாது. நாங்கள் சமாதானமாக முன்னோக்கிச் சென்று தம்புள்ள, வெலிமடை போன்றவற்றுக்கு ஒப்பான விவசாய வர்த்தக நிலயமொன்றை யாழ்ப்பாணத்திலும் உருவாக்குவோம் - என்றார். (ம-21)

## பெரமுன...

விப்பிலும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவின் பெயர் இடம்பெறவில்லை என்ற தகவல் வெளியாகியுள்ளது. இதனால் அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. "நான் இப்போது அமெரிக்கக் குடிமகன் இல்லை" என்று கோத்தபாய ராஜபக்ச பகிரங்கமாகக் கூறி வந்தாலும், அதை இதுவரை உத்தியோகபூர்வமாக அமெரிக்க ஆவணங்கள் உறுதிசெய்யவில்லை.

இந்த ஆண்டின் முதல் காலாண்டில் அமெரிக்கக் குடியுரிமையைக் கைவிட்டவர்கள் பட்டியலிலும் கோத்தபாயவின் பெயர் இடம் பெற்றிருக்கவில்லை. இவ்வருடம் மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில் கோத்தபாய குடியுரிமையைக் கைவிட்டிருக்கவில்லை என்பதை அமெரிக்க ஆவணங்கள் உறுதி செய்திருந்தன.

ஏப்ரல் மாதம் 17ஆம் திகதியன்று அமெரிக்கக் குடியுரிமையைக் கைவிடுவதற்கான ஆவணங்களை கோத்தபாய கையளித்தார் எனக் கூறப்பட்டது. அதனால் அரையாண்டு அறிக்கையில் கோத்தபாயவின் பெயர் இடம் பெறும் என அவர் தரப்பில் கூறப்பட்டு வந்தது. எனினும், அமெரிக்கா வெளியிட்ட பிந்தைய ஆவணத்திலும் அந்த நாட்டுக் குடியுரிமையைக் கைவிட்டவர்கள் பட்டியலில் கோத்தபாயவின் பெயர் இல்லை. 2019ஆம் ஆண்டு ஒகஸ்ட் 7ஆம் திகதி வரை குடியுரிமையைத் துறந்தவர்கள் பட்டியல் வெளியாகியுள்ளது.

கோத்தபாய அமெரிக்கக் குடியுரிமையைத் துறந்தார் என ஓர் ஆவணத்தை, அவரது ஊடகப்பிரிவு அண்மையில் வெளியிட்டிருந்தது. அந்த ஆவணத்தின்படி, இவ்வருடம் மே 3ஆம் திகதி அவரது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. எனினும், குடியுரிமையைத் துறந்தவர்கள் பற்றிய அரையாண்டு அறிக்கையிலும் கோத்தபாயவின் பெயர் இடம்பெறவில்லை.

19ஆவது அரசியல் திருத்தத்தின் 91ஆவது பிரிவின்படி, இலங்கையைத் தவிர வேறு எந்த நாட்டினதும் குடிமகனாக இருந்தால் எந்தவொரு நபரும் அரச தலைவர் பதவிக்குப் போட்டியிடவோ அல்லது அரச தலைவராகப் பணியாற்றவோ முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-22)

## திறந்து...


திறந்து வைக்கப்பட்டது.

2018ஆம் ஆண்டு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் சுமார் 150 மில்லியன் ரூபா செலவில் மயிலிட்டி துறைமுகத்தின் சீரமைப்புப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்த நிலையில் துறைமுகம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. (ம-ரி1)

# பட்டதாரிகள் இன்று கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம் ஓக.16

வேலையற்ற பட்டதாரிகளின் கவனயீர்ப்புப் போராட்டம் யாழ்ப்பாண மாவட்ட செயலகம் முன்பாக இன்று காலை 8 மணியளவில் இடம்பெறவுள்ளது. 'வேலையற்ற பட்டதாரிகளின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளுங்கள்' எனும் தொனிப்பொருளில் இன்றைய கவனவீர்ப்பு இடம்பெறவுள்ளது. இந்தப் போராட்டத்தில் இதுவரை வேலை கிடைக்காத அனைத்துப் பட்டதாரிகள், பட்டதாரிகளின் பெற்றோர்கள், உயர்தொழில்நுட்ப மாணவர்கள் என்று பல தப்பினரும் கலந்துகொள்ள வேண்டும் என்று ஏற்பாட்டுக்குழு கோரிக்கை விடுத்துள்ளது. (ம)



## விடுவிக்கப்பட்டது ஈரானின் கப்பல்?

*வேறுபட்ட கருத்துகளை வெளியிடும் ஜிப்ரால்டர் - பிரிட்டன் தரப்புகள்*

லண்டன், ஓக.16
ஜிப்ரால்டர் கடற்பரப்பில் வைத்துப் பிரித்தானியாவால் கைப்பற்றப்பட்ட ஈரானின் எண்ணெய்க் கப்பலைவிடுவிக்கஉள்ளதாக ஜிப்ரால்டரின் முதலமைச்சர் பாபியன் பிகார்டோ அறிவித்தார் என்று ஜிப்ரால்டர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. குறித்த கப்பலைக் கைப்பற்றித் தாம் மேற்கொண்டவிசாரணைகளில் அந்தக் கப்பல் சிரியாவுக்கு எண்ணெய்கொண்டுசெல்லவில்லை என்பது உறுதியாகியுள்ளதால் அதை விடுவிக்கமுடிவுசெய்துள்ளதாக அவர் அறிவித்தார் என்று ஊடகங்கள் அந்தச் செய்தியில் குறிப்பிட்டன. நிலமை இவ்வாறிருக்க, பிரிட்டன் அதிகாரி ஒருவர் பிரிட்டனைச் சேர்ந்த ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது, குறித்த கப்பல் விடுவிக்கப்பட்ட செய்திஉண்மைக்குப்புறம்பானது எனக் கூறினார்.

**பின்னணி**
அணுஆயுதஒப்பந்தம்ஒன்று தொடர்பில் அமெரிக்கா ஈரான் முறுகல் நிலை நீடிக்கிறது. ஈரான் மீது அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன் உட்படச் சில நாடுகள் தடைகளை விதித்துள்ளன. அந்தத் தடைகள், பன்னாட்டுச் சட்டங்களை மீறி சிரியாவுக்குஎண்ணெயைக்கொண்டு சென்றதாகக் குற்றஞ்சாட்டி ஈரானுக்குச் சொந்தமான 'கிரேஸ் 1' என்கிற எண்ணெய்க் கப்பலைக் கடந்த மாதம் ஜிப்ரால்டர் கடற்பரப்பில்வைத்துப்பிரிட்டன்கைப்பற்றியது. பிரிட்டனின் தன்னாட்சிப் பிரதேசமான ஜிப்ரால்டரின் அரசு அந்தக் கப்பலை 30 நாள்களுக்குத் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தியது. தனது கப்பலை விடுவிக்குமாறு ஈரான் பிரிட்டனுக்கு எச்சரிக்கை விடுத்து வருகிறது. பின்னர்வளைகுடாவில் பயணித்த பிரிட்டனின் எண்ணொய்க் கப்பலை ஈரான் கைப்பற்றியது.

## எங்கள்செல்வத்தைச்சூறையாட திட்டம்தீட்டுகின்றதுஅமெரிக்கா!

*ஈரான் அதிபர் தெரிவிப்பு*

தெஹ்ரான், ஓக.16
வளைகுடா நாடுகளின் செல்வத்தைக் கொள்ளையடிப்பதற்கான அமெரிக்காவின் திட்டம்தான் ஹோர்மோஸ் கடற்பரப்பில் அதன் ஆதிக்கத்தை அதிகரிப்பதற்கான முன்மொழிவுகள் என்று குற்றஞ் சாட்டினார் ஈரான் அதிபர் ஹசன் ரவுகானி. கடந்தபுதன்கிழமை இடம்பெற்றஈரானின் அமைச்சரவைக் கூட்டத்திலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். வளைகுடா நாடுகள் தங்கள் நாட்டின் பாதுகாப்பைத் தாங்களே கவனித்துக்கொள்ள வேண்டும்.
வேறு நாடுகள் இதில் தலையிடக்கூடாது. அப்படிச் செய்தால் இறுதியில் அது எங்கள் நாட்டுக்கே அச்சுறுத்தலாக மாறும். இவ்வளவு காலமும் இருந்தது போல் நாங்களே எங்களைப் பாதுகாத்துக்கொள்வோம்என்றுஅமைச்சரவைக்கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்தார்.

**பின்னணி**
ஓமானுக்கும்-ஈரானுக்கும் இடையிலான குறுகியகடற்பரப்பான ஹோர்மோஸ் நீரிணை ஊடாக உலக எண்ணெய் உற்பத்தியின் 5 இல் ஒரு பங்கு கொண்டு செல்லப்படும் கப்பல்களின் போக்குவரத்து நடந்தேறுகின்றது. அணு ஆயுத விவகாரம் தொடர்பில் ஈரானுக்கும், அமெரிக்காவுக்கும் முறுகல் நிலை ஏற்பட்டதிலிருந்து மத்திய கிழக்குப் பிராந்தியத்தில்தனதுபடைகளை அதிகரித்துவருகிறது அமெரிக்கா. ஈரான் மீது தாக்குதல் நடத்தவும் எத்தனித்தது.
ஹோர்மோஸ் நீரிணைப் பகுதியில் பயணித்த பிரிட்டனின் எண்ணய்க் கப்பலை ஈரான் கைப்பற்றியதிலிருந்து அந்த நீரிணைப் பகுதியில் பாதுகாப்புப்பணியில் ஈடுபடுவதற்குப் பன்னாட்டுப் படையை உருவாக்கத் திட்டமிட்டு வருகிறது அமெரிக்கா. இதைச்சுட்டிக்காட்டியேஈரான் அதிபர்மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# தீவிரவாத சித்தாந்தத்துடன் பயணிக்கின்றது இந்தியா!

*ஹிட்லரின் போக்கும் மோடியின் போக்கும் ஒன்றே! இம்ரான்கான் தெரிவிப்பு*



**இஸ்லாமபாத்,ஓக.16**
**இந்திய அரசானது தீவிரவாத சித்தாந்தத்துடன் பேரழிவைநோக்கிச்செல்கின்றதுஎன்றுபாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான் கான் தெரிவித்தார். பாகிஸ்தானின் ஆளுகைக்குட்பட்ட காஷ்மீரில் உள்ள நாடாளுமன்றத்தில் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது: காஷ்மீர் விவகாரத்தில் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி பெரிய தவறைச் செய்து கொண்டிருக்கிறார். அவர் தனது இறுதி ஆட்டத்தை ஆடிக் கொண்டிருக்கிறார். தற்போது காஷ்மீருக்குமோடிசெய்துகொண்டிருப்பது, ஹிட்லரின் இறுதித் தீர்வு போன்று இருக்கிறது. 18கோடிமுஸ்லிம்கள்இந்தியாவில் அச்சுறுத்தலோடு வாழ்கிறார்கள். இந்த முடிவு இறுதியில் பின்னடைவையே ஏற்படுத்தும். உலகில் எங்கெல்லாம் மக்கள் ஒதுக்கப்படுகிறார்களோ அங்கு தீவிரவாதம் உருவாகும். ஆர்.எஸ்.எஸ்ஸின் (இந்தியாவில் இந்துத்துவவாதிகளால்உருவாக்கப்பட்டவலதுசாரி இந்து அமைப்பு) குண்டர்கள் மக்களைக் கொல்கிறார்கள், நீதிபதிகளை மிரட்டுகிறார்கள். இதனைத்தான் ஹிட்லரின்நாசிப்படைகளும்செய்தன. அவர்களின் மேலாதிக்கத்தை எதிர்த்தவர்களை அவர்கள் தேசத்துரோகிகள் என்றார்கள்.
ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தமானது, அப்படியே நாசிக்களின் சித்தாந்தம் போல் உள்ளது.
இரண்டாம் உலகப்போர் முடிந்த பிறகு, இனஅழிப்பு இனி நடக்காது என்று கூட்டாகமுடிவெடுக்கப்பட்டது. ஆனால், ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தம் அந்த நிலைக்கும் மீண்டும் இட்டுச் செல்கிறது. ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தம்தான் மகாத்மா காந்தியைக்கொன்றது. ஹிட்லரின் ஆணவப் போக்குக்கும், நரேந்திர மோடியின் ஆணவப் போக்குக்கும் வித்தியாசம் இல்லை. ஹிட்லர் அழிக்கப்பட்டார் என வரலாறு சொல்கிறது. நெப்போலியன் அழிக்கப்பட்டார். போர் என்பது தீர்வல்ல.
அது பல்வேறு மோதல்களுக்கு வழிவகுக்கும். இந்த முடிவால் அதிக அழிவு இந்தியாவுக்கே. அரசமைப்பைச் சேதப்படுத்தி உச்சநீதிமன்ற மற்றும் ஜம்மு காஷ்மீர் உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராகச் செயற்பட்டிருக்கிறார்கள். இந்திய அமைச்சர்களின் பேச்சு தீவிரவாத மனநிலையைக் கொண்டிருக்கிறது. நாங்கள் சூழலைக் கண்காணித்துக் கொண்டு இருக்கிறோம். பாகிஸ்தான் அனைத்துக்கும் தயாராக இருக்கிறது - என்றார்.

## கடலில்தவித்தஅகதிகள் லிபியாவில்தொடர்அவலம்

திரிபோலி,ஓக.16
ஐரோப்பிய நாடுகளில் குடியேறும்நோக்கத்தில்லிபியாவிலிருந்து மத்திய தரைக் கடலூடாகப் படகில் பயணித்த அகதிகள் 100 பேர் நடுக்கடலில் அல்லாடினர். பின்னர்லிபியாக்கடற்படையினரால் அவர்கள் மீட்கப்பட்டனர். இந்தத் தகவலை இடம்பெயர்வுக்கான பன்னாட்டு அமைப்பு வெளியிட்டது. லிபியாவில் இருந்து ஐரோப்பா நோக்கிய இந்த வகையான சட்டவிரோதப் பயணங்கள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**பின்னணி**
ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான லிபியாவில் 2011ஆம் ஆண்டில் கடாபியின் ஆட்சி வீழ்த்தப்பட்ட பிறகு அதிகாரப் போர் ஆரம்பித்தது. போராளிக் குழுக்களின் மோதலில்மக்கள்கொல்லப்படுகின்றனர். தமதுஉயிரை பாதுகாத்துகொள்வதற்காக லிபியமக்கள்ஜேர்மனி, இத்தாலி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் புகலிடம் தேடிச் சட்ட விரோதமாகக் கடலில் ஆபத்தான பயணம் மேற்கொள்கின்றனர்.
இதனால் பல்வேறு விபத்து ஏற்பட்டுச் சாவுச் சம்பவங்கள் தொடர்ச்சியாக நடக்கின்றன.



இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் சரணடைந்த 74ஆவது ஆண்டு நிறைவில், பங்கு கொண்ட இராணுவச் சீருடை அணிந்த ஜப்பானிய ஆண்கள் ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் உள்ள யசுகுனி ஆலயம் நோக்கி நடைபவனியில் ஈடுபட்டனர்.

### சட்டத்தை மீறினார் ஜஸ்டின்ட்ரூடோ

ஊழல் வழக்கு விசாரணை ஒன்றில் கனடாவின் சட்டத்தை அதன் தலைமை அமைச்சரான ஜஸ்டின் ட்ரூடோ மீறி உள்ளார் என்று நெறிமுறைகள் கண்காணிப்பு அமைப்பு ஒன்று தெரிவித்தது.
இது குறித்து மேலும் தெரியவருவதாவது: 'எஸ்.என்.சி' என்கிற கனடாவின் கட்டுமான நிறுவனமானது லிபியாவில் கடாபியின் ஆட்சிக் காலத்தில் கட்டுமான ஒப்பந்தம் ஒன்றைப் பெறுவதற்காக லிபிய அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுத்தது என்ற குற்றச்சாட்டானது விசாரிக்கப்பட்டு வருகிறது. இந்த விவகாரத்தில் குற்றஞ் சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர் ஒருவருக்கு உதவுவதற்கு ஜஸ்டின் ட்ரூடோ முயன்றதாக அந்த விசாரணை அமைப்பின் ஆணையாளர் கூறினார்.
கனடாவில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் அதிபர் தேர்தல் நடக்கவுள்ள நிலையில் இந்த விசாரணை அறிக்கை வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஹொங்கொங் விவகாரம்

# ஹொங்கொங்கின் எல்லையில் படைகளைக் குவிக்கிறது சீனா

## ட்ரம்ப் தெரிவிப்பு



வோஷிங்டன்.ஓக.16
ஹொங்கொங் எல்லையில் சீனா படைகளைக் குவித்து வருகின்றது என்று அமெரிக்க அரச தலைவர் ட்ரம்ப் தெரிவித்தார். அமெரிக்காவின்பென்சில்வேனியாமாகாணத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் உரையாற்றியபோதேட்ரம்ப்இவ்வாறுதெரிவித்தார். அங்குஅவர்மேலும்தெரிவித்ததாவது:
ஹொங்கொங்கில்தற்போது மோசமானநிலைநீடிக்கிறது. என்னநடக்கிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம். இதில் எவரும் கொல்லப்படமாட்டார்கள் என்று நம்புகிறேன். ஹொங்கொங்கின் எல்லையில் சீனாதனதுபடையைகுவித்துவருவதைநமதுஉளவுத்துறைஉறுதிப்படுத்தி இருக்கிறது. அனைவரும் பொறுமையாகவும், பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும் - என்றார்.

**பின்னணி**
சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்கின் குற்றவாளிகளைச் சீனாவில் நீதி நடவடிக்கைகளுக்கு உட்படுத்தும்வகையிலானசட்டத்திருத்தத்தைக் ஹொங்கொங்நிர்வாகம்கடந்தசிலநாள்களுக்கு முன்னர் கொண்டுவந்தது. இந்தத் தீர்மானத்துக்கு ஹொங்கொங் மக்கள் எதிர்ப்புத்தெரிவித்தனர். அவர்கள்நடத்திய பெரும் போராட்டத்தால் ஹொங்கொங் முடங்கியது.
குறித்த தீர்மானத்தை நிறுத்தி வைப்பதாக அறிவித்தார்ஹொங்கொங்கின்தலைமை நிர்வாகி கோரி லாம். அதை முற்றாகக் கைவிடுமாறு கோரிப் போராட்டங்கள் தொடர்ந்தன.
சமீபத்தில் நடந்த போராட்டத்தில் வன்முறை வெடித்தது. ஹொங்கொங் விடயத்தில்பொறுமைகாக்கமுடியாதுஎன்றுசீனா எச்சரிக்கைத் தொனியில் தெரிவித்தது. போராட்டக்காரர்களை இனந் தெரியாத நபர்கள்தாக்கினர். அங்குவார இறுதிநாள்களில்மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவருகிறார்கள்.

---

கடந்த வார இறுதியில் ஹொங்கொங்கில் நடந்த போராட்டங்களின்போது போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் தாக்குதல்களை மேற்கொண்டனர். இந்தச் சம்பவத்தைப் பல தரப்பினரும் கண்டித்தனர்.
மனிதஉரிமைஅமைப்புக்கள் ஹொங்கொங் நிர்வாகத்துக்குத் தமது விமர்சனத்தைத் தெரிவித்தனர். இந்த நிலையில் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார்தாக்குதல்நடத்துவதைச் சித்தரிக்கின்ற ஒளிப்படங்க ளின் கோர்வை ஒன்றை வெளியிட்டது பன்னாட்டு ஊடகமான ரெய்டர்ஸ்.




---

## ஹொங்கொங் போராட்டத்துக்கு ஹிலாரி கிளின்டன் ஆதரவு



ஜனநாயகத்துக்காகக்குரல்கொடுக்கின்றஹொங்கொங்மக்களின் போராட்டத்துக்கு நாம் ஒற்றுமையுடன் நிற்க வேண்டும் என்று ஹிலாரி கிளின்டன் தெரிவித்தார். இதுகுறித்து ஹிலாரி கிளின்டன் தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது:
ஜனநாயகத்துக்காகக்குரல்கொடுக்கின்றஹொங்கொங்மக்களின் போராட்டத்துக்கு நாம் ஒற்றுமையுடன் நிற்க வேண்டும். அடக்குமுறையிலிருந்து விடுதலைதான் அவர்கள் பார்க்க விரும்பும் உலகம் என்று பதிவிட்டார்.
ஹொங்கொங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடருந்து நிலையம், வானூர்தி நிலையம் உட்படப் பல்வேறு பகுதிகளில் அரசுக்கு எதிராகப் போராட்டக்காரர்கள் அமைதிப் பேரணி சென்றனர். பல இடங்களில்பொலிஸார்அவர்கள்மீதுதாக்குதல்நடத்தினர். இதனால் போராட்டக்காரர்கள்பலத்தகாயம்அடைந்தனர். தொடர்ந்துபோராட்டக்காரர்கள் பேரணியில் ஈடுபட்ட நிலையில் போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து ஹொங்கொங்கில் பதற்றம் நிலவி வருகிறது. இந்த நிலையிலேயே ஹொங்கொங் மக்களுக்குத் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார் அமெரிக்க அரசதலைவர் வேட்பாளரும், ஜனநாயகக்கட்சியின் மூத்த உறுப்பினருமான ஹிலாரி கிளிண்டன்.

## சீனாவின் அருமை உங்களுக்குப் புரியாது ஹொங்கொங்கில் அமைதி திரும்பட்டும்

### நடிகர் ஜாக்கிஜான் தெரிவிப்பு



பீஜிங்.ஓக.16
ஹொங்கொங்கில் போராட்டங்கள் அதிகரித்து வரும் நிலையில், அங்கு அமைதி திரும்பவேண்டும் என்று சீனாவைச் சேர்ந்த பிரபல திரைப்படநடிகர்ஜாக்கிஜான் தெரிவித்தார். ஹொங்கொங்கில் ஹொங்கொங் நிர்வாகத்துக்குஎதிராகவும், சீனாவுக்கு எதிராகவும் ஒரு மாதத்துக்கு மேலாகப் போராட்டங்கள்நடந்துவருகின்றன. இந்தநிலையிலேயேஜாக்கிஜான் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார். இதுகுறித்து ஜாக்கிஜான் மேலும் தெரிவித்ததாவது:
சீனக் கொடியின் காவலனாகவும், ஹொங்கொங் சமூகத்தின் உறுப்பினராகவும் நான் எனது அடிப்படைத் தேச உணர்வை வெளிப்படுத்துகிறேன். நான் பல நாடுகளுக்குப் பயணித்திருக்கிறேன். இதில்நமதுநாடுசமீபஆண்டுகளில்வேகமாகமுன்னேற்றம் அடைந்து வருகிறது. நான் சீனாவைச் சேர்ந்தவன் என்ற பெருமையை எங்கும் உணர்கிறேன். ஹொங்கொங் நான் பிறந்த இடம். எனது சொந்த நகரம். ஆனால் சீனா எனது நாடு. நான்எனதுநாட்டைநேசிக்கிறேன். பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை, அமைதி ஆகியவை புதிய சுவாசம் போன்றவை. அதனை நீங்கள் இழக்கும்வரை அதன் அருமை உங்களுக்குப் புரியாது. ஹொங்கொங்கில் விரைவில் அமைதி திரும்பும் என்று நம்புகிறேன்' என்று தெரிவித்தார்.



## இன்றைய நாள்

**மேடம்:** உங்கள் செயல்களில் வசீகர மாற்றம் ஏற்படும். புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். உபரி பணவரவில் கொஞ்சம் சேமிப்பீர்கள்.

**இடபம்:** எதிர்மறையாக பேசுபவரிடம் விலகுவது நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் ஆரவாரத்தன்மை தவிர்க்கவும். பணவரவில் தாமதம் இருக்கும். உடல் நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும்.

**மிதுனம்:** அவசரப்பணி ஏற்படலாம். அக்கம் பக்கத்தவருடன் நீங்கள் அதிகம் பேசக் கூடாது. தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாக்கவும். வாகனத்தில் பராமரிப்பு தேவைப்படும்.

**கடகம்:** உங்கள் மனம் தெளிந்த நீரோடை போல இருக்கும். எந்தக் காரியத்திலும், சமயோசிதமாக செயற்படுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து மனதில் நம்பிக்கை வளரும். உபரி பணவருமானம் வந்து சேரும்.

**சிம்மம்:** உங்கள் மீது பலரும் நல்ல எண்ணம் கொள்வர். இதனால் மனதில் புதிய உற்சாகம் பிறக்கும். தொழில், வியாபாரத்தில் உருவான குறுக்கீடு விலகும்.

**கன்னி:** எவரிடமும் ரகசிய விடயம் சொல்ல வேண்டாம். தொழிலில் உற்பத்தி விற்பனை சுமாராக இருக்கும். அளவான பணவரவு கிடைக்கும். சீரான ஓய்வு உடல் ஆரோக்கியத்தை பாதுகாக்கும்.

**துலாம்:** உங்களால் பலன்பெற்று நன்றி மறந்தவரை மன்னிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி திருப்திகரமாகும். தாராள அளவில் பணவரவு கிடைக்கும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**விருச்சிகம்:** மனஉறுதியுடன் நேர்மை வழியில் நடை போடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குறையை சரி செய்வதால் உற்பத்தி, விற்பனை சீராகும்.

**தனுசு:** முக்கியமானபணி நிறைவேற்ற காலஅவகாசம்தேவைப்படும். எவரிடமும் சச்சரவு பேச வேண்டாம். தொழிலில் உற்பத்தி,விற்பனைஅளவுடன்இருக்கும்.

**மகரம்:** இஷ்ட தெய்வத்தின் அனுக்கிரகம் பெறுவீர்கள். திட்டமிட்ட பணி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் அனுகூலம் ஒரு சேர கிடைக்கும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**கும்பம்:** சிலர் உங்களிடம் பொறாமை கொள்வர். தொழில், வியாபாரத்தில் போட்டி உருவாகும். அதிக உழைப்பால் உற்பத்திவிற்பனைசீராகும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**மீனம்:** திட்டமிட்ட பணியை எளிதாக நிறைவேற்றுவீர்கள். நிகழ்வுகள் இனிதாக அமையும். தொழில், வியாபாரம் செழித்து மகிழ்ச்சி பெறுவீர்கள். உபரி பணவருமானம் கிடைக்கும். உறவினர் ஆதரவாகச் செயற்படுவர்.

# வதிரி சிறிமுருகன் வி.க. இறுதிக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம்,ஓக.16
அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் வடமராட்சி ரீதியாக நடத்திய அமரர் கனகசபாபதி சத்திய நேசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான அணிக்கு 7வீரர்கள் பங்கு பற்றும் 5 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரில் வதிரி சிறிமுருகன் விளையாட்டுக்கழக அணி இறுதிக்கு முன்னேற்றம்.

அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் வதிரி சிறிமுருகன்விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி 5 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் திருவரன் 28 ஓட்டங்களையும், டெஸ்மன் 18 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் சதீஸ் 2 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குக் களமிறங்கிய வதிரி சிறிமுருகன் விளையாட்டுக்கழக அணி 4.5 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் உமைசுதன் 49 ஓட்டங்களையும், திரு 9 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ராஜா, கஜந்தி ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். (23)



# கரைத்துறைப்பற்று பி. செ. அணி கிண்ணத்தைச் சுவீகரித்தது

யாழ்ப்பாணம்,ஓக.16
முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவில் ஒட்டு மொத்த புள்ளிகள் அடிப்படையில் கரைத்துறைப்பற்று பிரதேச செயலக அணி 169 புள்ளிகளைப் பெற்று சம்பியனாகியது.

முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

துணுக்காய் பிரதேச செயலக அணி 109 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக அணி 52 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும், வெலிஓயா பிரதேச செயலக அணி 44 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தையும், மாந்தைகிழக்கு பிரதேச செயலக அணி மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக அணிகள் 17 புள்ளிகளைப் பெற்று ஐந்தாம் இடத்தையும் பெற்றன. (23)



# சரஸ்வதி சனசமூக நிலையம் கிண்ணத்தைக் கைப்பற்றியது

யாழ்ப்பாணம், ஓக.16
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு உள்ளூர் ரீதியாக நடைபெற்ற வலைப்பந்தாட்டத் தொடரில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அணி கிண்ணம் வென்றது.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அணியை எதிர்த்து அரியாலை சனசமூக நிலைய அணி மோதியது. இதில் அரியாலை சனசமூக நிலைய அணி 15:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (23)




## தாச்சிச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக.16
யாழ்ப்பாண மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் 23ஆவது ஆண்டு மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி தாவடி காளி அம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நாளை 17ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 31ஆம் திகதி வரை பிற்பகல் 6.30 மணி தொடக்கம் 9 மணிவரை நடைபெறவுள்ளது என யாழ்ப்பாண மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கச் செயலர் அறிவித்துள்ளார்.

# கலைஒளி வி.க. இறுதிக்குத் தகுதி

அரியாலை சனசமூக நிலையத்தின் 70ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட அணிக்கு 9 வீரர்களை உள்ளடக்கிய 8 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்துத் துடுப்பாட்டச் சுற்றுத் தொடரில் இணுவில் கலைஒளி விளையாட்டுக் கழக அணி 50 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது.

அரியாலைசனசமூகநிலைய மைதானத்தில் நேற்றுமுன் தினம் புதன் கிழமை இடம் பெற்ற அரையிறுதியாட்டத்தில் இணுவில் கலை ஒளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பிளாக் கப்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இணுவில் கலைஒளி விளையாட்டுக்கழக அணி 8 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் நிரோ 22 ஓட்டங்களையும், ரகுபதி ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும், மோகன்ராஜ் 16 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் சயீவன், சுஜீவன் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பிளாக் கப்ஸ் விளையாட்டுக்கழக அணி 5.3 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 26 ஓட்டங்களை மட்டுமே பெற்று 50 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அணி சார்பில் பானு 8 ஓட்டங்களையும், சஜீவன் 6 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஜீவிதன் கோகுலன் ஆகியோர் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர். (23)



## சிவிலிம வி.காவை வீழ்த்தி

# டயமன்ஸ் வி.க. அணி இறுதிக்கு முன்னேற்றம்



யாழ்ப்பாணம்,ஓக.16
அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் வடமராட்சி ரீதியாக நடத்திய அமரர் கனகசபாபதி சத்தியநேசன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான அணிக்கு 7வீரர்கள் பங்கு பற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சிவிலிம விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரேம்குமார் 20 ஓட்டங்களையும், ராம்ஜீத்13 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கோகுலன், கதீஷ் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

50 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குக் களமிறங்கிய சிவிலிம விளையாட்டுக்கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 36 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதில் நிதர்சன்15 ஓட்டங்களையும், சகீஸ்னன் 11 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சாகித்தியன் 2 இலக்குகளை வீழ்த்தினர். (23)

# நான் ஓய்வு பெறவில்லை

## கெய்ல் அறிவிப்பு

ஒரு நாள் போட்டிகளில் இருந்து நான் இன்னமும் ஓய்வு பெறவில்லை என மேற்கிந்தியத்தீவுகளின் வீரர் கிறிஸ்கெயில் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடனான மூன்றாவது ஒருநாள் போட்டியே அவரின் இறுதிப்போட்டியாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு காணப்பட்ட நிலையிலே, நான் இன்னமும் ஓய்வை அறிவிக்கவில்லை. தொடர்ந்தும் விளையாடுவேன் என அவர் தெரிவித்தார். இதனை மேற்கிந்தியத்தீவுகளின் அணித் தலைவர் ஜேசன் ஹோல்டரும் உறுதி செய்தார்.

# நியூசிலாந்தின் பாதையில் இலங்கை




நேற்றுமுன்தினம் நியூசிலாந்து அணி 5 இலக்குகளை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்ற போது ரெய்லர் 86 ஓட்டங்களுடனும், சான்நெர் 8 ஓட்டங்களுடனும் நேற்றைய நாளுக்காகக் களமிறங்கினர். அணி நீண்ட நேரம் தாக்குப் பிடிக்கவில்லை. அணி 249 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது. பந்து வீச்சில் முதல் நாளில் தனஞ்செய 5 இலக்குகளையும், இரண்டாம் நாளில் லக்மல் அசத்தி 4 இலக்குகளைச் சாய்த்தார்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. அணித் தலைவர் கருணாரத்னே 39 ஓட்டங்களுடன் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்தார். பின்னர் இணைந்த மென்ரிஸ், மத்தியூஸ் இணை அணிக்கு ஓட்ட எண்ணிக்கையைக் குவித்தது. இருவரும் அரைச் சதம் கடந்து அசத்தினர். குசல் பெரேரா ஏமாற்றமளித்தார். அணி நேற்றைய நாள் முடிவில் 7 இலக்குகளை இழந்து 227 ஓட்டங்களைப் பெற்ற போது ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. களத்தில் டிக்வெல 39 ஓட்டங்களுடனும், லக்மல் 28 ஓட்டங்களுடனும் உள்ளனர்.




நியூசிலாந்துக்கு எதிர்ரான முதலாவது டெஸ்ட் போட்டியில் நேற்றைய இரண்டாம் நாளில் லக்மல் 4 இலக்குகளைச் சாய்த்தார். முதல் நாளில் அகில தனஞ்செய 5 இலக்குகளைச் சாய்திருந்தார். இருந்தும் நியூசிலாந்து பந்து வீச்சாளர்களும் சளைத்தவர்கள் இல்லை என்பதை அந்த அணியின் பந்து வீச்சாளர் பட்டேல் வெளிப்படுத்தியிருந்தார். அவர் இலங்கை அணியின் 5 இலக்குகளைச் சாய்த்து அகில தனஞ்செயவுக்கு சவால் விடுக்கும் வண்ணம் இருந்தார்.

நியூசிலாந்து அணி இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடர் காலியில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.




## கோக்லியின் அபார சதத்தால்

# தொடரைக் கைப்பற்றியது இந்திய அணி




மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் இந்தியஅணி6இலக்குகளால் வெற்றிபெற்று தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது. முதலாவது போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. பலத்த மழையால் பாதிக்கப்பட்ட ஆட்டம், 35 பந்துப்பரிமாற்றங்களாகக் குறைக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. மேற்கிந்தியத் தீவுகளின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான லூயிஸ், கெய்ல் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இருவருக்குமான இணைப்பாட்டமாக 115 ஓட்டங்கள் பகிரப்பட்டன. கெய்ல் 5 ஆறு ஓட்டங்கள், 8 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 72 ஓட்டங்களைப் பெற்றார். லூயிஸ் தனது அரைச் சதத்தைத் தவற விட்டு ஆட்டமிழந்தார். மத்திய, பின் வரிசை வீரர்கள் ஓரளவு சிறப்பிக்க அணி 35 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 240 ஓட்டங்களைப் பெற்றது.

இதன் பின்னர் டக்வோர்த் லூயிஸ் முறைப்படி இந்திய அணிக்கு 35 பந்துப் பரிமாற்றங்களுக்கு 255 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன. இந்திய அணியின் ஆரம்ப இணை 25 ஓட்டங்கள் அணி பெற்ற போது தனது முதலாவது இலக்கை பறிகொடுத்தது. பன்ட் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். அணித் தலைவர் கோக்லி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காது 14 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 114 ஓட்டங்களைக் குவித்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார். அணி 32.3 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. ஆட்டநாயகனாக இந்திய அணித் தலைவர் கோக்லி தெரிவு செய்யப்பட்டார்.

# பற்றீசியன்ஸ் வி.க. வெற்றி

யாழ்ப்பாணம்,ஓக.16

'ஏபி' பவுண்டேசன் நடத்தும் ஜப்னா ரி-20 துடுப்பாட்ட லீக் தொடரில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் பற்றீசியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விக்டோறி விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் பியற்றிக் 51 ஓட்டங்களையும், ரியூடர் 50 ஓட்டங்களையும், பத்மமுரளி 23 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் பிரணவன் 2 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குக் களமிறங்கிய விக்டோறி விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 115 ஓட்டங்களை மட்டும் பெற்றது. அணி சார்பில் சிந்துயன் 24 ஓட்டங்களையும், பிரசாந் 19 ஓட்டங்களையும், பிரணவன் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் லிவிங்ரன், பியற்றிக் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். (23)



# ஒவ்வொரு போட்டியும் முக்கியம்

## ரிஷப் பந்த் தெரிவிப்பு



ஒவ்வொரு போட்டியும் எனக்கு முக்கிய மானது என்று இந்திய அணியின் இளம் இலக்குக் காப்பாளர் ரிஷப் பந்த் தெரிவித் துள்ளார்.
மேற்கிந்தியத்தீவுகள் தொடருக்கான முழு நேர இலக்குக் காப்பாளராகச் செயற்படும் ரிஷப் பந்த், ஒவ்வொரு போட்டியும் மிக மிக முக்கியமானது என்று தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்; ஒவ்வொரு போட்டியும் எனக்கு மிகமிக முக் கியமானது. அடுத்த 6 மாதம் வரைதான் என்பதில்லை. ஒவ்வொரு நாளும் என்னு டைய வாழ்க்கை மிகமிக முக்கியமானது. நான் கிரிக்கெட் ரசிகராகவும், நல்ல மனிதரா கவும் முன்னேற்றம் அடைய விரும்புகிறேன். இதைத்தான் எதிர்பார்த்து முன்னேறிக் கொண்டிருக்கிறேன்- என்றார்.

**சிறுநீரகம் தேவை**
O+ இரத்த வகையைச் சேர்ந்த 30 வயதுடைய ஆண் ஒருவருக்கு அவசரமாக சிறுநீரகம் தேவைப்படுகின்றது.
077 413 8877, 077 971 1498

**வேலையாள் தேவை**
தோட்ட வேலைக்கு ஆள் தேவை.
இடம் : இயக்கச்சி
076 645 8087

**வீடு வாடகைக்கு**
யாழ்.நாவலர் வீதியில் ( Town அருகில்) மேல்மாடி வீடு சிறு குடும்பம் ஒன்றுக்கு வாடகைக்கு உண்டு. 2 அல்லது 3 பேர் கொண்ட குடும்பம் விரும்பத்தக்கது.
075 049 1563

கருத்தரங்குத் தொடர்-(04)
**SLAS- (Open/ Ltd)**
♦சனிக்கிழமை :- 9Am-3.30Pm 17.08.2019
♦பொதுவிவேகம் :- P.கமல்தாசன் SLPS
♦முகாமை விவேகம்:-S.தினேஸ் SLTES
♦பொது நிர்வாகம் :- K.தெய்வேந்திரம் SLAS
✱ முற்றிலும் எதிர்பார்க்கை புதிய மாற்றங்களுடன்
**நாவலர் கல்வி நிறுவனம்**
ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம்.
077 111 6739, 076 166 1986
திரைதில்
NOTE:-ஞாயிறு தினங்கள் மட்டும் NEC பெருமாள் கோவில் எமது வகுப்புக்கள் இடம்பெறும்.




## பாகிஸ்தானுக்கு இலங்கை அணி வந்தால் சிறந்த பாதுகாப்பு வழங்குவோம்

### பாகிஸ்தான் அறிவிப்பு

பாகிஸ்தானுக்கு- இலங்கை அணி சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் பட்சத்தில் வெளிநாட்டுத் தலைவர்களுக்கு வழங்கு கின்ற பாதுகாப்பை இலங்கை அணிக்கு வழங்குவதற்கு அந்த நாட்டு அதிகாரிகள் முன்வந்துள்ளனர் என்று இலங்கை கிரிக் கெட் கட்டுப்பாட்டுச்சபையின் செயலர் மொகான் டி சில்வா தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்: இலங்கை அணிக் கான பாதுகாப்பு ஏற்பா டுகள் குறித்து முழு மையான தகவல் களை அவர்கள் எங்க ளுக்கு வழங்கினார் கள். அது குறித்து நாங்கள் மகிழ்ச்சிய டைந்துள்ளோம்.
நாங்கள் எங்கள் அறிக்கையை இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை யின் நிறைவேற்றுக் குழுவுக்கு வழங்கு வோம். அவர்கள் அத னடிப்படையில் முடி வெடுப் பார்கள் - என் றார்.

போட்டிப்பரீட்சை விசேட வகுப்புக்கள்
**SLAS**
பிரதி சனி , ஞாயிறு 9.00 - 3.30
கணக்காளர் சேவை
பிரதி சனி , ஞாயிறு 9.00 - 4.00
எமது வழமையான அனுபவ வளவாளர் களினால் அனைத்து வினாத்தாள்களுக்குமான வழிகாட்டல்
தொடர்புகளுக்கு
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ் ஆஸ்பத்திரி முன் வீதியில் பஸ் நிலையத் திலிருந்து 100m தூரத்தில்)

**பணிப்பெண் தேவை**
சிங்கப்பூரில் உள்ள சிறிய தமிழ் குடும்பம் ஒன்றிற்கு 1 1/2 வயதுடைய குழந்தை பராமரிக்க வீட்டுச் சமையல் வேலை செய்வதற்கு 25 வயது - 35 வயதிற்கு உட்பட்ட பெண் வேலையாள் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். விமான டிக்கற் இலவசம்.
077 419 7258,077 619 2311

**YOGIS**
Institute of Beauty Therapy, Hair Dressing & Home Science (Pvt)Ltd
குறுகிய கால அழகுக்கலை பயிற்சிகள். கேக் ஐசிங் பயிற்சிகள் **புதிய வகுப்புக்கள் 17.08.2019** (சனிக்கிழமை) ஆரம்பமாகவுள்ளன.
சேரவிரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
மகளிருக்கான Gym Exercise நடைபெறுகின்றது.
**75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
077 716 4923/ 021 222 2796

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
➢ அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.
www.ambafrancelk.org

021 222 8093 61. கச்சேரி-நல்லூர் வீதி. யாழ்ப்பாணம்.




# சின்சினாட்டி மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடர்; ஜோகோவிச் அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்

அமெரிக்கா சின்சினாட்டி மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரில் நோவக் ஜோகோவிச் தனது முதல் வெற்றியை பதிவு செய்து அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.
அமெரிக்காவின் சின்சினாட்டி நகரில் சின்சினாட்டி மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதில், முன்னணி வீரர்கள், வீராங்கனைகள் பங்குபற்றி விளையாடி வருகின்றனர்.
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் நட்சத்திர வீரரான நோவக் ஜோகோவிச் அமெரிக்கா நாட்டின் சாம் குவெரேவை எதிர்கொண்டார். பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 7:5, 6:1 என்ற செற் கணக்கில் ஜோகோவிச் வெற்றி பெற்றார்.
ஜோகோவிச் இதுவரை 16 முறை கிராண்ட் ஸ்லாம் பட்டத்தையும் 33 முறை மாஸ்டர்ஸ் பட்டத்தையும் வென்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. கடந்த மாதம் நடைபெற்ற விம்பிள் டன் ரென்னிஸ் தொடரின் இறுதிப்போட்டியில் 20 முறை கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்ற ரோஜர் பெடரரை தோற்கடித்து கிண்ணம் வென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# அதிசயம் நிகழும் என எதிர்பார்க்காதீர்கள்

## ஆர்ச்சர் தெரிவிப்பு

இன்று லோர்ட்ஸ் மைதானத்தில் இடம்பெ றும் இங்கிலாந்து - ஆஸ்திரேலியா அணிக ளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அறிமுகமாக இருக்கும் ஜாப்ரா ஆர்ச்சர், எந்த அற்புதங்களும் நிகழ்த்துவேன் என்று எதிர்பார்க்காதீர்கள் எனத் தெரிவித்துள்ளார்.
இங்கிலாந்து - ஆஸ்தி ரேலியா இடையிலான ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. முதல் டெஸ்டில் ஆஸ்தி ரேலியா அணி அபார வெற்றி பெற்றது. இங்கி லாந்து அணியின் முன் னணி வேகப்பந்து வீச் சாளர் ஜேம்ஸ் ஆண்டர் சன் நான்கு பந்துப்பரி மாற்றங்கள் பந்து வீசிய நிலையில் காயம் கார ணமாக வெளியேறி னார்.
உலகக் கிண்ணத்தில் சிறப்பாக பந்து வீசிய ஜாப்ரா ஆர்சர் காயத் தால் முதல் டெஸ்ட் போட்டியில் விளையாட வில்லை. இன்று ஆரம்ப மாகும் இரண்டாவது டெஸ்டில் ஆர்ச்சர் அறி முகமாகிறார். இவர் ஆஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்களை ஆட்டம் காண வைப் பார் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்த நிலை யில் எந்தவித அதிசயத் தையும் எதிர்பார்க்காதீர் கள் என்று ஆர்ச்சர் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்: நான் டெஸ்ட் போட்டிக்கான சிவப்பு பந்தில் அதிகமான போட்டியில் விளையாடவில்லை என்ற விமர்சனம் வைக்கப்படுகிறது. ஆனால், நான் வெள்ளைப் பந்தில் விளை யாடியதை விட சிவப்பு பந்தில்தான் அதிக மாக விளையாடியுள்ளேன்.
என்னிடமிருந்து எந்த அதிசயத்தையும் எதிர் பார்க்காதீர்கள் என்பதை நான் திட்டவட்ட மாக கூறுவேன். என்னுடைய அறிமுக டெஸ்ட் மிக விரைவில் வந்துள்ளது. ஆடுக ளத்தில் களமிறங்கி என்னால் என்ன முடி யுமோ, அதை செய்ய வேண்டும். அதிசயம் நடக்கும் வகையில் என்னால் பயிற்சி மேற் கொள்ள இயலாது. அப்படி நடக்க முடியற்சி செய்வேன்.
ஆனால், அதைப்பற்றி சிந்திக்க மாட்டேன். என்னுடைய சிறந்த ஆட்டத்தை வெளிப்ப டுத்த முயற்சி செய்வேன். என்னுடைய சிறந்த ஆட்டத்தை மட்டும்தான் வெளிப் படுத்த முடியும் - என்றார்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.08.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.